சௌபாக்கியம்

மலர் 16 | சார்வரிஸூ ஆவணிமீ | இதழ் 8

வள்ளுவரும் வனிதையரும்

டி. எஸ். ஜானகி

தமிழ் கூறும் நன்னிலத்தில் தோன்றி உல கெங்கும் புகழ் மணம் வீசித் திகழ்பவர் திரு வள்ளுவர். இதுபற்றியே "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனப்பாட்டிசைத்தார் பாரதியார். திரு வள்ளுவர் தந்த திருக்குறள் தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும், அழியாப் புகழை நல்கி மாட்சி யுறத்திகழ்கின்றது. வேதக்கருத்து முழுவதும் திருக்குறளில் அமைந்திருத்தலின் கற்றோர் இதைத் தமிழ் வேதம் எனப் போற்றுகின்றனர்.

வள்ளுவரும் வனிதையரும்

பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய இக்குணங்கள் இருத்தல் வேண்டும் என அற நூல்கள் கூறுகின்றன. இவற்றைப் பெற் றிருப்பவரே பெண்களில் உயர்ந்தவர் என உலகம் கூறுகின்றது. ஆனால் இவைகள் மங்கையர்க்கு இயற்கைப்பண்புகளா என வின வினால், அல்ல என்ற விடைதான் நமக்குக் கிடைக்கும். ஒரு பொருளைவிட்டுப் பிரிக்க முடியாத பண்பு எதுவோ அதுதான் அப் பொருளுக்கு இயற்கையாகும். பாகற்காயை விட்டுப் பிரிக்க முடியாத கசப்பைப் பாருங்கள். எவ்விதம் பாகலுக்குக் கசப்பு இயற்கையாக அமைந்துள்ளதோ அவ்விதமே பெண்ணுலகத் திற்கும் இயற்கையாக அமைந்த பண்புகள் சில உண்டு.

பெரும் பொருள் சம்பாதிக்கிற ஆடவர் ஒருவர், தம் மேலதிகாரி சில கடுஞ் சொற்களைக் கூறியதும் அவற்றைப் பொறுக்கலாற்றாது உடனே தம் வேலையை விட்டுவிட நினைக்கிறார். உத்தியோ கத்தை உடனே விடுவதால் தமக்கு ஏற்படும் துன்பங்கள் பல அவர் முன் தோன்றினும், அவற்றைக் குறித்துப் பொறுமையுடன் சிந்தித்துப் பார்க்க அவர் மனம் அப்போது இடம் தருவ தில்லை. இதை நன்றாக மனத்திலிருத்திக் கொண்டு நம் பெண் மகளிரிடம் செல்வோம்.

தெய்வ குணங்கள்

நம் மகளிர், கணவர், குடும்பத்தார், குழந்தை கள் முதலியவர்கள் கொடுக்கும் தொல்லை களுக்கு மனம்பதறி காரியம் செய்யத் தொடங்கு வரேல், ஒரு குடும்பமேனும் சீரிய முறையில் நடைபெறுமா? மற்றும் 'கரு'த்தாங்கல், கரு உயிர்த்தல், முதலியவற்றில் நம் அருமை மகளிர் படும் துன்பங்கள் அளவுடையனவோ" எத்தெய்வக் குணத்தைக் கொண்டு இப் பொறுப்புக்களை மங்கையர் தாங்கி நிற்கின்றனர். சிந்தித்துப் பார்த்தால், அறிவுடையோர் எண்ண மும் ஆராய்ச்சி செய்யும்! அது சாமான்ய மக்க ளால் மேற்கொள்ளக்கூடிய பண்பன்று! முனி வரும் சிலபோது கைவிடக்கூடியது. அச்சீரிய குணத்தைக் கைவிடுவதால் தம் தவமுழுவதும் அழியுமென அவர்கள் உணரினும், அதை நழுவவிடாமல் பற்றுதற்கு அம்முனிவர்க்கும்

இயலுவதில்லை! சத்தியம், சீலம், முதலிய உயர் குணங்கள் பல ஒருவரிடம் தங்கி நிலைபெறுவதற்கு ஊன்று கோலாயிருப்பது, பாண்டவர் போன்ற பெரியார் புகழை நிலை நிறுத்துவது, சீரியர் பலரால் புகழ்ந்து போற்றப்படுகின்ற **பொறுமை** என்பதே ஆகும்! பலராலும் கைக் கொள்ள முடியாத அப்பெருங்குணம் நம் மகளிரிடம் அடிமை பூண்டொழுகுகின்றது. இன்றேல் நம் சகோதரிகள் பல கடினகாரியங்களையும் மிக்க பொறுமையுடன் தாங்கி முக மலர்ச்சியுடன் காலந்தள்ள இயலாது. அன்றியும் உலகம் உயர் நிலையில் நடைபெறவும் முடியாது. இதனால் உலகம் உயர்முறையில் செல்லுவதற்கும் பொறுமையே காரணம் என்றும் அப் பொறுமையைக் கொள்கலனாக கொள்ளுவதற்குப் பெண் மகளிரே காரணம் என்றும் தெளிவாகத் தெரியவரும்.

தம் மக்களுக்காக இரவு விழித்தல், பத்தியமிருத்தல், அவர்களுக்கேற்ற அரிய உணவு, உடைகளை ஈதல், தம் நலத்தை இழந்தேனும் கணவரைப் பேணல், கணவன், மக்கள் முதலியோர் துன்புறும்போது அத்துன்பங்கள் தம்மைச் சார்ந்தனவேயென உள்ளூர நினைத்துப் பாடுபடல், குடும்பத்திற்குப் புகழுண்டாக்க முயலல், முதலிய தெய்வ குணங்களுக்கு என்ன பெயரிடலாம்?

தியாகம்

ஒருவர் எத்தனை பிறவிகளில் பண்பட்டிருப்பின் இவ்வுயர் குணங்கள் அவருக்கு அமையும்" இதில் இன்னும் ஒரு அதிசயம் உண்டு. மகளிர் "பிறருக்கு வந்ததை நாம் அனுபவிக்க நேர்ந்ததே?" என்னும் வெறுப்புடன் இத்துன்பங்களை மேற்கொள்ளுகின்றனரா? இல்லை! காய்தல், உவத்தலின்றி நோக்குவார்க்கு இவை புலனாகாமலிரா.

இவை யாவும் தன்னலம் பாராத் தகைமையானப் பண்புகளல்லவா ? இதனைத்தானே சிறந்த குணம் என உலகம் புகழுகிறது. இதற்குத் தானே **தியாகம்** எனப் பேரமைந்துளளது.

இவற்றால் நம் சீரிய மங்கையர்க்கு இயற்கையாய் அமைந்த குணங்கள் பொறுமையும், தியாகமும் என வெளிப்படுகின்றன அல்லவா? ஆற்றொணாப் பல துன்பங்களையும் ஆற்றியிருந்த **சந்திரமதி**யைப் **பொறுமை**க்கும் தன்னலஞ்சிறிதும் கருதாது வறியோர்க்கு உண்டி உதவுதலையே இன்பமெனக்கருதிய அருமை மணிமேகலையாரைத் **தியாகத்**திற்கும் சான்று கூறுதலே மிகவும் பொருத்தமுடையதாகும்.

திருக்குறளின் முப்பாலினும் அறத்துப்பாலே கண்ணியமுடையது. அதில் இல்லறவியலே மேன்மையுற்றது. அவ்வில்லற வியலிலும் சில அதிகாரங்களே குறளுக்கு உயர்நிலையாய் உள்ளன. அவற்றுள் உயிர்க்குயிராய் ஒளிரும் அதிகாரமும் உளது.

வாழ்க்கைத் துணை நலம்

இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு ஆகிய மூன்றுமே இல்லறத்திற்கு உயிர் நிலைகளாகும். ஆயினும் இவை மூன்றிற்கும் உள் ஒளியாய் உயிர்க்குயிராய் நின்று மிளிர்வது ஒன்றுளது. அதுவே நடுநிலைத் தீவகம் போன்று இரண்டிற்கும் இடையே நின்று இரண்டினையும் பண்புறச் செய்கின்றது. இன்னும் மற்றப் பொருள் இன்பம் முதலியவற்றை ஒளிபெறச் செய்வதும் அதுவே. அதனைத் தான் **வாழ்க்கைத் துணை நலம்** என்போம்.

இல்வாழ்க்கையை நடத்தும் ஓர்ஆண்மகனுக்குத் துணையாக அமையும் பெண்மணக்கு வாழ்க்கைத் துணை எனப் பெயரிடலே போதியதாகும். ஆனால் வள்ளுவப் பெருந்தகையோ அங்ஙனம் பெயரிடாது வாழ்க்கைத் துணை நலம் எனப் பெயரமைத்துள்ளார். இதனால் இல்லறத் துணைவியாகிய பெண்மணிக்கு நற்குண நற்செய்கைகளும் பொருந்தியிருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து. இச் சீரிய குணச் செயல்களே உயரிய பொறுப்புகளை ஏற்று உண்மை வழியில் நடக்க இடந்தரும் அல்லவா ? இப்பொறுப்பினிடத்திலேயே இல்லறத்திற்கு வேண்டிய யாவும் அடங்கியிருக்கின்றன எனக் கூறல் மிகையாகாது.

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்னும் குறட்பாக்களைப் பாருங்கள்!

தவப்பேறு

இல்லறத்திற்குத் தக்க நற்குணச் செய்கைகளை மேற்கொள்ளல், வரவிற்குத் தக்க வாழ்க்கையை நடாத்தல், உண்டி உடைகளாலும் பெண்மைக்குரிய சீரிய குணங்களாலும் தம்மைக் காத்துக் கொள்ளல், தம்மைக் கொண்ட கணவர் கொடியவராயினும் தம் பொறுமையினாலும் நற்குணங்களினாலும் சான்றோர் புகழிற்கும், தெய்வ அருளிற்கும் பாத்திரமாகுமாறு அவரைத் திருத்திக் காதத்ல்; குடும்பத்திற்குள்ள புகழை மென்மேலும் வளர்த்தல் தம் கடமைகளில் மறதியும் சோர்வும் இல்லாதிருத்தல் முதலிய சீரிய பொறுப்புக்களை நம் வள்ளுவப் பெரியார் அருங்குண அரிவையர் மேல் ஏற்றியுள்ளார். இத்தகைய பெண்மணிகளும், அவர்தம் நற்பண்புகளுமே இல்லறத்திற்கு மங்கலப் பொருள்கள் என்கின்றார். இக்கடினமான பாரங்களைத் தெய்வப் புலவர் நம் பெண்களின் மேல் ஏற்றியதற்குக் காரணம் என்ன? மங்கையர் அவற்றைத் தாங்கும் பெருந்தகை வாய்ந்த பண்புடையாளர் என்னும் கருத்தினாலன்றோ? இதன்றோ நம் தமிழ்நாடும், நம் பெண்மணிகளும் செய்த தவப் பேறு!

(இது இலக்கியக் கண்ணோட்டத்தில் எழுதப்பெற்ற சிறு கட்டுரை, முழுவாழ்க்கை வரலாறு அன்று.)

கவியரசி சரோஜினி தேவி

நிலக்கோட்டை சங்கரசுப்பு

காந்தியடிகளால் 'இந்தியாவின் வானம்பாடி' (Nightingale of India) என்று பாராட்டப்பெற்ற கவியரசி சரோஜினி தேவியார் ஒரு பிறவிக் கவிஞர். எண்பது ஆண்டுகட்கு முன்னர் ஐதராபாத்தில் பிறந்த அவர் தமது பதின்மூன்றும் வயதில் 'மெட்ரிக்குலேஷன்' தேர்வில் வெற்றி பெற்ருர். அவ்விளம் பருவத்திலேயே ஆங்கிலக் கவிதைகளில் அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்து வந்தது. 1,300 வரிகளில் ஏரியுவதி (Lady of the lake) என்ற ஆங்கிலக் கவிதை ஒன்றையும் 2,000 வரிகளில் ஆங்கில நாடகம் ஒன்றையும் எழுதினர்!

மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்று மன்னர் கல்லூரியிலும் கேம்பிரிஜ் கல்லூரியிலும் பயின்ருர். ஐரோப்பியக் கவிஞர் பலரின் கவிதைகளைப் படித்துச் சுவைத்த கவியரசியார் ஆங்கிலத்தில் கற்பனை வளமும் கருத்துச் செறிவும்கொண்ட கவிதைகளை அற்புதமாகப் பாடினர். அவரது கவிதைகள், ஆங்கிலக் கவிஞர் ஸர். வால்டர் ஸ்காட் என்பவரின் நடையைப் போன்று அழகாகவும் இனிமையாகவும் அமைந்திருந்தன. அந்நாளின் ஆங்கிலக் கவிஞர்களான சர் எட்மண்டு கோஸ், ஆர்தர் சைமன்ஸ் போன்றோர் கவியரசியாரின் கவிதைகளைப் படித்து, டென்னிஸன், ஷெல்லி போன்ற புகழ்வாய்ந்த ஆங்கிலக் கவிஞர்களின் படைப்புகளைப் போன்று சிறப்புடன் விளங்குவதாகப் பாராட்டி, ஊக்குவித்தனர்.

கவியரசியார் கவிதைகளைப் படைப்பதற்கென்றே பம்பாய் நகரத்தில் சில காலம் தங்கியிருந்தார். அங்கே "தாஜ் மஹால்" உணவு விடுதியில் அவர் செல்வ மகளிராக—'ஓர் அரசியைப் போன்றே'—உலவினுர். அக்காலத்தில் அவர் மூன்று கவிதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டார். காலப் பறவை (The Bird of Time), சிதைந்த இறகுகள் (The Broken Wings), பொன்னிலை வாயில் (Golden Thres-hold) ஆகிய கலைமணம் கமழும் மூன்று கவிதை மலர்களும் ஆங்கிலச் சமுதாயத்தின் உள்ளத்தைக் கவர்ந்தன.

இயற்கையாகவே அவருக்கு அமைந்த இரக்க உணர்வால் சமுதாயத் தொண்டு புரிந்துவந்தார். மக்களிடையே கல்விநிலை உயர, குறிப்பாக பெண் கல்வி உயரப் பாடுபட்டார். ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் நாடு சீரழிவது கண்டு உள்ளங் கொதித்தார். "வீடு தீப்பற்றி எரிகையில் கவிஞன் பாடுவதை நிறுத்திவிட்டு நெருப்பணைக்கத் தண்ணீர் கொண்டுவரச் செல்லவேண்டும்" என்று கவியரசர் தாகூர் கூறிய பொன்மொழிகள் அவரது உள்ளத்தில் புரட்சிக் கனலை எழுப்பின. கவினுறு செல்வ வாழ்வைத் துறந்து, காந்தியடிகளின் அறப்போர் அணியில் தாமும் ஒருவராகச் சேர்ந்துகொண்டார். நாட்டின் விடுதலைக்காக, கவிபாடுவதை விடுத்துக் கரடுமுரடான அரசியலில் அடியெடுத்து வைத்தார். அவரது வாழ்வின் புரட்சிகரமான மாறுதலைக் கண்டு வியந்த ஒருவர் "அம்மா, பொன்மயமான கற்பனைக் கோபுரங்களில் ஏறி உலவுவதைவிட்டு இந்த அரசியல் சந்தைக்குள்ளே ஏன் நுழைந்தாய்? உனது புல்லாங்குழலை எறிந்துவிட்டு, யாழின் இசையை மறந்துவிட்டு ஏன் இந்தக் கூச்சலில் நுழைந்தாய்?" என்று கேட்டதற்கு, கவியரசியார் "பொன்மயமான கற்பனைக்

கோபுரத்தில் ஏறி உலவுவது மட்டும் கவியின் வேலையன்று. சந்தைக் கடைப் புழுதியில் உலவி மக்களின் துன்பங்களில் கலந்துகொள்ள வேண்டியதும் கவியின் முக்கியக் கடமையே!" என்று கூறினாராம்.

சரோஜினி தேவியார் தமக்கு இருந்த கவிதையாற்றலையும் சற்பனைத் திறனையும் அரசியலிற் பயன்படுத்திக்கொண்டார். அவரது கவிதைகளைப் போலவே சொற்பொழிவுகளும் கவர்ச்சிகரமாக விளங்கின.

ஒருமுறை சரோஜினி தேவியார் ஒரு பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கச் சென்றிருந்தார். அப்பொழுது இரவு நேரம். கூட்டத்திற்குள் அவர் நுழைந்ததும் மின்சாரத்தில் ஏதோ பழுது ஏற்பட்டு விளக்குகள் அணைந்துவிட்டன. உடனே இருளையும் பொருட்படுத்தாது நேராக மேடைமீது ஏறினார். அங்கிருந்தவாறே சொற்பொழிவாற்றத் தொடங்கினார். "விளக்கு விளக்கு" என்று மக்கள் கூச்சலிட்டனர். விளக்குகள் எரியத் தொடங்கின. உடனே கவியரசியார் "லைட்லைட்" என்று தொடங்கி ஆங்கிலத்தில் ஓர் அழகிய பாடலை அபிநயத்துடன் பாடினார். மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்!

மற்றொருமுறை இலட்சுமணபுரியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் சரோஜினி தேவியாரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். இலட்சுமணபுரியை ஆங்கிலத்தில் லக்நௌ (Lucknow) என்று கூறுவர். அப்பொழுது கவியரசியார் 'லக்நௌ'வில் கூடியுள்ள நமக்கு 'லக்நௌ' (Luck Now—அதிர்ஷ்டம் இப்பொழுதுதான்) என்று ஆங்கிலத்தில் சிலேடையும நகைச்சுவையும் ததும்பப் பேசினார்.

சொற்பொழிவுகள் மட்டுமன்றி அவரது உரையாடலும் மிக்க சிறப்பாக இருக்கும். எதைப் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் நகைச்சுவை கலந்து இனிமையாகப் பேசுந்திறனுடையவர்.

நமது கவியரசியார் 'உலக எழுத்தாளர் நிறுவனத்'தின் இந்தியக் கிளையில் சிறந்த தொண்டாற்றியுள்ளார். 'இலண்டன் மன்னர் இலக்கியக் கழக' உறுப்பினராகும் (Fellow of the Royal Society) பேறு பெற்றார். 1938-இல் அலகாபாத் பல்கலைக் கழகம் இவருக்கு இலக்கியத் துறையில் பேராசிரியர் பட்டம் வழங்கிச் சிறப்பளித்தது.

நாடு விடுதலை பெற்ற பின்னர் 1947-இல் ஐக்கிய மாகாண கவர்னராகப் பதவி ஏற்ற பொழுது நமது கவியரசியார் கூறினர்:—"விருப்பம் போல் பறந்து திரிய விரும்பும் காட்டுப் பறவையைக் கூட்டில் அடைத்துவிட்டீர்களே!" என்று. ஆனால் அந்தப் பறவை—இந்தியாவின் வானம்பாடி—இலட்சுமணபுரியில் 1949-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாள் இப் பூவுலகை விட்டுப் பறந்தோடிவிட்டது! இலக்கிய அரசி—அரசியல் மேதை—இந்தியப் பெண்ணினத்தின் தலைவி—தமது எழுபதாவது வயதில் மாரடைப்பின் காரணமாக இறக்கை யெய்தினார்.

கவியாகப் பிறந்து, காலச்சுழற்சியினால் அரசியல் தலைவியாகி இந்திய அரசியலுக்கே கலை அழகு ஊட்டினார் சரோஜினி தேவியார். இப்பொழுது அவரது பாடல்களைத் திரட்டி 'Sceptred Flute' என்னும் பெயரில் ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். வாழ்க அவரது புகழ்.

குடியாளும் அரசினிலே?

பி. வி. கிரி

கொடி யேந்தும் வீரர் பலர்
கோஷமிட்டுச் சென்றிடுவோம்
இடிபோன்ற குண்டோசை
எதிரொலிக்கும் கோட்டையிலே!

அடிமை வாழ்வு வாழ்ந்தகாலம்
அன்னிய ரோடொழிந்ததுவே
குடியாளும் அரசு இன்றும்
குதூகல நன்னாளாம்!

கல்லாமை போக்கிட நாம்
கல்வியைப் பரப்பிடுவோம்
இல்லாமை இறந்திடவே
ஈகையை வளர்த்திடுவோம்!

நல்லறமும் நற்பண்பும்
நலமிக்க பொதுத் தொண்டும்
இல்லறந்தான் சிறந்திடவே
இத்தலத்தில் வாழ்ந்திடுவோம்!

தித்திக்கும் தீந்தமிழில்
திங்கள் வார ஏடு வளர்ப்போம்
எத்திக்கும் தமிழர் பெருமை
எதிரொலிக்கச் செய்திடுவோம்!

சத்தியம் அகிம்சையுடன்
சகோதரத்துவம் கொண்டிடுவோம்
இத்தலத்தில் மாண்பு கொண்டு
இன்பமாக வாழ்ந்திடுவோம்!

பரிசு பெற்றவை

ஜனவரி மாதம், 1960

"காயும் கனியும்"
திரு. குமாரசாமி

"பெண்மை பேசிற்று"
திரு. சுப்பையா

பெப்ரவரி மாதம், 1960

"அவன் சக்தி"
திருமதி பிரேமா

"முழங்கை வழி வார"
திரு. A. V. வேதரத்னம்

மார்ச்சு மாதம், 1960

"வருந்தாதே திருந்து"
திரு. M. S. காந்தன்

"பெண்ணையீன்றதால்
அன்னைக்கு ஆவ தன்"
திருமதி C. A. முத்துவடிவு

ஏப்ரல் மாதம், 1960

"எண்ணம் பலித்தது"
திருமதி அரு. காந்தி

"பல்கலைக் கழகம்"
திருமதி V. லக்ஷ்மி

மே மாதம், 1960

"மூவரில் மூத்தவள்"
திருமதி த. சானகி

"இலட்சிய மனைவி"
திரு K. V. சுப்பாராவ்



அமெரிக்கக் காந்தி

மாயூரம் லூ. ஜேம்ஸ்

தலைப்பைக் கண்ணுறும் எவரும், அமெரிக்காவில் எந்தக் காந்தி, எப்பொழுது பிறந்தார்? என்று எண்ணுதல் இயல்பே. ஆனால் அது உண்மையேயன்றி, ஒரு கட்டுரையல்ல. இந்தியர்களால் தேசப்பிதாவாகக் கொண்டாடப்படும் மகாத்மா காந்தி நெருக்கடியான நேரத்தில் நாட்டிற்குத் தலைமை தாங்கி, போராட்டங்கள் பல புரிந்து, சுதந்திரம் வாங்கித் தந்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக உண்மையாகப் பாடுபட்டார். தீண்டாமையைத் தீர்த்தார். அதே போல் காந்திக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்காவில் பிறந்த அந்தக் காந்தியும் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாக்கப் பெரிதும் பாடுபட்டார். அமெரிக்கர்களிடையே ஒற்றுமை நிலவ உழைத்தார்; தீண்டாமையுடன் கூடிய அடிமை வியாபாரத்தை அறவே ஒழித்தார். இவற்றையெல்லாம் விட அவர்களிடையே நிலவும் அதிவிசேடமான ஒரு ஒற்றுமை, நாட்டுக்குழைத்த அந்த நல்லோர் இருவரும் இயற்கை மரணம் எய்தாமல் வெறியரால் சுட்டுக்கொல்லப்பட்டது.

காந்திஜியுடன் ஒப்பு நோக்கத்தக்க அந்த அமெரிக்கப் பெரியார் வேறு யாருமல்ல; ஏழைக் குடியில் பிறந்து அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்த ஆபிரகாம்லிங்கன் தான்.

ஆபிரகாம் லிங்கன் 1809-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ஆம் நாள் கென்டக்கி மாகாணத்திலுள்ள விக்டோரியா டவுனில் பிறந்தார். லிங்கனின் தந்தை எழுதப் படிக்க அறியாதவர். குடும்ப வருவாய்க்காக உழைப்பதே என்றும் அவருடைய இலட்சியமாய் அமைந்திருந்தது. அந்நிலையில் லிங்கனின் அன்னைதான் எழுத்தறிவிக்கும் இறைவனாக மாறினார். ஆனால் லிங்கனின் துரதிர்ஷ்டம், அன்னையார் லிங்கனின் ஏழாவது வயதில் இறந்தார்.

லிங்கனின் பள்ளி வாழ்வு ஒரு ஆண்டுக்கு மேல் நீடிக்கவில்லை, என்றாலும் கல்வியை மறக்கவில்லை. அவர் தானாகப் படிக்கக் கற்றுக் கொண்டார்; கணக்குகளைத் தெரிந்து கொண்டார், ஐம்பது மைல்களுக்குட்பட்ட சுற்றளவில் கிடைக்கக் கூடிய நல்ல புத்தகங்கள் அத்தனையும் படித்திருக்கிறேன் என்று அவரே ஒரு முறை ஒரு நண்பனிடம் சொல்லியிருக்கிறார் என்றால், அவருடைய சுயமுயற்சியைத் தெரிந்து கொள்ளுங்கள்..!

லிங்கன் இயற்கையாகவே வேடிக்கையாகப் பேசும் திறன் படைத்தவர். கதை சொல்லுவதில் நிபுணர்; சமயோசித புத்தியுடன், நீதியும், நேர்மையும் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர். இப்பண்புகள் எல்லாமாகச் சேர்ந்து பாமர மக்களின் இதயத்திலே அவருக்கு நல்ல மதிப்பு ஏற்படும்படிச் செய்தது

ஒரு முறை நியூ ஆர்லியன்சுக்கு வியாபார நிமித்தம் சென்றபொழுது நீகிரோக்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, அதிகத் தொகை கொடுக்கும் செல்வர்களுக்கு அடிமைகளாக விற்கப்படும் காட்சியைக் கண்டார். அஃது, இளசிய அவர் இதயத்திலே ஒரு வேதனையை உண்டு பண்ணியது. சந்தர்ப்பம் கிட்டும்போது அடிமை

வியாபாரத்தை எதிர்த்துப் போரிடவேண்டும் என்று மனதிற்குள் தீர்மானித்துக்கொண்டார், ஆனால் தம்முடைய பெயர் 'பெரிய விடுதலை வீரர்' என்ற விருதுடன், பின்னால் சரித்திரத்தில் நிலவுமென அவர் கனவு கூடக் கண்டதில்லை.

அவ்வப்பொழுது கிடைக்கும் பலவிதமான வேலைகளைச் செய்துகொண்டே, ஓய்வு நேரத்தில் ஆங்கில இலக்கணமும், சட்டமும் கற்றார். 1831-ல் முதன் முறையாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து மூன்று முறைகள் அவரே மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். லிங்கனின் இருபத்தேழாம் வயதில் வக்கீல் தொழிலுக்கு அனுமதி தரப்பட்டது. அவர் சட்டமன்ற உறுப்பினாக பதவி வகித்த எட்டாண்டு காலமும் வக்கீல் தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டார். நாட்டுத் தொண்டும், வக்கீல் தொழிலும் அவரை வெகு சீக்கிரத்தில் மக்களிடத்தில் பிரபலமாக்கின.

1860 நவம்பர் திங்கள் 6-ஆம் நாள் லிங்கன் ஐக்கிய அமெரிக்க நாட்டின் பதினாறாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தச் சமயம், அடிமைகள் விஷயமாக வட ராஜ்யங்களுக்கும், தென் ராஜ்யங்களுக்கும் கடுமையான மனக்கசப்பு நிலவிவந்தது. அதன் காரணமாக லிங்கன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறாவது மாதத்தில் ஏழு ராஜ்யங்கள் ஐக்கிய அமெரிக்க அரசிலிருந்து விலகி, மாற்று ஐக்கிய அரசு ஒன்றை ஸ்தாபித்தது. ஜெப்பர்சன் டேவிட் என்பவரைத் தன் தலைவராகவும் தேர்ந்தெடுத்தது.

1861, எப்ரல் 12-ம் நாள் அமெரிக்க ஐக்கிய அரசின்மீது, மாற்று ஐக்கிய அரசு நிறுவியவர்கள் போர் தொடங்கினார்கள். போர் துவர்க்கத்தில் மாற்று ஐக்கியததினருக்கே வெற்றி கிடைத்தது. என்றாலும் லிங்கன் சித்தத்தைத் தளரவிடாமல் தொடர்ந்து போராடினார், நான்கு ஆண்டு முடிவில், தனது போராட்டத்தில் வெற்றியைக் கண்டார், லிங்கன். அமெரிக்க ஐக்கிய அரசின் தலைவராக, இரண்டாவது முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார் லிங்கன். 1865 ஜனவரியில் காங்கிரஸ் கூடியபோது, லிங்கன் முன்னதாகவே பிரகடனப்படுத்திய அடிமைத் தடுப்பு மசோதாவும் அமெரிக்க அரசியல் அமைப்பில் ஒரு சட்டமாகச் சேர்க்கப்பட்டது. அது நாட்டின் எந்த இடத்திலும் அடிமைத் தனத்திற்கு ஆக்கமளிப்பதைத் தடை செய்தது. அதன் மூலம் அடக்கி, ஒடுக்கப்பட்ட மனித ஜாதியாய், மிருகங்களைவிடக் கீழான நிலையில் வாழ்நாளை ஓட்டிவந்த நாற்பது இலட்ச நீக்ரோக்கள் விடுதலை பெற்றனர். ஆனால் அந்த செயற்கருஞ் செயலைப் புரிந்த லிங்கனுக்கு மாத்திரம் நீக்ரோக்களின் இதயச சிறையிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை !..

நல்லவர்களுக்கு எல்லாம் பொல்லாத முடிவு என்பது அரசியலைப் பொறுத்த வரையில் வெகு சாதாரண விஷயம். 1865-ம் வருடம் எப்ரல் திங்கள் 14-ஆம் நாள் போர்டு நாடக அரங்கத்திற்கு (Ford Theatre) நாடகம் ஒன்றினைக் காணச் சென்றிருந்தார் லிங்கன், தன் மனைவியுடன். மணி பத்தடித்து இருபத்தைந்து நிமிடங்களுக்கெல்லாம் துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. லிங்கன் தனது நாற்காலியிலிருந்து முன்னால் குப்புற விழுந்தார். மறுகணம் இரத்த வெள்ளத்திலே மிதக்கும் ஓடமாகக் காட்சியளித்தது அவர் சடலம். போரில் சந்தித்த தோல்வியைச் சகிக்க மாட்டாதவனாய், தெற்கத்திய ராஜ்யத்தைச் சேர்ந்த ஜான் வில்கிபூத் என்ற வெறியன் நடிகன் என்ற முறையில் நாடக அரங்கிற்குள் நுழைந்து, லிங்கனின் உயிருக்கு உலை வைத்து விட்டுத் தப்பி ஓடிவிட்டான். நினைவற்ற நிலையில் வெள்ளை மாளிக்கு லிங்கன் எடுத்துச் செல்லப்பட்டார். மறுநாள் காலை மனிதகுலத்தின் மேன்மைக்காக அல்லும் பகலும் உழைத்த லிங்க

மூடன் ஆயுட்காலம் முழுவதும் ஞானியுடன் பழகினாலும் உண்மை அறியான் கரண்டிக்குக் குழம்பின் ருசி எப்படித் தெரியும் ?

—இந்தியா

அதிர்ஷ்டம் சில முட்டாள்களிடம் தலைகாட்டும். ஆனால் அவனோடு அமர்ந்திருக்காது.

—ஜெர்மனி

னின் உயிர் அனுதையாகப் பிரிந்தது. ஆம்! செத்தும் சாகாத சரித்திரப் புகழ் தாங்கும் தெய்வங்களில் ஒன்ருக உயர்ந்து விட்டார் லிங்கன்!.

ஆபிரகாம் லிங்கனின் பேச்சிலும், எழுத்திலும் ஒரு எளிமை காணப்பட்டது. அந்த எளிமையே பாமர மக்களை வெகுவாகப் பிணித்தது என்று சொல்லலாம். அவருடைய கெட்டிஸ்பர்க் பிரசங்கம் உலகப் பிரசித்தி பெற்றது, அங்குத்தான் குடியரசின் இலக்கணமாய் இன்றும் போற்றப் படும் "மக்களுடைய, மக்களால், மக்களுக்கான அரசு...." என்ற சொற்களை உதிர்த்தார்.

கால, இடங்களால் காந்திஜியும், லிங்கனும் பிரிக்கப்பட்டாலும், பொதுவாக இரண்டு அடிப் படை அம்சங்களில் அவர்களிருவரும் நம்பிக்கை பூண்டிருந்தனர், ஒன்று: பாமர மனிதனிடத்தில் நம்பிக்கை; இரண்டு: சத்தியமே இறுதியில் வெல்லும் என்பது.

காந்தி, லிங்கன்—ஆகிய இருவருடைய மொழிகளில் ஒரு அபூர்வமான ஒற்றுமை விரவிக் கிடக்கிறது, "ஒருவனுடைய மன ஒப்புதல் இன்றி, அவனை ஆள்வது நல்ல மனிதன் செயல் அல்ல" என்ருர் லிங்கன். காந்தியோ, "குடியரசை பலாத்காரத்தால் புகுத்த முடியாது, அந்தக் குடியரசு உணர்ச்சியை வெளியிலிருந்து உள்ளே செலுத்தக்கூடாது; அது உள்ளிருந்து இயற்கையாக வெளிப்படவேண்டும்" என்ருர்,

சமத்துவத்தைச் சாற்ற வந்த காந்தி, 'நாம் எல்லா விஷயத்திலும் சமமே, ஆனல் சமத்துவம் உள்ளத்தால் ஆனதே தவிர, உடல்களால் அன்று, ஒரு மனிதன் மற்றெருவன்மேல் ஆதிக்கம் செலுத்துவது, கடவுள், மனிதன்" ஆகிய இருவருக்கும் எதிராகச் செய்யப்படும் குற்றமாகும் என்ருர். லிங்கனே, "தற்காலிகமாக இந்த வெள்ளை மாளிகையைக் கைப்பற்றியிருக்கிறேன். என்னைப் போலவே உங்கள் பிள்ளைகளில் ஒன்று இங்கு வந்து அமர முடியும் என்பதற்கு நானே சாட்சி" என்ருர். இப்படி எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். ஆனல் இவ்விரிவு காரணமாக இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்,

ஆபிரகாம் லிங்கன் இன்று நம்மிடையே இல்லை. ஆனல் அவர் புகழ் இன்றும் மங்காமல் மறையாமல் இருக்கிறது. குடியரசைப் போற்றுகிறவர்கள் வாழும்வரை, நாடுக்குழைத்த நல்லோர்களின் அருஞ் சேவையை அறிந்து போற்றுகிறவர்கள் வாழும்வரை அவர் புகழ் இந் நிலவுலகில் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க லிங்கன்! வாழ்க குடியரசு!!



காந்தியப் பாதை

சொ. அடைக்கலம்

பல்லவி

பாதை தெரியுதங்கே பாரம்மா—காந்தியப்
பணியில் மனதுவைத்து நீ வந்து சேரம்மா (பாதை)

அனுபல்லவி

நீதி யருளறம்கை நீட்டுது வாவென்று—உயர்
சாதி சமயச் சண்டை, தாழ்வு வுயர்வகன்று (பாதை)

சரணம்

ஊரில் விளைநிலங்கள் உழுபவர்க்கே சொந்தம்—என்றும்
உண்மைக்கும் நேர்மைக்கும் வாழ்வதுதான் பந்தம்.
பாரில் பகை மறைந்து மக்களெல்லாம் ஒன்ருய்—வாழப்
பாதை வகுத்துத் தந்தார் பாரதத் தந்தை நன்ருய் (பாதை)

வாட்டும் வறுமை பிணி வால்கூட ஆட்டாது—நம்மை
வதைக்கும் செல்வச் செருக்கு வந்து தலை நீட்டாது.
கூட்டு முயற்சி மக்கள் குடியாட்சி சிறந்திருக்கும்—உலகில்
கொல்லாமை யோடு பொய்மை சொல்லாமை நிறைந்திருக்கும்
(பாதை)

அண்ணனுக்கு

நா. சானகி

எனது அண்ணா !

உன் கடிதம் வரப்பெற்றேன். உள்ளத்து உணர்ச்சிகளுக்கு எழுத்தால் வடிவம் அமைத்திருந்தாய் ! என் இதயக்கிழியில் வகையான தூரிகைக்கொண்டு வரையப்பட்ட வண்ண ஓவியமாக ஆகிவிட்டது அக் கடிதம். இக் கருத்தோவியத்தை அழித்து வேறோர் ஓவியம் வரைய முடியா அளவில், உண்மை நிகழ்ச்சிகளை வைத்து உறுதியான சொற்களால் எழுதி இருந்தாய் ! மங்கையர் உலகின் மதிப்புக்குச் சாவுமணி அடித்துக் கொண்டுவரும் சமூகக்கர் தம் போக்கைக்கத்தெற்றென விளக்கிய உன் கடிதம் ஊமையான என்னைப் பேச வைத்துவிட்டது. அதற்குச் சான்றே இக் கடிதம். என் அகத்தில் இத்துணை நாட்களாகக் குழம்பிக் கிடந்த எண்ண எழுச்சிகளைக் கோர்வையாக்கி உனக்கு மடல் வரையவல்ல புதியதொரு ஆற்றலை உன் கடிதம் எனக்குத் தந்திருக்கிறது.

அண்ணா ! யாரோ ஒரு தமிழ்க் கவிஞர் தென்றல் குறித்து எழுதியதாக, முன்பெல்லாம் ஒரு கவிதையைச் சொல்வீர்களே ! அண்ணா ! அந்தக் கவிதையின் வரிகளை இன்னும் என்னால் முழுதும் மறந்துவிட முடியவில்லை. "பொதிகை மலை விட்டெழுந்து சந்தனத்தின் புது மணத்தில் தோய்ந்து. பூந்தாதுவாரி, நதி தழுவி அருவியின் தோள் உந்தித், தெற்கு நன் முத்துக் கடல் அலையின் உச்சிதோறும் சதிராடி மூங்கிலிலே பண் எழுப்பித், தாழையெல்லாம் மடற்கவிழ்த்து சுழற்ற வைத்து முதிர் தெங்கின் இளம் பாளை முகம் சுவைத்து, மூத்துதித்து தமிழகத்தின் வீதி நோக்கி . . . . . "தென்றல்" என்ற செல்வம் வந்ததாம் !

அண்ணா கவிஞர் காட்டும் பொருள்களிலேதான் எவ்வளவுயர்வு! எத்தனைக் கவர்ச்சி ! விழுமிய உணர்ச்சிக்கும், உயர்ந்த கருத்துக்களுக்கும் அழகியதொரு வடிவம் சமைத்துத் தென்றல் கீதம் பாடிய கவிஞரைப் போல் எனக்கும் விழுமிய உணர்ச்சியுண்டு : கருத்துகள் உண்டு ; ஆனால் அழகிய வடிவம் தரமுடியாதே ! அந்த ஆற்றல் மட்டும் எனக்கிருந்தால் உன்னைவிட்டுப் பிரிந்து! என்னிடம் வந்து சேர்ந்த அந்த அஞ்சல் பற்றி ஒரு 'அஞ்சற் காவிய'மே பாடி இருப்பேன் !

அண்ணா ! உன்னுடைய கடிதத்தில் பெண்ணினத்தின் பெருமை பற்றிக் குறிப்பிட்டிருந்தாய் ! பெண்ணினத்திற்கு, இழிவுகள் எங்கிருந்து வந்தாலும், என்னைத் துடித்தெழுந்து தூய உள்ளத்துடன் முடிந்தவரை இழிவு நீக்கப் படுபாடு சொல்லி இருக்கிறாய், பெண்ணுரிமை காண, ஒல்லும் வகையெல்லாம் செல்லையும் செயலையும் யாற்றவேண்டும் எனவும் கண்டிருந்தாய !

அண்ணா ! நீர் ஆண் இனத்தைச் சேர்ந்தவர், 'பெண்' என்றால் பிறர்க்கடிமை—பிள்ளை பெறும் இயந்திரம்—எதிர்த்துப் பேசக்கூடாது ஏனென்றுக் கேட்கக் கூடாது ; ஆமையாய் ஊமையாய், அடங்கி—ஒடுங்கி, நாயினும் கீழாய் நலிய வேண்டும் எனக் கருதிச் சமூகச் சட்டத்தை அமைத்துக்கொண்டிருக்கிறதே ஆண்கள் இனம் அந்த இனத்தில் நீயும் ஓர் அங்கம்.

அண்ணா ! என்னுடைய எழுத்துக்கள் உன்னுடைய உள்ளத்தை வருத்துமென்றால், அதற்காக நான் வருந்துகிறேன், மன்னித்து விடு ; எல்லை மறிந்த நீ உண்மையை உணர்வாய் என்ற நல்ல நம்பிக்கை எனக்குண்டு.

காவியங்களிலெல்லாம் பெண்களைப் போற்றி, பெண்மையை மதித்துப் பலபடக் கூறுகிறார்கள். அந்த ஒரு பேறுதான் பெண்ணினத்திற்குக் கிடைத்த பெரும் பேறு போலும் ! ஆனால் உண்

மை வாழ்க்கையில் பெண்கள் படும் அவதி பற்றி ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் நெஞ்சம் கொதிக்கும்! நினைவு தடுமாறும்!

அண்ணு! எனது திருமணத்தின்போது நீ கூறிய வரிகளை என்னல் மறந்துவிடமுடியாது. நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்—குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்று கூறினய்! இந்த வரிகளை என்றும் இதயத்திற்கொண்டு நல்லனப்பற்றி நடப்பேன். எனக்கு அந்த ஆற்றல் உண்டு. ஆனல் நான் பிறந்த பாழும் பெண்ணினத்தில் எத்தனைப் பேர் குடும்பத்தைக் பல்கலைக் கழகமாக மாற்றி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பார்கள்? பெண்கள் படிப்பறிவது கொடிது; பெண் கல்வி தீது பயப்பது எனப் பேசிப் பெண்கள் சமுதாயத்தை இருட்டிலே ஆழ்த்தித் தங்களின் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப ஒழுகக நியதிகளை வகுத்துக் கொண்டார்களே! அண்ணு! இது கொடிது தானே? மிகக் கொடிதென்று நீ ஒத்துக் கொள்வாய்! உன்னிடத்தில் தெளிவிருக்கிறது.

ஆனல் ...... அதோத் தெளிவாகக் கேட்கிறதே ஆண் இனத்தின் முணு முணுப்பு! அதற்கு நீ சொல்லும் பதில் என்ன? அண்ணு! பெண் கல்வியால்—பெண்ணுரிமையால் தானே உண்மையான நாட்டின் முன்னேற்றத்தைக் காணமுடியும். பெண்களுக்குக் கல்வியும் உரிமையும் வழங்காது எந்த நாடாவது முன்னேறி இருப்பதாகக காட்ட முடியுமா? உண்மையான ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்த நாட்டில் பெண்ணினம் மதிக்கப்படும் விதத்தல் தானே இருக்கிறது.

“ பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமை என்று பெண்ணை உரைக்குமட்டும்
[உளளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு ”

என்றார் புரட்சிக் கவிஞர். இதை எங்கே அண்ணு உள்ளத்தில் கொள்ளுகிறார்கள்? நாடு முன்னேற வேண்டும் என்ற நல்ல நினைவு இருந்தால், சமூகத்தின் ஒரு பகுதியினரைப் பள்ளம் பறித்துப் பாதாளத்தில் தள்ளிவிட்டு, நாட்டின் முன்னேற்றத்தை நண்ணுவார்களா?

அண்ணு! இன்றையச் சமூக அமைப்பை எடுத்துக் கொள்ளுங்கள்.

“ ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்
தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல்
[வாழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர்குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி ”

எனக் கவிஞர் படம் பிடித்துகாட்டும் இழி நிலையில் தானே மண்ணுக்கும் கேடாய்ப் பெண்களை மதிக்கிறார்கள்.

பெண்கள் கற்பு தவறக்கூடாது—அப்படித் தவறிவிட்டால், அவள் இழிந்தவள். சமூகத்தினரால் பழிக்கத்தக்கவள், வெறுக்கத்தக்கவள்: இன்னும் சமூகத்தைவிட்டே விரட்டத்தக்கவள் எனகிறார்கள். அண்ணு! இதில் எந்த அளவு நீதி இருக்கிறது. நடு நிலை வழாது சிந்தித்துப் பாருஙகள்! பெண்கள் கற்பு நெறி தவறுதற்கே காரணம் இந்த ஆண்கள் தானே அண்ணு! பெண்களுக்குத்தான் கற்பு என்பது உண்டு: ஆண்களோ எப்படி வேண்டுமானலும் ஒழுக்கம் பிறழ்ந்து வாழலாம் என்ற சமூக அமைப்பே, பெண்களை அடிமைப் பகுதியில் ஆழ்த்துவதற்குக் காரணமல்லவா?

ஆண்களும் கற்புநெறி தவறாது ஒழுகவேண்டும் என்ற சமூகநியதி. பெண்களுக்குக் கடைபிடிக்கும் அளவிற்கு உறுதியாக இல்லாவிட்டாலும், ஓரளவிற்காவது இருக்கவேண்டாமா? அண்ணு! இது எவ்வளவு கொடுமை?

“ கற்பு நிலை என்று சொல்ல வந்தார்— அதை
இரு கட்சிக்கும் நடுவில் வைப்போம்.”

என்றான் புதுநெறி காட்டிய புலவன் பாரதி. சமூக நியதி என்றும் இப்படித்தானே இருக்கவேண்டும்.

அண்ணு! இளமை கொழிக்கும் எழிலரசிகளான பல பெண்களின் வாழ்க்கை பட்ட மரமாகவும் கெட்ட பாலாகவும் மாறிவிட்டதை நீயே அறிவாய்! பட்ட மரம் துளிர்க்காது—கெட்ட பால் சுவைக்காது என்கிறார்கள். ., கன்னற் சாறே! கனி ரசமே! கற்கண்டே!” எனப் பாகு மொழிபேசி கள்ளமறியாக கன்னியர்களின் வெள்ளை உள்ளத்தில் அனு அனுவாக நஞ்சேற்றி

அவர்களை நிலையின் இழிநதவர்களாக மாற்றி விட்டு அவர்களின் துயரக் குரலே கேட்க முடியாத தூரத்தில் ஒதுக்கிவிடுகிறார்களே ! இது மிகக் கொடிய செயல் அல்லவா ? அண்ணா ! பெண்ணினத்தின் சீரழிவுக்குக் காரணமான அவர்களை இந்தப் பாழும் சமூகம் மதிக்காமலா இருக்கிறது. இது தான் போகட்டும் ....அனுதாபத்துக் குறிய அவ்வணங்குகளிடத்தில் இந்தச் சமூகம் பரிவு காட்டத் தேவை இல்லை. அருளொழுகும் நெஞ்சுடன் அவர்களுக்கு ஆதரவளிககவேண்டிய தில்லை.

ஆனால் ...... வண்டு குடைந்த மலர், வாய் எச்சிற்பட்டகனு, வடித்தெடுத்துவிட்டுச் சக்கையான தேன்கூடு என்றெல்லாம் கேலியும் கிண்டலும் பேசி, வெந்த புண்ணிலே வேலையல்லவா பாய்ச்சுகிறார்கள். இத் தூற்று மொழியைத் தாங்கவொணாத் தோகையர் பலர் துடிதுடித்துத் தினம் தினம் சாகிறார்களே, என்னண்ணா இந்த அவல நிலை.

அண்ணா ! நீங்களே சொல்லுங்கள். பெண்ணுரிமை—முன்னேற்றம் பற்றிச் சில ஆண்கள் மிகத் தாராளமாகப் பேசித்திரிகிறார்களே.... யாராவது சிலர்..மிகச்சிலர், பாலைவனமாகிவிட்ட அவர்கள் வாழ்வை, துளிர்த்த பசும் இலைகளுக்கிடையே மணம் பூத்துக் குலுங்கும் சோலைவனமாக்க முன்வந்ததுண்டா?

அண்ணா ! எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு முழு உரிமை வந்துவிட்டது...... "சட்டங்கள் செய்வதும் பட்டங்கள் ஆள்வதும்—பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியின் வாக்கு மெய்த்துவிட்டது என்கிறார்கள். எங்கோ ஒரு மாநிலத்தில் கவர்னராகவும்—சில மாநிலங்களில் அமைச்சர்களாக இரண்டொரு வரும்—ஒரு மாநிலத்தில் உயர் நீதி மன்ற நீதிபதியாகவும் பெண்கள் இருப்பதை எல்லாம் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இது அவரவர்களின் குடும்ப நிலையையும் சற்றுச் சார்பையம்—அவர்களைச் சார்ந்தவர்களின் அரசியற்—சமூகச் செல்வாக்கையும் பொறுத்ததே தவிர, பெண்கள் இன முன்னேற்றத்தில் முகிழ்த்த நல்வாய்ப்பல்ல!

அன்புள்ள ஆசிரியருக்கு

சௌபாக்கியம் ஜூலை இதழைப் படித்தேன். பரவசமடைந்தேன். தெள்ளிய கருத்துரைகள் சீர்தூக்கிக் காட்டப்பட்டு நன்முறையில் விளக்கப் பட்டுள்ளன. சென்ற இதழ்களைவிடச் சௌபாக்கியம் புதுமுறையில் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது.

மற்றும் மாதர் நலத்திற்காகச் சௌபாக்கியம் உழைப்பது மிகப் பாராட்டத்தக்கது. இன்றுபோல் என்றும் சௌபாககியம் வளர்ந்து எங்களுக்கு நல்லுரைகள் தந்து மங்காத புகழ் பெற்று இவ்வையகத்தில் வளம் பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வளர்க சௌபாக்கியம் !

அம்மனூர்சுவாமி.

*

நானும், எனது வாழ்க்கைத் துணைவியும் "சௌபாககியத்தை" கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக படித்து வருகின்றோம். அது முற்றிலும் எங்களைக் கவர்ந்து விட்டது. சௌபாககியத்தில் வருகின்ற கட்டுரைகள் கருத்தின் கருவூலம்; கதைகள் கவர்ச்சி மிக்கவை; ஓரங்க நாடகங்கள் நடித்துப்பார்க்க ஏற்றவை ; இனிய எளிய கவிதைகள் சிறுவர்களும் படித்துப்பாடக் கூடியவை. ஒவ்வொரு இதழின் கடைசியில் வருகின்ற ஆங்கிலக் கட்டுரை என்போன்றவர்கட்கு மிக்க பயன் தரக்கூடியதாக உள்ளது. வளர்க "சௌபாக்கியம்".

என். ஆர். சிங்காரவேலு, B.A ,B.L. Ed.

அண்ணா ! மிகப் பரந்த நிலமான நமது நாட்டில், மக்கட் தொகையில் அதிக அளவினதான இப்புண்ணிய பூமியில், விரல்விட்டு எண்ணக்கூடிய சில பெண்களைச் சுட்டிக்காட்டி பெண்ணுரிமைக்கும், முன்னேற்றத்திற்கும் சான்று தேடுவதே நமது துறையைத் தெளிவாக்கிக் காட்டுமே!

அண்ணா ! பட்டணவாசிகள்—பட்டிக்காடு எனப் பழித்துரைக்கும் குக்கிராமத்தில் உள்ள ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டவள் நான். இங்கு வந்து

பாருங்கள் இந்தப் பெண்கள் படும் அவதியை! சூதையறியாது, சூழ்ச்சியை விரும்பாது உழைக்க மட்டுமே தெரிந்தவர்கள். இவர்கள் உடலைக் கசக்கி உதிர்க்கும் வியர்வையில் இவ்வுலகையே வாழ் விப்பவர்கள்! "முன்னேற்றம்", "உரிமை" என்ற வார்த்தைகளையே சீரணிக்க முடியாதவர்கள்.

அண்ணா! முன்னேற்றம் முகிழ்க்க வேண்டிய முதலிடம் இதுதானே? என்று குக்கிராமங்களில் இருக்கின்ற ஒரு குப்பாயியும்—கருப்பாயியும் ஆட்சிமன்றங்களில் அங்கம் வகிப்பவர்களாயும், ஒரு கோமளமும்—கோகிலமும் நீதிமன்றத்தில் நீதி பேசுபவர்களாயும், ஒரு செங்கமலமும்—சௌபாக்கியமும் நிர்வாக மன்றங்களின் நிர்வாகி களாகவும் மாறுகிறார்களோ, அன்றுதான் உண்மையான பெண்கள் முன்னேற்றத்தையும் பெண்ணுரிமை காக்கப்படுவதையும் முழுமை யாகக் காணமுடியும். அதுவே அரசினரால் இயக்கப்படும் மாதர் நல இலாக்காவினரால் ஆற்றப்படும் பணிகளின் முழு வெற்றி நாளாகும்!

அண்ணா! அந்த நாளும் வெகு தூரத்தில் இல்லை.... மங்கையர் முன்னேற்றம் எண்ணி யுழைக்கும் "சௌபாக்கியம்" இதழ் பேரூர்கள்—சிற்றூர்கள் எங்கணுமுள்ள மூலை-முடுக்கெல்லாம் பரவினால், அதுவே இந்த இலட்சியத்தை நிறை வேற்றிவைக்கும் வகையில் முதல் வெற்றி யாகும்! உன்னால் இதற்கான முயற்சி களில் எதேனும் செய்ய முடிந்தவரையில் செய்யவும்—நண்பர்களை ஊக்குவிக்கவும் வேண்டு கிறேன்.

மறந்துவிட்டேன்! நீ என்னிடம் உறுதிகூறிய படி, தமிழ்ப்பெருங்கவிஞரின் காவியமான "குடும்ப விளக்கு" இன்னும் வாங்கி அனுப்ப வில்லை. உடன் வாங்கி அனுப்பவும். "மனைக்கு விளக்காகி மானுதல்" என்றார் சங்கத் தமிழ்க் கவிஞர் ஐயூர் முடவனார். "குணம், கல்வி, ஒழுக்கம் மிக்கக் குலக்கொடியாளை மக்கள் மனை விளக்கென்பர்" இந்தப் பெருஞ்சிறப்பெல்லாம் பெற ஒவ்வொருப் பெண்களும் "குடும்ப விளக்கு" நூல் படித்தேயாகவேண்டுமென்றாய் இது என் நினைவை விட்டு நீங்கவில்லை. உடன் வாங்கி அனுப்புங்கள்! கடிதம் எழுதுங்கள்!

இங்ஙனம்,
உன் அன்புத் தங்கை,
மழலைமொழி.

வீட்டின் விளக்கு

A. N. இராமசாமி.

விரிகடல் சூழந்த இப்பூவுலகின் கண் உள்ள ஒவ்வொரு இல்லமும் இனிது இன்பப் பூங்காவாக மிளிர வேண்டுமானால் வீட்டில் விளக்கு ஒளி வேண்டும்.

வீட்டில் ஒளியில்லையெனில் இருட்டால் இழி நிலைத் தோற்றத்தில் காட்சியளிக்கும். விளக்கு சுடர் விட்டு எரிய வேண்டுமானால் அதன் குணம் குன்றாதிருக்கவேண்டும். அப்பொழுது தான் சூரியப்பிரகாசம் போன்று விளக்கொளி சுடர் விட்டுக் காட்சி தந்து வீடு வெள்ளிடை மலை போல் விளங்கும். அவ்வருமைக் குணம் பொருந்திய விளக்கு யாதெனின், அது தான் (Lamp of the house) வீட்டின் விளக்கு என்று ஆன்றோர் அமுத மொழியின் வழி வந்த அருமை மனைவி.

இச்சுடர் விளக்காகிய மனையாளின் மகத்தான குணங்கள் எவ்விதம் அமைந்திருக்க வேண்டும் என்பதை நோக்குவோம். மனையாளின் முகம் முழு மதிபோல் மலர்ச்சி பெற்று விளங்க வேண்டும். அவள்தம் முகமலர்ச்சியின் அளவு தான் அவளுடைய அகம் (வீடு) மலர்ச்சியின் அளவைக் காட்டக் கூடியதாகும். முகம் இருண்ட நிலையில் இருப்பின் அகமும் இருண்ட நிலையில் தான் காட்சியளிக்கும். "அகத்தின் அழகு முகத்திலே" என்றபடி அவள் தம் முகம் அமைய வேண்டும். அது மட்டுமன்று அன் புள்ளம்படைத்த இருள் தன்மை உடையவளாகவும் இருக்கவேண்டும்.

அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கையானது வலிய பாலைநிலத்தில் வறண்ட மரம் தழைத் தாற்போன்றது. எனவே அன்பின் ஆக்க சக்தியைக் கொண்டுதான் செயற்கரிய செயல் செய்ய இயலும். அன்போடு கூடிய உடம்பே உயர் நிலை பெற்றிருக்கும் உடம்பாகும். தன்னலமற்றவளாய் எவ்வுயிரும் இன்புற்று இருப்பது என் விருப்பம் என்ற தன்மை அடையவேண்டும். யாரையும் ஏழ்மைக் கண் கொண்டு நோக்கும் ஏழை அறிவு படைத்தவளாக விருக்கக்கூடாது. அவ்வண்ணம் இருப்பின் திருமகளும் இல்லத்தைத் தன் திருவிழியால் ஏளனமாகப் பார்த்து விட்டுச் சென்று விடுவாள். "எண்ணம்போல் வாழ்வு" என்பதை மறத்தல் கூடாது. பெண் குலத்தின் பொன் விளக்கெனத் திகழும் பெண் மணியின் பெற்றியின் (புகழின்) பேரில்தான் கணவன் களிப்படைய முடியும், இயற்கையின் எழிலை உற்று நோக்கி உவகை அடையும் ஓவியன் போல் நற்பண்பு படைத்த மனைவியின் மகத்தான அறிவைக்கண்டுதான் ஆனந்தம் அடைய முடியும். அவள் பிறர்க்கு ஈத்துவக்கும் இன்பம் அடைபவளாகவும் அமைந்திருக்க வேண்டும். ஈதல் இசைபட வாழ்தல் இவ்விரண்டுமே வாழ்வில் ஒவ்வொருவரும் அடைய வேண்டிய அரும்பயனாகும். தமிழ்நாட்டுப் பெண் மணிகளே விருந்து உபசரிப்பதில் விருப்பங் கொண்டவர்கள் என்பது தென்னாட்டின் பொன் ஏட்டில் ஏறிய பொன் மொழியாகும். இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு என்பதற் கேற்ப வந்த விருந்தினரை இன்முகமும் இன் சொல்லும் கொண்டு வரவேற்று வரவேற்று உபசரிக்கும் மனப் பான்மை பெற்றிருக்க வேண்டும். ஒருவனுக்கு இனிய வார்த்தையும், பணிவான தன்மையுமே ஆபரணம் ஆகும். அவ்வாறு இன்றி கோணல் முகம் கொண்டு நோக்குவாளாயின் முகர்ந்தவுடன் வாடும் அனிச்சமலர் போன்று வந்த

விருந்தினர்கள் முகம் வாடிச் செல்லும் பொழுது "ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடமை வைத்திழக்கும் வன் கண்ணவர்" என்று சொல்லிவிட்டுத் திருமகள், இல்லத்தைத் திரும்பிப் பாராமல் சென்று விடுவாள். அன்றோடு அந்த இல்லம் வந்த விருந்தினர்க்கு விருந்து படைத்து அதனால் பெரும் இன்பத்தை இழந்து விட்டதாகத்தான் பொருள்படும். அனைவரையும் சகோதர மனம் கொண்டு போற்ற வேண்டும். தீண்டாமை என்னும் கொள்ளை நோய் கொண்ட மனித சமூகத்திற்கு இலக்காக விளங்கக்கூடாது. "இன்சொல்லே இல்லத்திற்கழகு" என்பது சான்றோரின் பொன் மொழியாகும். அடுத்தவர்களையும் தன் இனம் என்ற மனம் கொண்டு நேசிக்கவேண்டும். அன்பும் இன்சொல்லும் கொண்ட ஒரு உருவத்தைத் தான் மகரந்தம் கொண்ட மலரை வண்டினங்கள் நாடுவதுபோல அறிவுக்களஞ்சியம் என்னும் சான்றோர் சமூகம் போற்றும்; விரும்பும். "சுத்தம் சோறு போடும்" என்பது நம் முன்னோர் முது மொழி. எனவே இல்லம் தூய்மையாக இருப்பின் அதுவே திருமகள் (லக்ஷ்மி) தான் அந்த இடத்தில் சஞ்சரிக்கச் சந்தோஷப்படுவாள். கல்விக்கண் இல்லாத இல்லாள் அகம் கவின் பெறு காட்சிகளைக் கண்டு மகிழ்தல் இயலாது. எனவே கல்விக் கண் படைத்த மனையாளின் இல்லமே வெளிச்சம் வெண்ணிலவு போன்று பிரகாசிக்கும். பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின் என்றார் வள்ளுவர். இதுபோன்று கற்புக்கரசி கண்ணகியின் மரபிலே பிறந்து அவள்போல புகழ் ஏணி ஏறவேண்டும் என்ற அவாவுள்ளம் அடையவேண்டும். அகத்தூய்மை தான் அதிகம் தேவை என்பதை அடிப்படையிலே கொண்டு வாழ வேண்டும். அமுதசுரபி ஏந்தி அறவழி வகுத்த மணிமேகலையின் வழிவந்த பெண்மணிகள் மனைத்தக்க மாண்புடையவளாகி மங்கலம் என்பமனை மாட்சி மற்று அதன் நன் கலம் நன்மக்கட்பேறு என்ற அநநெறியை மனதில் கொள்ளவேண்டும். இவ்வரிய குணங்கள் அனைத்தும் கொண்டு பெண்மணிகள் இல்லத்தில் இருக்கப்பெற்றால் அதுவே வீட்டின் விளக்கமாகும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

நல்ல திட்டம்

வந்தவாசி H. A. கான்

(கிளிக்கண்ணி)

உள்ளத்தைக் கொள்ளைக் கொண்ட
உன்னத திட்டத்தினை
உலகுக்கு உரைப்பேனடி—கிளியே
உண்மையைச் சொல்வேனடி.

(உள்ளத்தை)

சமுதாய வளர்ச்சித் திட்டம்
சர்க்கார் வகுத்த திட்டம்
நாடு விரும்பும் திட்டம்—கிளியே
நல்லோர் கொடுத்த திட்டம்.

(உள்ளத்தை)

அனைவர்க்கும் நன்மையுண்டு
அன்பான மார்க்க முண்டு
ஆதரவும் கூடி உண்டு—கிளியே
அவனியே போற்றுதடி.

(உள்ளத்தை)

ஐந்தாண்டு திட்டமென்றால்
ஐயமே கொள்ள வேண்டாம்
நைந்துள்ள மக்களுக்கு—கிளியே
நல்வழி காட்டுதடி.

(உள்ளத்தை)

இத்தகு திட்டத்திற்கு
இந்தப் புவி தனிலே
நற்பெயர் உள்ளதடி—கிளியே
நாடே வியக்குதடி.

(உள்ளத்தை)

ஹாலந்தின் வீட்டு வேலை பற்றிய ஆலோசனைகள்

ராயல் நெதர்லாண்ட்ஸ் தூதராலயம்

உலகத்திலேயே மிகவும் கஷ்டமான வேலை குடும்பப் பெண்ணினுடையதுதான் என்று சொல்வார்கள். சுமார் ஐம்பது வேலைகளை ஒன்றிலேயே இணைத்துச் செய்கிருள் அவள். 'வீட்டு வேலைக்கு முடிவேயில்லை' என்ற பழமொழியும் நமக்குத் தெரியும். வீட்டு வேலை, குடும்ப நிர்வாகம் பற்றிப் போதிக்கும் கமிட்டிகளைக் கொண்ட ஆலோசனைக் கழகங்கள் பல ஹாலந்தில் இருக்கின்றன. சமையல், துணி துவைத்தல், தையல், குழந்தைப் பராமரிப்பு முதலிய பல விஷயங்கள் பற்றிய சொற்பொழிவுகளுக்கு அவை ஏற்பாடு செய்கின்றன. கிராமப்புறங்களில் வீட்டு வேலை ஆலோசனைக்கென ஒரு ஸ்தாபனம் பணியாற்றி வருகிறது. பலரை ஒன்று கூட்டி அது ஆலோசனை வழங்குகிறது. உணவுக் கழகத்தின் தகவல் அறிவிப்புக் கிளை, வானொலிச் செய்திகள், பொருட்காட்சிகள், பயிற்சி வகுப்புகள், திரைப் படங்கள், செய்திப்பிரசுரங்கள் முதலியவை மூலம் இதற்குத் துணை புரிகிறது. டச்சுப் பெண்கள் மின்சாரச் சங்கம், வீட்டுக்குப் பயன்படும் மின்சாரச் சாதனங்கள் பற்றிய தகவல்களை வெளியிடுகிறது; பெற்றோர்களுக்கும் குழந்தை நலம் பற்றிய ஊழியர்களுக்கும் பொருட்காட்சி ஒன்றை அமைத்திருக்கிறது. இந்தக் காட்சி அவர்களுக்குக் குழந்தைப் பராமரிப்பைப் பற்றியும் அவர்களோடு பழக வேண்டிய முறை பற்றியும் எடுத்து விளக்குகிறது. குடும்ப வரவு செலவுத் திட்ட நிலையம் குடும்பம் சம்பந்தமான நிதி விஷயங்கள் எல்லாவற்றையும்—வீட்டுக் கணக்கு எழுதுவது உள்பட—எடுத்துக் கூறுகிறது.

இவை தவிர, நகரங்களிலும் கிராமங்களிலும் குடும்பப் பெண்கள் சங்கங்களும், வாங்குவோர் கழகங்களும் இருக்கின்றன. பெண்களுக்கென ஏராளமான சங்கங்கள் தொழிலாற்றுகின்றன. இவை யனைத்தும் சேர்ந்து முதலில் குறிப்பிட்ட ஹாலந்தின் வீட்டு வேலை பற்றிய ஆலோசனைக் கழகத்தின் கீழ்ப் பணியாற்றுகின்றன. அது ஹேக் நகரில் அமைந்திருக்கிறது. குடும்ப நிர்வாகம் இன்னும் திறமையாக நடைபெறச் செய்வதும், வாங்குவோர்களின் நலனைப் பேணுவதும், பொது ஸ்தாபனங்கள் விஞ்ஞானக் கழகங்கள், தொழில் நிலையங்கள் முதலியவற்றோடு பொது மக்கள் தொடர்பு கொள்ள உதவி புரிவதும் இந்தக் கழகத்தின் நோக்கங்களாகும்.

ஹாலந்தின் வீட்டு வேலை பற்றிய இந்த ஆலோசனைக் கழகம் 1950-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் தேதி துவக்கப்பட்டது. அந்தக் கழகத்தின் பிரதிநிதிகள் பொது மக்களோடு நல்ல தொடர்பு கொண்டிருக்கிருர்கள். குடும்பப் பெண்கள் நேரடியாகத் தமது கருத்தைத் தெரிவித்துப் பொருள்களை வாங்கவும் பயன்படுத்தவும் இது பெருந்துணை புரிகிறது.

இந்தக் கழகம் பல்வேறு துறைகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது. ஆகவே அது எல்லாவற்றைப் பற்றியும் தகவல் சேகரிக்க வேண்டியிருக்கிறது, 'லேபிள்' ஒட்டுவது என்பது நடைமுறையில் எளிதான காரியமல்ல. அந்தக் கழகம் இதிலும் கவனம் செலுத்துகிறது. துணிகளை மடித்து, பெட்டி போட்டு 'லேபிள்' ஒட்டவும், உணவுப் பண்டங்களின் மீது லேபிள் ஒட்டவும் அந்தக் கழகம் பயிற்சியளிக்கிறது. நவீன முறையில் 'பாக்' செய்வது என்பது வெறும் பெயரை மட்டும் எழுதி ஒட்டுவதல்ல. அன்றாடப் பொருள்களை ஒழுங்குபடுத்தி, ஒரே வகையான பொருள்கள் அதிகமாகக் குவிந்து விடாமல் அந்தக் கழகம் பார்த்துக் கொள்கிறது. விற்பனை நேரம் பற்றியும் கழகம் ஆராய்ச்சி

செய்கிறது. தவணை முறையில் பொருள்களை வாங்கும் முறை பற்றியும் அது கவனம் செலுத்தியிருக்கிறது. விற்பனையைப் பெருக்குவதற்காக வர்த்தகர்கள் பரிசு வழங்குவதுபற்றியும் அந்தக் கழகம் பரிசீலனை செய்து, அந்த விஷயத்தைப் பாராளுமன்றத்துக்கும் கொண்டு சென்றது. இட நெருக்கடி மிகுந்த இன்றைய வீடுகளில் கூட அழகும் சிறப்பும் விளங்க வீட்டை அலங்காரம் செய்வது பற்றியும் அது கற்பிக்கிறது. உதாரணமாக, அலமாரிகளின் உயரம், அமைப்பு, சமையலறைக் குழாய் அமைய வேண்டிய இடம், 'காஸ் அடுப்பு' முதலியவை பற்றியும் அது கருத்துத் தெரிவிக்கிறது.

குடும்பப் பெண்கள் அன்றாடம் பயன்படுத்தும் சாதனங்களைப் பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதையும் அந்தக் கழகம் முக்கியமாகத் தெரிந்து கொள்கிறது. பல்வேறு ஆராய்ச்சிகளையும் அது நடத்துகிறது. சமீபத்தில் வீட்டில் பயன்படுத்தப்படும் தட்டுகளின் அளவு பற்றிய ஆராய்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில், குடும்பப் பெண்கள் எத்தகைய தட்டுகளை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள் என்பதையும், என்னென்ன விதமான தட்டுகள் அவர்களிடம் இருக்கின்றன என்பதையும் ஆராய்ந்தார்கள்.

ஹாலந்தின் வீட்டு வேலை பற்றிய ஆலோசனைக் கழகம், எப்போதுமே, குடும்பப் பெண்களின் அன்றாடப் பிரச்னைகளை—அவை எவ்வளவு சிறியவையாய் இருந்தாலும்—அறிந்து கொண்டு அவற்றுக்கு வழிதேட முயன்று கொண்டிருக்கிறது. குடும்பப் பெண்ணின் கஷ்டங்களையறிந்து, அவளது பிரதிநிதியாக அமைந்து, வீட்டுச் சாதனங்கள், உணவுப் பண்டங்கள், துணிமணிகள் அல்லது வீட்டில் பயன்படும் பல்வேறு பொருள்களில் எதில் அவருக்குப் பிரச்னை தோன்றியிருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்கிறது அந்தக் கழகம். பிறகு, சாத்தியமானபோது, அந்தக் கழகம், வியாபாரிகளிடம் இது குறித்துப் பேச்சு நடத்தும். ஆகவே, டச்சுக் குடும்பப் பெண்ணும் அந்தக் கழகமும் பல விதங்களில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள் என்று சொல்லலாம்.

பெண்

கி. கு. சின்னராஜன்

பாரில் அறங்கள் செய்பவள், அல்லும் பகலும் உழைப்பவள், உள்ளத்து அன்பு ததும்பி யெழுபவள், கல்லும் கனியக் கசிந்துருகி தெய்வத்தைத் தொழுபவள், ஏழைகளின் துன்பக் கண்ணீர் துடைப்பவள், நோயாளியைக் கண்ணை இமைகாப்பது போலக் காப்பவள், பழைய கவலை மறக்க மணாளனுக்குப் பற்பல இதம் செய்பவள், மணாளனுக்கு மந்திரியாய் இருப்பவள், கணவனுக்கு உள்ளம் தளரும் போது நல்ல உரைகள் சொல்லுபவள், மக்களை மடியிலிருத்தி அன்பை வளர்ப்பவள், நீதி நெறி நில்லாது செல்லும் கணவரை நேர்வழிச் சென்றிடச் செய்பவள், மானம் இழந்த கணவனை உத்தமனாக்குபவள், ஆவிபிரியும் போது கணவனிடத்து அன்போடு அகலா திருப்பவள், கணவனுக்குற்ற துன்பம் நீங்க இறைவனை நோற்பவள், கணவன் இல்லையெனயேங்கி அழுபவர்க்கு இதஞ்சொல்லி வாழ்பவள், தந்தை இழந்தவரைத் தாங்குபவள், தூயவள், கணவனைத் தெய்வமாகக் கொண்டவள் எவளோ ? அவளே பெண். மற்றவள் பெண்ணல்ல பேய்.

வாழ்க ! தாய்க்குலம் !

மூன்று தினங்களுக்குப் பின் வெகு சீக்கிரம் அனுத்து விடுபவை விருந்தாளி, மழை !

—ஸ்காட்லாந்து.

தந்தையென அழைக்கப்படுபவர்கள்

[என். ஆர். சிங்காரவேலு, B.A.,B.ED.]

1. சுதந்திர இந்தியாவின் தந்தை—மகாத்மா காந்தி.
2. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தந்தை—வாஷிங்டன்.
3. சோவியத் ரஷ்யாவின் தந்தை—லெனின்.
4. பாராளுமன்றத்தின் தந்தை—சைமன்-டி-மான் பேர்ர்ட்.
5. அணுக்குண்டின் தந்தை—ஐன்ஸடீன்.
6. ஹைட்ரஜன் குண்டின் தந்தை—Dr. எட்வர்ட் டெல்லர்.
7. ஹோமியோபதியின் தந்தை—Dr. சர்முவேல் ஹானிமன்.
8. அடிமை ஒழிப்பின் தந்தை—ஆப்ரகாம் லிங்கன்.
9. இந்தியாவின் N.C.C. இயக்கத்தின் தந்தை—ஜெனரல் கரியப்பா.
10. நவீன இந்திய விஞ்ஞானத்தின் தந்தை—C.V. ரர்மன்.

மனதில் நிறுத்துங்கள்

1. இந்தியா சுதந்திரம் பெற்றது—15—8—1947.
2. இந்தியா குடியரசானது—26—1—1950.
3. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பம்—1—4—1951.
4. சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்—2—10—1952.
5. பிரஞ்சுக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியது—1—11—1954.
6. மொழிவாரி அடிப்படையில் மாகாணப்பிரிவுகள்—1—11—1956.
7. தசாம்ச நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தது—1—4—1957.
8. மெட்ரிக் முறை ஆரம்பிக்கப்பட்டது—1—10—1958.
9. பம்பாய் ராஜ்யம் குஜராத்-மகாராஷ்டிரம் என இரண்டாகப் பிரிந்தது—1—5—1960.
10. சென்னைச் சட்டசபையில் முதன்முதல் தமிழில் நிதிநிலைமை அறிக்கை (பட்ஜெட்) வெளியிடப்பட்டது—2—3—1959.

உறவு முள்

எம். கே. தாயப்பன்

பத்தாவது தடவையாகக் கேட்ட ரங்கதுரையின் கேள்வியைக் கண்டு சாந்தாவுக்கு சலிப்புத்தான் நெஞ்சில் தலை தூக்கியது. இருந்தாலும் ' தலை விதி ' என்ற ஒரே காரணத்துக்காக " என் பெயர் சாந்தா ! தந்தை பெயர் கருணாகரப்பாண்டியன், சொந்த ஊர் விருதுநகர் ! " என்றாள்.

" ஹூம் படிப்பு ! .... ?/"

" பள்ளி இறுதி வகுப்பு சார் ! அத்தோடு டைப்ரைட்டிங் வேறு தேர்வு பெற்றிருக்கிறேன் . " சாந்தாவின் குரலில் குளுமை தவழ்ந்தது.

சாந்தாவின் எல்லையில்லா அழகினை ஒரு முறை விழிகளால் உற்று நோக்கிய ரங்கதுரை ஹூம் இப்போதுள்ள விலாசத்தை எழுதி வைத்து விட்டுப்போ சாந்தா ! தகவல் தருகிறேன்...." குனிந்த தலை நிமிராமலேயே பேசிய ரங்கதுரையின் இனிமையான வார்த்தை சாந்தாவுக்கு இனித்தது ! " சார்.... "

தலை நிமிர்ந்தார் ரங்கதுரை.

" மிகவும் சிரமமான நிலையிலிருக்கிறோம் சார் ! இன்னும் ஐந்து பெண்கள் ! இரண்டு பையன்கள் வேறு ! அப்பாவுக்கு மிகவும் முடியாமலிருக்கிறது, எப்படியாவது வேலை கொடுத்தீர்களானால் உங்கள் உதவியை என்றும் மறந்திட மாட்டோம் சார்...."

தலையை மட்டும் ஆட்டினார் ரங்கதுரை, விடை பெற்றாள் சாந்தா.

* * *

மதுரையில் ரங்கதுரை டிரேடிங் கம்பெனியை அறியாதவர்கள் வணிகத் துறையிலே இருக்க முடியாது ! ஏற்றுமதி இறக்குமதி வணிகத்துடன் மேல்நாட்டு வாசனை தயாரிப்புகளுக்கும் மொத்த விற்பனையாளராக இருந்தனர்.

பல லட்சம் புழக்கத்தில் உள்ள அந்த அலுவல் நிலையத்துக்கு ரங்கதுரைதான் முதலாளி ! முப்பது வயதைத் தாண்டாத இளம் பருவம் ! அரும்பு மீசையும் அழகான தோற்றமும், மிடுக்கான பேச்சும் வணிக வட்டாரத்திலேயே ஒரு மதிப்பை கொடுத்தன ! நூற்றுக்கணக்கானோர் பணிபுரிந்த அலுவல் நிலையத்தில் பல மாறுதல்கள் செய்ய விரும்பினார் ரங்கதுரை இது—

ஒரு விளம்பர யுகம் ! நல்லதோ—கெட்டதோ அவைகளைப் பிரபலப்படுத்த ஏதாவது ஒரு புது முறையைப் புகுத்தவேண்டி ரங்கதுரை ஒரு ஏற்பாடு செய்தார் ! 'இளம் பெண்கள் தேவை' எனப் பத்திரிகையில் ஒரு விளம்பரமும் போட்டு வைத்தார் மறுநாளே !

வாலைக் குமரிகள் பலர் ரங்கதுரையைப் பேட்டி கண்டனர் ! ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்திறமை பொதிந்திருந்தது. ஆனால் சாந்தாவிடம்...... ?

ரங்கதுரையின் நெஞ்சில் தீர்க்கமான ஒரு முடிவு மின் வெட்டியது! எழுந்தார்: புதிய அவரது 'ஆஸ்டின், மறுகணம் நெடுஞ்சாலையில் ஓடியது:

* * *

ஊரையடுத்த நெடுஞ்சாலையின் ஓரத்திலே காரை நிறுத்திய ரங்கதுரை கையிலே உள்ள விலாசத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தார். பல சின்னஞ் சிறு தெருக்கள் இடையே குறுக்கிட்டன; அதன் பின்......

ஆயிரம் பொத்தல்களுடன் கூடிய குடிசை அகல் விளக்கு ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறு குழந்தைகள் பல! கயிற்றுக் கட்டிலிலே ஒரு உருவம்.

பாவம்! ஐம்பதை தாண்டிவிட்ட வயது!

"சாந்தா ......"

வீட்டினுள் ஏதோ வேலை பார்த்துக்கொண்டிருந்த சாந்தா அப்படியே ஓடி வந்தவள் மறுவிநாடி "சார்! நீங்களா....?" என்றதுடன் அப்பா! அவரே வந்து விட்டாரப்பா?" என்றாள் துள்ளலுடன் "யாரம்மா அவர் ......?"

"எனக்கு வேலை தருவதாகச் சொன்ன அலுவலகத்தின் முதலாளி...." சாந்தாபேசி முடிக்கவில்லை! "வாருங்கள் ஐயா! பார்வை சற்று குறைந்து விட்டது......" தட்டுத்தடுமாறியபடி எழுந்திருக்க முயன்றார் கருணாகரப்பாண்டியன்.

"பரவாயில்லை! சாந்தாவின் விஷயமாகத் தான் தங்களைக் கண்டு பேசவந்தேன்!"

"என்னிடம் என்ன கேட்கவேண்டியிருக்கிறது! அவள் இனி உங்கள் பொறுப்பு! அவளுக்கு நீங்கள் தரக்கூடிய ஊதியம்தான் இந்தக் குடும்பத்தை வாழவைக்கப்போகிறது! ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்தோம் ஆனால்..?"

"அதெல்லாம் இப்போது எதற்கு. தங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால்....?"

"என்ன சொல்கின்றீர்கள்....?"

"சாந்தாவை வேலைக்காரியாக எண்ணவில்லை நான்! உங்களுக்கு மறுப்பில்லாவிட்டால் எசமானியாக்க விரும்புகிறேன்...."

"ஆ!!" கருணாகரப் பாண்டியன் வியப்பால் வாய் திறந்தார்....சாந்தாவுக்கு மகிழ்ச்சியால் விழிகளில் நீர் திரண்டது! "ஆண்டவன் விருப்பம் அதுவானால் நான் தடுக்கப்போவதில்லை...." மகிழ்வோடு கூறினார் கருணாகரப் பாண்டியன்.

"ஒரே! ஒரு ரகசியம்...." ஏதோகூற வாய் திறந்தார் ரங்கதுரை.

"என்ன தம்பீ....?"

"நான் யார் தெரியுமா உங்களால் ஒருகாலத்தில் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட ரய்கசாமி! மாமா! அன்று நீங்கள் துரத்தாவிட்டால் பம்பாயில் வாழ்ந்து இவ்வளவு தூரம் வாழ்க்கையில் முன்னேறி இருக்கமாட்டேன்! சாந்தாவைப்பார்த்ததும் அப்போதே முடிவு செய்து விட்டேன்! இருந்தாலும்....?" ரங்கதுரை பேச்சை நிறுத்தினார்!

"ரங்கசாமி நீயா! என்னை மன்னித்து விடு. அன்று நான் புரிந்த கொடுமையை இன்றுஅனுபவிக்கிறேன். இருந்தாலும் என்ன..? பாசத்தோடு தழுவினார்..

"சாந்தா உங்கள் பொருள்...."

"இல்லை..இனி உன் பொருள் சாந்தா...." ஓடிவந்த சாந்தாவின் மலர்க் கரங்களை ரங்கதுரையின் கரத்தோடு இணைத்த கருணாகரப் பாண்டியன் இத்தனை காலமும் இல்லாத ஒரு உறவு முள்ளால் பிணைக்கப்பட்டார்!

தெய்வம் என்று ஒன்று...

பில்லூர் சுந்தரராமன்

'**அப்பா**' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டுக் கொண்டே டாக்டர் ரகுநாதன் நாற்காலியில் உட்காரவும், "ஐயா இருக்காங்களா ?" என்ற குரல் வாயிற் புறத்திலிருந்து வரவும் சரியாக இருந்தது. ஆத்மநாதனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது ஆத்திரம். 'இரவு மணி பதினொன்றாகி விட்டது. குழந்தைக்கு வேறு உடம்பு சரியில்லே. வேளை கெட்ட வேளையில் என்ன கூப்பாடு, டாக்டருக்கு, சை !'

"எய் முனுசாமி, டாக்டர் இல்லே, செத்துப் போய்ட்டார்னு சொல்லித் தொலையேன்" என்று இரைந்து கத்தினார் டாக்டர், வாசல் காம்பவுண் டைப் பார்த்து. ஆனால், குரல் கொடுத்த மனிதன் அதற்குள் வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டான்.

"கும்பிடறேனுங்க....எம் பேரு பெரியகருப் பனுங்க....என் குளந்தைக்குத் திடீர்னு உடம்பு ரொம்ப ஜாஸ்தியா இருக்குதுங்க....நீங்கதான் எப்படியாவது பெரிய மனசு பண்ணி, என் குளந்தையைக் காப்பாத்தித் தரணுமுங்க."

உயிருக்குப் போராடும் எண்ணற்ற உயிர்களின் உணர்ச்சிகளைப் பார்த்துப் பார்த்துப் பழகி விட்ட தனாலோ என்னவோ, டாக்டரது உள்ளம் மரத்துக் கிடந்தது.

"மணி பதினொன்றாகிவிட்டது. இனிமேல் என் னால், வெளியில் எங்கும் வரமுடியாது, வேண்டுமானால், நாளைக் காலே வந்து பார்க் கிறேன்."

வந்தவன், உடலைக் கூனிக் குறுகிக் கொண்டு மிகப் பணிவாகப் பேசினான் :

"குழந்தைக்கு ரொம்ப ஜாஸ்தியா இருக்கு துங்க....ஒன்னும் செய்யாதுன்னு நினைச்சு, கடவுள்மேலே பாரத்தைப் போட்டுட்டுத்தான் மதியம் வரையிலும் இருந்தேனுங்க....இப்போ, குளந்தைக்கு ரொம்ப ஜாஸ்தியா இருக்காப்பலே தோணுது.........."

"ஏன், இன்னிக்கும் அந்தக் கடவுளையே நம்பிக் கொண்டு இருப்பது தானே ? இப்படிக் 'கடவுள் கடவுள்' என்று சொல்லிக்கொண்டு, உடம்பு அதிகமாகப்போகும் வரையில் பேசாமல் இருப்பது கடைசி நிமிஷத்தில் டாக்டரிடம் கொண்டு வந்து போட்டு 'ஐயோ', 'அப்பா' என்று அலறுவது. அப்படித்தானே ?"—விஞ்ஞானத்தால் வளர்க்கப் பட்ட டாக்டர் வார்த்தைகளைக் கொட்டினார்.

"என்னமோங்க....தப்பு செஞ்சுட்டேங்க.... நீங்க மனசு வைச்சீங்கன்னா எல்லாம் நல்லபடியா ஆயிடுங்க. நீங்க என்ன "பீஸ்" கேட்டாலும் குடுத்துடறேன."

டாக்டர் சாதாரண மனிதர்தானே ! "பீஸ்" அவர் உள்ளத்தை இளக்கியது; புறப்பட்டார்.

"உம், உன் வீடு எங்கே இருக்கிறது ?"

"எக்டேசன்லே, பிள்ளையார் கோவில் தெருவி லேங்க"

2

குழந்தை உயிருக்கு மன்றுடிக் கொண்டிருந்தது. பெரிய கருப்பன்—அவன்தான், அந்தக் குழந்தையின் தகப்பன்—டாக்டரை ஆவலோடு நிமிர்ந்து பார்த்தான்.

"ஆமாம், உடம்பு இவ்வளவு அதிகமாகும் வரையில் என்ன செய்தீர்களாம்?"

"ஏதோ, அம்மைன்னு நினைச்சு....கடவுள் மேலே பாரத்தைப் போட்டு......"

டாக்டர் குழந்தையின் வயிற்றை அமுக்கிஞர். நாடியைப் பிடித்துப் பார்த்தார். நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். முதுகுப்புறம் கைவைத்துப் பார்க்கக் குழந்தையைத் திருப்பியபோது, ஏதோ படுக்கையின் கீழே தட்டுப்பட்டது எடுத்துப் பார்த்தார்.

"இது என்ன ஐயா, முடிச்சு?"

"அது..அது எம் பொஞ்சாதி திருப்பதி ஏழு மலையானுக்கு வேண்டிக்கிட்டு முடிபோட்டு வைச்சிருக்காங்க......ஆனு, அவன்தான் கண்ணைத் திறக்காம......"

புதுமையில் ஊறிக் கிடந்த டாக்டர் இரைந்தார்:

"உங்களுக்கெல்லாம் நன்ருக வேண்டுமய்யா, "கடவுள் கடவுள்", "தெய்வம் தெய்வம்" என்று நம்பிக் கொண்டிருந்துதான் இப்படி ஆகிவிட்டீர்கள்!....குழந்தைக்கு ஜுரம் வந்தால் டாக்டரிடம் காண்பிப்பதா? இல்லை, ரூபாயை முடிபோட்டு 'கடவுளே' என்று உட்கார்ந்து கிடந்தால், கடவுளா வந்து ஊசி போடுவார்?"

"ஆமாங்க....தப்புத்தானுங்க....மன்னிச்சுக்குங்க...." பெரியகருப்பன் பயத்தாலும், கவலையாலும் வாய்க்கு வந்ததை உளறிஞன்.

"இது ஒரு விஷ ஜுரம்; திருப்பத்தூர் முழுவதும் இப்போது இருக்கிறது"—டாக்டர் சொன்ஞர்.

"குளந்தை பொளச்சிக் கிட்டாப் போதுங்க. என்ன வேண்டுமானுலும் செய்யுறேன்."

டாக்டர் கைப் பையைத்திறந்து, அந்த விஷ ஜுரத்துக்கான மாத்திரையை எடுத்தபோது—

ஒரு கணம் தடுமாறத்தான் செய்தார் அவர். ஆம், ஒரேயொரு மாத்திரைதான் கைவசமிருந்தது. அன்று முழுவதும் அந்த மாத்திரைக்காக எத்தனையோ கடைகளில் விசாரித்தும் கிடைக்கவில்லை. சரி, வேலூருக்குத்தான் செல்ல வேண்டும். நாளைக்கு அனுப்பலாம் பையனை என்று எண்ணிச் சும்மா இருந்து விட்டார் அவர். ஆனுல், சோதனை போல....

ஆமாம், சோதனைதான். இல்லாவிட்டால், டாக்டரின் குழந்தை பீடிக்கப்பட்டிருந்த அதே விஷ ஜுரத்தினுல், பெரிய கருப்பனின் குழந்தையும் பீடிக்கப் பட்டிருப்பானேன்?

அந்த ஒரு மாத்திரை அவனைப் பார்த்துச் சிரித்தது.

"....குழந்தைக்குத் தேவலை....நீங்கள் சொன்னதுபோல, இன்னும் ஒரு மாத்திரை இருந்தால் போதும்...."—மனைவியின் வாக்கியங்கள் மனத்தில் பளிச்சிட்டன.

மாத்திரையைத் திரும்பவும் பைக்குள்ளயே டாக்டர் வைக்கப் போனபோது, கலவரத்துடன் கேட்டான் பெரிய கருப்பன்.

"என்னுங்க, என்ன யோசனை பண்றீங்க? சொல்லுங்க, எம்மாம் பணம் ஆனுலும் கொடுத்துடறேன்....யோசனை செய்யாதீங்க....

டாக்டர், ஒரு நொடியில் தன் உள்ளத்தில் உதித்த திட்டத்தை வார்த்தைகளாய்த் தவழ விட்டார்.

"இது மிக உயர்ந்த மாத்திரை; ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. விலை இருபத்தைந்து ரூபாய்"

இரவு மணி பதினென்றுனுல் என்ன? வியாபாரத்துக்கும், லாபத்துக்கும் நேரமேது, காலமேது?

பெரியகருப்பன் தந்தையின் ஆசைக் குரலோடு கேட்டான்



"இந்த மாத்திரையைச் சாப்பிட்டான்னு, குழந்தை பிழைச்சுக் கிடுவானுங்களா, சாமி?

"உம், கட்டாயம் பிழைத்துக்கொள்வான்."

"இதோ, ஒரு நிமிஷமுங்க; எடுத்தாரேன்" என்று கூறி, மனைவி பின்தொடர உள்ளே ஓடினான் பெரியகருப்பன்.

டாக்டரின் உள்ளம் ஆடியது. "இந்த மாத்திரை தன் குழந்தைக்குத் தேவைப்பட்டால்? என்ற கேள்வி அவரை உலுப்பி எடுத்தது. உடனே அதைத் தன் கைப் பைக்குள் மறைத்து விட்டு, வேறொரு மாத்திரை எடுத்து வைத்துக் கொண்டுவிட்டார்.

பாவம் அவரும் மனிதர்தானே!

"இந்த ஒரு மாத்திரைதான் என்னிடம் இருக்கிறது. கொடுத்துவிட்டேன், கவலை வேண்டாம், குழந்தை பிழைத்துக் கொள்வான். இந்த மாத்திரையை இன்னும் அரை மணி நேரம் கழித்து, குழந்தைக்குக் கொடுங்கள்."

ரூபாயை வாங்கிப் பைக்குள் சொருகிக்கொண்டு நடந்தார் டாக்டர். "இரண்டு ரூபாய் மாத்திரைக்கு இருபத்தைந்து ரூபாயா" என்று அவர் உள்ளம் ஓரோர் சமயம் ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டதென்றாலும், வழக்கமான வியாபாரம் தானே; எனவே உடனே அதை மறந்தும் விட்டார்.

3

குழந்தைக்கு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் டாக்டர் தன் மனைவியிடம்

"கொஞ்சம் 'தேவலை' போலிருக்கிறது எதற்கும் இன்னொரு 'டோஸ்' கொடுத்தால்"...

டாக்டர் மாத்திரையை எடுத்துக் கொடுத்தார். "இந்த மாத்திரைதான் பாக்கி. எப்படியோ பத்திரப்படுத்தி எடுத்து வந்து விட்டேன்...." பாவம், அவர் பெருமை அவருக்கு!

மனைவிக்குத் தைரியம் சொல்லி, தன்னைத் தானே பெருமைப் படுத்திக் கொண்ட டாக்டர், மிகச் சாதாரண மாத்திரையைக் கொடுத்துப் பெரியகருப்பனை ஏமாற்றி விட்டேனே என்று நினைக்கவேயில்லை. ஆம், இப்போது அவர் டாக்டராக இல்லை; வியாபாரியாகிவிட்டிருந்தார்.

4

காலை மணி ஏழு.

"உங்களை யாரோ பார்க்க வந்திருக்காங்க" என்றான் வேலையாள்.

"யார் அது?"

"நான்தானுங்க, நேத்து இராத்திரி வந்தேனே ஒருத்தன், பதினோருமணிக்கு...."

"டாக்டர் திடுக்கிட்டார். குழந்தைக்கு அதிகமாகி விட்டது என்று சொல்லி அழைத்துப் போக வந்திருப்பானோ? ஹூம் பாவம், இனி மேல் அந்தக் குழந்தை எங்கே பிழைக்கப் போகிறது!"

"கும்பிடறேங்க"

டாக்டர் நிமிர்ந்து பார்த்தார்.

"வந்து....குழந்தைக்கு...."

பெரிய கருப்பன் முடிப்பதற்குள் டாக்டர் குறுக்கிட்டார்.

"நான் என்னப்பா செய்யமுடியும்? என்னால் ஆனவரையில் முயற்சி செய்தேன். அதுவோ விஷ ஜுரம். நீயோ "தெய்வம் தெய்வம்"

என்று நம்பிக்கொண்டு, உடம்பு அதிகமாகும் வரையில் பார்த்திருந்து விட்டுக்கடைசி நிமிஷத்தில் என்னிடம் ஓடி வந்தாய். என்னிடம் இருந்ததோ ஒரேயொரு...."

"இல்லீங்க.... நான் சொல்ல வந்தது...... குழந்தைக்கு உடம்பு தேவலீங்க..கண் முளிச்சிட்டான்......"

"என்ன சொல்லுகிருய் நீ?"—காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டார் டாக்டர்.

"அந்த ஏழுமலையான் புண்ணியத்திலேயும், நீங்க கொடுத்த மாத்திரையாலும் பையன் பொளேச்சுக்கிட்டாங்க. இதைச் சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். நான் வர்றேனுங்க.

பெரியகருப்பன் வாசலில் இறங்கி நடப்பதற்கும் உள்ளிருந்து, "ஐயோ வாருங்கள்" என்று டாக்டரது மனைவி அலறுவதற்கும் சரியாக இருந்தது.

டாக்டர் உள்ளே ஓடினுர். அங்கே, அவர் ஆசையோடு, நம்பிக்கையோடு கொடுத்த அந்த மாத்திரையை விழுங்கி விட்டு, அவர் குழந்தை மீளா நித்திரையில் ஆழ்ந்துகிடந்தது!

பாவம், டாக்டர் அப்போதுகூட நினைத்துக் கொண்டார். "மாத்திரை உள்ளுக்குள் போய் வேலை செய்வதற்குள் குழந்தை போய்விட்டான் என்று.

டாக்டரின் மாத்திரைகளுக்கும், வைத்தியத்துக் கும் அப்பாற்பட்ட ஒன்று—தெய்வம் என்று ஒன்று—மனிதர்களைப் பார்த்துக் கொண்டேயிருக் கிறதென்ற உண்மை அவருக்குத் தெரியவே யில்லை!

பெண்குலமே! பெண்குலமே!!

புலவர் மு. உலகநாதன்

பெண்ணே! இப் பேருலகைப்
பெற்றெடுத்த பெரும்பொருளே!
கண்ணே! உன் கடைவீச்சில்
காலமெலாம் ஆணடிமை!
விண்ணுள்ள கடவுளர்க்கும்
வேண்டுமடி! உன்னினத்தார்!
எண்ணுக நீ பெண்ணின்றேல்
இவ்வையம் இலே! இல்லே!

அறிவுடையார் யார்? என்ருல்
ஆணென்று! பெண்மற்று!
குறிப்பிதனல் பெண்ணுக்குக்
குவலயத்தார் கொடுத்துள்ள
அறிவுடமை தெரிய வரும்!
அறிந்திருப்பாய் நீயிதனே!
பறிபோக வில்லேயடி!
பாவையுன்றன் பெண்ணுரிமை!

ஆணேப்போல் பெண்வலிமை
அடையவிலே! அது இயற்கை!
ஆணேவிட நீ பெருமை
அடைவதற்குத் "தாய்மை" எனும்
பேணுகின்ற பெருஞ்சிறப்புப்
பெண்களுக்கே தனியுடமை!
ஆணெல்லாம் ஆதலினுல்
அடி! பெண்ணே! உன் அடிமை.

புதுமைப்பெண் என இந்நாள்
புறப்பட்டு வந்துள்ள
சிதறியமுத் தாரம் போல்
தெருச் சுற்றும் பெண்குலமே!
எதெதனேச் செயவேண்டும்
என்பதனே நீயறிந்தால்
கதையைப்போல் நான் கூறும்
கருத்துக்கே இடமில்லே!

திருத்துதற்குப் பெண்குலந்தான்
சிறந்ததொரு தொண்டர்படை!
பெருங்குடியன் பெருங்காமப்
பித்தனும் தீக் கொலேஞனுடன்
திருடனும்நல் மனிதர்களாய்த்
திருந்திடுவர் பெண்நினேத்தால்!
அரியவிந்தச் செய்கையினே
ஆற்றுவதார் ஆணினமோ?

ஆண்கள்பல தவறுகளே
அவனியிலே செய்திடலாம்!
ஆண்களென்ன செய்வததை?
ஆணுக்குப் பெண் தாழ்வோ?
ஆண்குலமே "பார்" என்றே
அத்தவற்றைப் பெண்குலமும்
வேண்டுமெனச் செய்வதெலாம்
வெறிச் செயலே! அது தவறு!

மென்மகளே! பெண்மகளே!
மேதினியில் உன்தொண்டை
என்னவிதம் செய்வதென்ன
இப்போது புரிந்திருப்பாய்!
என்னவிது தொண்டுசெயல்
எம்மினத்தின் தனிச்சொத்தோ?
இன்னும் ஆண் மக்களினம்
எமையடிமை ஆக்கஒப்போம்!

என்றுசொலி இடிமுழக்கம்
உரிமையெனச் செய்கின்ருய்!
அன்புக்கே உரியவளே!
ஆணுக்குப் பெண்ணினத்தார்
இன்றல்ல நேற்றல்ல
என்றுமவர் கடன்பட்டார்!
அன்னவிதமே யானும்!
ஆதலினுல் கடமையைச் செய்!

பட்டணத்து அக்கா

ரிசியூர் சங்கர்

சகுந்தலாவுக்குத் தன் பெரிய அக்கா சுப்புலட்சுமி யிடமிருந்து அன்று காலே கடிதம் வந்தது. கடிதத்தைக் கண்டதும் தலேகால் தெரியவில்லே அவளுக்கு. குறைந்தது பத்துத் தடவையாவது திருப்பித் திருப்பிப் படித்திருப்பாள்! அப்படி கடிதத்தில் என்னதான் எழுதியிருக்கிறது என்ருல் அதிசயமாக ஒன்றுமில்லே. கணவனேயும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு பட்டணத்துக்கு வந்து பத்து நாள் தங்கி ஊரைப்பார்த்து விட்டுப்போக எழுதியிருந்தாள். 'பட்டணத்தைப் பார்க்கவா..பார்க்கவா....' என்று ஐந்து வருடமாகத்தான் வருந்தி வருந்தி எழுதுகிருள் சுப்புலட்சுமி! ஏனே இத்தனே வருடமும் இல்லாத மகிழ்ச்சி எங்கிருந்தோ சகுந்தாலாவை இன்று ஆட்டிவைக்கிறது.

'இந்தத் தில்லேயம்பூர் போன்ற குக்கிராமத்தில் என்னேப்போல எந்தப் பெண்களுக்குக் கடிதம் வருகிறது? அப்படி வந்தாலும் பட்டணத்திலிருந்தா வரப் போகிறது?'—என்று ஒரே பெருமை சகுந்தலாவிற்கு. அந்தப் பெருமையும், பட்டணத்திற்குப் போக நினேத்த மகிழ்ச்சியும் அவளே ஏதேதோ செய்தன.

"அடி என் கண்ணே, மேகலே!........பெரியம்மா நம்மைப் பட்டணத்துக்கு வரச்சொல்லியிருக்குடி...... !"

அருகில் வந்த அவள் மூன்று வயது மகளே வாரி அணேத்துக்கொண்டு தம்பட்டம் அடித்தாள். ஒன்றும் புரியாமல் விழித்தது அந்தச் சிறுசு.

இதை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த சகுந்தலாவின் கணவன் ராமையாவுக்குச் சிரிப்பு தாங்கவில்லே. முட்டிக்கொண்டு வந்த சிரிப்பை மூடி மறைக்க மென்று விழுங்கிப்பார்த்தான், முடியவில்லே. வெடித்துக்கொண்டு வந்த சிரிப்பைக் கொட்டிவிட்டான்! போதுமே, அந்த ஒரு கணத்தில் சகுந்தலாவின் கோபம் மின்னலாகத் தோன்றியது. கடுகு பொரிவதைப் போலப் பொரிந்து விட்டாள்.

"அப்படி ஏன் சிரிக்கறீங்க....இந்தத் தடவையும் 'தப்புச்சால்சாப்பு' சொல்லிப் போகாம அடிச்சிடலாம்னு....அதைத்தான் பார்க்கப்போறேன் இந்தத் தடவை. ..ஆமா.." என்று கூறிவிட்டு கோபம் கொப்பளிக்கக் கணவனேப் பார்த்தாள். திடீர் என்று தன் மனேவிக்கு இப்படிக் கோபம் வரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லே. அவளேச் சமாதானப்படுத்தப் போதும் போதுமென்ருகி விட்டது அவனுக்கு.

"சகுந்தலா....ஏன் இப்படி ஒரேயடியா எம் மேலே பொங்கி விழறே....சின்ன எருமை வித்த பணம் வந்துசேரட்டும், உடனே கௌம்பிடலாம்!...." சமாதானப்படுத்தினுன் ராமையா.

"ஆமா....ஆமா..! போனவருஷம் ஆடு வித்த பணம் வரட்டும் போகலாமின்னீங்க; போயிட்டாச்சு! இந்த வருஷம் மாடு வித்தப் பணம் வரத்தான் போவுது, நானும் போகத்தான் போகிறேன்....எல்லாம் என் தலேவிதி!...." குமைந்துகொண்டுவந்த ஆத்திரத்தைக் கொட்டிவிட்டு அந்த இடத்தைவிட்டு ஆவேசமாக நடந்தாள் சகுந்தலா. அதைக்கண்டு பெருமூச்சு விட்டான் ராமையா.

"சகுந்தலா....பாவம்! என்னேக் கட்டிகிட்டு இந்த ஐந்து வருஷமா என்ன சுகத்தைக்கண்டாள். 'நம்ம குடும்பம் முன்னுக்குவரணு'ன்னு கிழிஞ்ச சேலேயைக் கட்டிகிட்டு, வய, வரப்பெல்லாம் எனக்காகச் சேர்த்து மூட்டை தூக்கி அலேஞ்சதுதான் மிச்சம். ஆசையா ஒரு தேர் திருவிழாவுக்காவது

அழைத்துப் போயிருக்கேனு ? அல்லது இந்த ஐந்து வருஷத்தில் ஒரு சினிமாத்தான் உண்டா ? கிடையாது !

“ அவ அக்கா ரெண்டுபேரும் படிச்சவங்களுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கா, அரசாங்கச் சம்பளம் ! பட்டணத்திலே வாழ்க்கை ! ஆனு..சகுந்தலா ? இந்தத் தில்லையம்பூர் குக்கிராமந்தான். ஏதோ நாலு எழுத்துப்படித்த நான், என் கலப்பை.... ரெண்டுகாணி குத்தகை நிலம்.. ! தானும் படிச்ச வனுக்கு வாழ்க்கைப்பட்டு பட்டணத்திலே வாழ னுங்கிற ஆசை எந்தப் பெண்ணுக்குத்தான் இருக் காது ? இந்தக் கவலை நெஞ்சில் பாதியிருக்கு சகுந்தலாவுக்கு ! என்ன செய்யட்டும் ! என் தலை விதி இதுக்குமேலே படிக்கவிட்டதா ? ‘ தாய் மாமன் ’ என்கிற உரிமையோட அவ ஆசைக் கெல்லாம் குறுக்கே நிற்கத்தான் முடிந்தது.. ”

சகுந்தலாவைப் பற்றி எண்ணிய ராமையாவின் கண்கள் கசிந்தன. துண்டை எடுத்துத் துடைத் துக்கொண்டு எழுந்தவன் வேகமாக வெளியே நடந்தான். அன்று மாலை வீடு திரும்பும் போது பட்டணத்துக்குப் பயணமாக நூறு ரூபாய் மடியில் இருந்தது. மறு நாள் வருவதாகவும், ரயிலடி யில் வந்திருக்கும்படியும் சுப்புலட்சுமியின் கணவ னுக்குக் கடிதமும் எழுதிவிட்டான்.

இரவு பூராவும் கண்ணை மூடாது ஜன்னல் ஓர மாக உட்கார்ந்து வேடிக்கைப் பார்த்தவாறே பிரயாணம் செய்தாள் சகுந்தலா. எழும்பூர் வந்ததும் பேந்தப்பேந்த விழித்த தம்பதிகளைச் சிரித்த முகத்தோடு வரவேற்றுன் லட்சுமியின் கணவன் ரகு.

டாக்சி பேசப்பட்டது. ‘ திருதிரு ’ வென்று விழித்துக்கொண்டே தாயும் மகளும் ஏறிக் கொண்டார்கள். அதைப்பார்க்கச் சிரிப்பாக இருந் தது ராமையாவுக்கு. நால்வரும் ஏறியபின் டாக்சி பறந்தது. மகிழ்ச்சிக் கடலில் மிதந்தாள் சகுந்தலா. விழிகளைச் சுழற்றிச் சுழற்றித் தலையை வளைத்து நிமிர்த்தி வீதியெல்லாம் குதூகலத் தோடு பார்த்துவந்தாள். பெரிய பெரிய கடைகள் அழகிய கட்டடங்கள்—கணக்கற்ற கார்கள்—நாகரீக உடைதரித்த மக்கள்—மனிதன் இழுக்கும் வண்டி கள்—இன்னும் என்ன என்னவோ அவள் பார்வையில் பட்டு மறைந்தன. அவற்றைக்கண்ட அவள் கண்கள்.... ? ஆச்சர்யத்தாலும் அதிச யத்தாலும் அகல விரிந்திருந்தன. மனம் என்று மில்லா மகிழ்ச்சியில் பெருமையடித்துக்கொண் டிருந்தது.

டாக்சி பெரிய வீதிகளைக்கடந்து சந்து ஒன்றில் நுழைந்தது. மூக்கைத் துளைக்கும் சாக்கடை நெடி, சற்றே அருவருப்பாக இருந்தது சகுந்தலா வுக்கு. பெரிய பெரிய மாளிகைகளைக் கண்ட கண் கள் நெருங்கியும், உடைந்தும், பாழடைந்தும் கிடந்த பழங்காலத்துக் கட்டிடங்களைக் காண வெறுத்தன.

ஓரிடத்தில் ‘ டக் ’ கென்று டாக்சி நின்றது. அப்படி நின்ற இடம் மிகவும் மோசமாக இருந்தது. அந்தத் தெருவிலே அந்த இடம்தான் ‘ சற்று சுமார் ’ என்று கூற வேண்டும் !

சகுந்தலா....வீடு வந்தாச்சு, இறங்கு....— ” ராமையா கூறினுர்.

“ அடியம்மா! இங்கா...?” என்று கூற நினைத் தாள். ஆனல் அருகில் அக்காள் புருஷன் இருந்த தால் கூறமுடியவில்லை. வாய் பொத்தி இறங்கி ஞள். எல்லோரையும் அழைத்துக்கொண்டு அந்தப் பழைய மாடி வீட்டிற்குள் நுழைந்தார் ரகு. அருவருப்போடு அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே பின்னல் நடந்தாள் சகுந்தலா. எதிரே இரண்டு வயது....மூன்று வயது....நாலு வயது....இப்படி ஆணும் பெண்ணுமாக மூலைக்கு மூலை அறைக்கு அறை கணக்கற்றவை தென் பட்டன. ஒன்றுகூடச் செழிப்பாக இல்லை. வறுமை

‘‘ உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே’’

—புறநானூறு.

நூதனமான உண்மைகளை அறிவதற்குப் பள்ளிக்கூடம் நல்ல இடமில்லை. புத்தகங் களே, நூல் நிலையங்களே அறிவின் களஞ்சியம்

—கார்லைல்.

படிந்த முகம்! வாடிய உடல்! அழுக்கேறிக் கிழிந்த சொக்காய்! அதுவும் இல்லாது 'சிவனே!' என்று சில. அவற்றைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது சகுந்தலாவிற்கு. அவர்களின் துயர் களைப் பார்க்கும்போது பாவமாகவும் இருந்தது. கண்ணை மூடவும் முடியாமல் பார்க்கவும் முடிய யாமல் எப்படியோ நடந்தாள். நீண்டதூரத்தைக் கடந்து மாடிப்படி குறுக்கிட்டது. அதிலும் தட்டுத் தடுமாறி ஏறி விட்டார்கள். எதிர்கொண்டு அழைத்தாள் அன்பு அக்காள் சுப்புலட்சுமி. அவள் பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்குச் சென் றிருந்தன.

" அடி அக்கா !......நீயா இப்படி உருக் குலைந்து போயிட்டே ? " அருகில் அக்காள் புருஷன் இருப்பதையும் மறந்து கத்திவிட்டாள் சகுந்தலா. மகாலட்சுமி மாதிரி கொழு கொழு வென்று புருஷனோடு கிளம்பியவள் முதுமை ரேகையோடிய முகத்தோடு, இளைத்துத் துரும்பாக இருப்பதைக் கண்டால் யார்தான் ஆயாசப்பட மாட்டார்கள் !

ஒருவாறு அன்று காலை ஆகாரம் முடிந்தது. ஆபீசுக்குக் கிளம்பிட்டான் ரகு. ரயிலில் வந்த களைப்பில் அப்பனும் மகளும் அந்தச் சிறிய அறை யில் ஒரு மூலையில் உருண்டுவிட்டார்கள். இரவு பூராவும் தூங்காது வந்திருந்தும் சகுந்தலா விற்குத் தூக்கம் வரவில்லை. அக்கா வற்புறுத்தி யும் தூங்க மறுத்துவிட்டாள். இரண்டே அறைகள் அவர்களுக்கு ! ஒன்று படுக்க, புழங்க, மற் றொன்று சமயலுக்கு! அதை இரண்டாகத்தடுத்துக் குளிக்கவும் இடம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் கண்டபின் சகுந்தலாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. 'அக்கா தடபுடலாக வாழ்வாள், பட்டுசேலைதான் கட்டுவது பங்காளா வில்தான் வாழ்வது ! என்று நினைத்திருக்கிறாள். அந்த நினைப்பு நிர்மூலமாகி விட்டிருந்தது. மாதம் நூறு ரூபாய்க்குள் ஆறு குழந்தைகள், கணவன், மனைவி வாழவேண்டும் என்ற உண்மை தெரிந் திருந்தும், ' நூறு ரூபாய் ! அதுவும் அரசாங்கச் சம்பளம் ! என்று ஆச்சர்யப்பட்டிருந்தவள் இன்று வாயடைத்து ஒன்றும் புரியாமல் உட்கார்ந்து விட்டாள்.

தில்லையம்பூர் கிராமத்திலிருந்து கொண்டு கண்ட அக்காள் ஒரு விதமாக இருந்தாள். ஆனால் பட்டணத்திலிருந்து கொண்டு எதிரேயிருக்கும் அக்காளைப் பார்க்கும் போது..? நெஞ்சே சுக்கலாகி விடும் போலிருந்தது சகுந்தலாவிற்கு.

சுப்புலட்சுமியின் கழுத்திலே அந்த மஞ்சள் கயிறுதான் பாக்கி! நகை நட்டு ஒன்றுமில்லை. காதில் தோடுகூட இல்லை! எல்லாம் மொட்டை யாக இருந்தது. உழைத்து உழைத்து உருக்குலைந் திருந்தாள். சரியான உடைகூட இல்லை. எல்லாம் வறுமையின் மினு மினுப்பாகவே தோன்றின.

அறையின் மூலையிலே ஒரு சில பாத்திரங்கள். பழைய பெட்டி, கிழிந்துபோன ஜமக்காளம்; அழுக்கேறிய தலையணை, மண் எண்ணை விளக்கு! கந்தல் உடைகள்! அந்தோ......சகுந்தலாவின் நெஞ்சு குமறியது.

" அக்கா....! " தொண்டை கர கரத்தது சகுந்தலாவுக்கு.

" என் தங்கச்சி....! " அடுப்பில் வேலையாக இருந்தவள் ஓடி வந்தாள். " எங்கா....இவ்வளவு பெரிய பட்டணத்திலே இப்படித்தான் உன்னால் வாழ முடியுதாக்கா....? " ஏதோ மென்று விழுங்கிக் கேட்டாள் சகுந்தலா. தங்கையின் உள்ளம் எதையோ நினைத்துக் கொண்டு, நினைத்ததைக் கூறத் தயங்குகிறது என்பதைத் தெரிந்து கொண்டபின் சுப்பலட்சுமி " என்ன சொல்றே தங்கச்சி....! "

" ஒன்று மில்லை அக்கா....! " பொறுமை யோடு வேதனையை அடக்க முயற்சித்தாள் சகுந்தலா. சிரித்துக்கொண்டே சமயலறைக்கு நடந்தாள் சுப்புலட்சுமி.

அன்று இரவு கடைசியாகச் சாப்பிட்டுவிட்டு அக்காளும் தங்கையும் வந்தார்கள். படுக்கை அறையில் ஆறும் ஒண்ணும் ஏழு ! ஆம் ! அந்த ஏழு குழந்தைகளும் மூலைக்கு ஒன்றாக உருண்டு கிடந்தன. அவர்களைத் தூக்கி ஒழுங்காகப் போட்டு

> நூல்களே எனக்கு நண்பர். அவர்கள் எல்லா நாடுகளிலும் உண்டு.
>
> —பெட்ரார்க்.

விட்டு தனக்கும் தங்கைக்கும் இடத்தை ஒதுக்கிக் கிழிந்த பாய் ஒன்றை விரித்தாள் சுப்புலட்சுமி. இருவரும் முடங்கினார்கள்! 'நொய்' என்று கொசுப் பட்டாளம் படை எடுத்தது. வீட்டில் ஏதோ ஒருவகை நெடி. சனியனே என்று முகத்தில் உட்கார்ந்த கொசு ஒன்றைத் தட்டித் தீர்த்தாள் சகுந்தலா. அவளுக்கு அந்தக் குறுகிய அறையில் வசதியாகக் கால் நீட்டக்கூட முடிய வில்லை. சட்டென்று ஏதோ நினைத்துக்கொண்ட வளைப்போல, "அக்கா...அத்தானும் அவரும் எங்கேக்கா படுத்திருப்பார்கள்?" என்று கேட்டாள். அரைத் தூக்கத்தில் குறட்டையை வர வழைத்துக் கொண்டிருந்த சுப்புலட்சுமி, "அவங்களா.... கீழே...." என்று மெதுவாகக் கூறிவிட்டு, மீண் டும் மூச்சு வாங்கினாள்.

பெரு மூச்சு விட்டாள் சகுந்தலா. இரவு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. கொசுத் தொல்லை காரணமாக இல்லை! தீ நாற்றம் காரணமாக இல்லை! காற்று இல்லாமல் புழுங் கியது காரணமாக இல்லை! வேறு ஏதோ ஒன்று அவள் நெஞ்சத்திலே நின்று கொண்டு குழம்பச் செய்தது. ஏதேதோ எண்ணினாள். அந்த எண்ணத்திலே இரவு நீண்ட நேரம் அவள் கண்ணை மூடவில்லை!

மறுநாள் காலை நாலு மணிக்கே எழுந்து கொண்டாள் சுப்புலட்சுமி. உடனே குடத்தை எடுத்துக்கொண்டு குழாய்த் தண்ணிக்கு விரைந் தாள். விழித்துக் கொண்ட சகுந்தலா அக்கா ளுக்கு உதவியாகத் தானும் கிளம்பினாள். அக்கா எவ்வளவு தடுத்தும் தங்கை கேட்க வில்லை.

குழாயடியில் முக்கால் மணி நேரம் நின்ற பின் இரண்டு குடம் தண்ணீருக்கு வழி வந்தது. குழாயடிச் சண்டையைக் கண்டு வாயடைத்து நின்ற சகுந்தலா கிடைத்த நீரைத் தூக்கிக் கொண்டு அக்காளோடு நடந்தாள். அப்போது வீட்டிற்கு எதிரே உள்ள தெரு பிளாட் பாரத்தில் படுத்திருக்கும் ஜனங்களைக் கண்டதும் பரிதாபமாக இருந்தது சகுந்தலாவிற்கு. 'ஐயோ..' என்று நினைத்துக்கொண்டு சென்றாள்.

அடுத்த குடம் தண்ணீர் எடுக்க வந்தபோது தான் அவள் வியப்பால் சிலையாக நின்று விட்டாள். அந்த பிளாட் பாரத்தில் ஒரு ஓரத்தில் கூட்டத்தில் இருவராக அவள் கணவனும், அக்காள் புருஷனும் படுத்திருந்தனர். பேய் அறைந்ததைப்போல அக்காளைத் தொடர்ந்தாள் அவள்.

அன்று அக்காளுக்குத் துணையாக ஓடி ஆடி வேலை செய்தாள் சகுந்தலா. இருவரும் ஊர் கதை உற்றார் கதைகளைப் பேசித் தீர்த்தார்கள். இடையிடையே அக்காளின் வறுமை நிலைக்காக வருத்தப்பட்டாள் சகுந்தலா.

"நானும் உன்னைப்போல கிராமத்தில் வாழ்க் கைப்பட்டிருந்தால் நான் ஏன் இப்படி கஷ்டப் படப் போறேன். உன்னைப்போல ராஜாத்தி மாதிரி இருப்பேன்....நீ கொடுத்து வைத்தவள்....!" என்று மனதை மறைக்காமல் பேசினாள் சுப்பு லட்சுமி.

அன்று மாலையே தில்லையம்பூருக்குக் கிளம்ப வேண்டும் என்று பயணப்பட்டாள் சகுந்தலா. ராமையாவுக்கு வியப்பாக இருந்தது. "ஊரைப் பார்க்கலாமா?"—என்று தடுத்தாள் சுப்புலட்சுமி. "இப்போது பார்த்தது ஊர் இல்லையா.... எல்லாம் பார்த்தது போதுமக்கா.." என்று எப்படியோ அன்று இரவே பிரயாணத்துக்கு வழி செய்துவிட்டாள் சகுந்தலா.

ரயிலில் போகும்போது சகுந்தலாவின் மனம் ஏதோ ஒரு வகை கெட்ட பாரத்தை இறக்கி விட்ட நிம்மதியில் இருந்தது. எதிரே தூங்கிக் கொண்டிருந்த தன் கணவனைப் பார்த்தாள். மடியில் தூங்கிய மகளைப் பார்த்தாள். அவள் மனதில் என்று மில்லா நிம்மதி. ஏற்றமும், ஏரும், மண் வெட்டியும் வயலுமாக இருக்கும் தன் கணவனே தெய்வமாகத் தோன்றிற்று. "படித்தவனோடு வாழ முடியவில்லையே.... பட்டணத்தில் அக்காளைப் போல உத்தியோகஸ்தர் மனைவியாக வாழக் கொடுத்து வைக்கவில்லையே!" —என்று ஐந்து வருஷமாகக் குழம்பிக் கிடந்த சகுந்தலாவின் நெஞ்சம் தெளிந்த நீராகியது. மீண்டும் தன் அன்புக் கணவனின் அழகு முகத்தை நோக்கினாள். பின் தன் மகளைக் குனிந்து முத்த மிட்டாள்.

"பேசாத விடுதலேயே, பேசு அம்மா"

"அமுதா"

என்ன விடுதலே பெற்றுவிட்டீர்—நலம்
　　எத்தனே இங்கு அடைந்துவிட்டீர் ?
பெண்ணேக் குகையினுள் வைத்தடக்கி—அவள்
　　பேணும் நலங்களேக் கொள்ளேயிட்டு　　(என்ன)

அன்னே முகத்தினே மறந்துவிட்டு—அவள்
　　ஆண்ட சிறப்பினேத் துறந்து விட்டு
பின்னே விடுதலே பேசுகிறீர்—மகளேப்
　　பெற்றுச் சிறையிலே தள்ளிவிட்டு　　(என்ன)
நேருக்கு நேர் நின்று பார்க்காது—கற்பு
　　நெறியினேக் கண் போல் காக்காது,
ஊருக்குப் பத்துப் பேர் கூட்டமிட்டு—பெண்ணே
　　உள்ளே அனுப்பிப் பூட்டிவிட்டு　　(என்ன)

வீதிக்கு வீதி சிறைக் கதவு—பின்னுல்
　　விக்கியழுகின்ற பெண்கள் நிலே
நீதிக்கு இங்கே இடமேது ?—பெண்
　　நித்தம் அடிமையாய் வாழுகையில்　　(என்ன)
" உண்ணவு மாகாள் பிறரெதிரில்—நெஞ்சம்
　　உணரவுங் கூடாள் மன நிறைவை "
எண்ணக் கொதிக்குது நல்ல உள்ளம்—பகை
　　ஏறிக் கடந்திடும் அறிவு வெள்ளம்!

மானமிழந்தவர்கள்

நா. கோ. வி.

" எப்பொழுதோ, யாரோ செய்த தவறுக்கு மணப்பெண் எப்படி பொறுப்பாவாள் ? " என்று கேட்டேன்.

" எப்பொழுதோ செய்த தவருக இருக்கலாம். அதே தவற்றை இவள் செய்ய மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? "

நாதஸ்வரக்காரர் கல்யாணத்திற்கு வந்திருந்த எல்லோருடைய காதுகளும் செவிடு போகும்படியாக ஊதினர். குளிரினல் விறைத்துப் போயிருந்த கைகளினுல் மேளக்காரரால் எப்படித் தான் அவ்வளவு வேகமாக அடிக்க முடிந்ததோ?

எல்லாரும் அட்சதைகளை மணமக்களின்மேல் வீசவும், மணமகன், மணமகளின் கழுத்தில் தாலியை கட்டக் குனியவும், மணமகனின் தகப்பனர் சுந்திரமூர்த்தி கூடத்தில் நின்று கொண்டிருந்தவர் " நிறுத்துங்கள் கல்யாணத்தை !" என்று கூறிக்கொண்டே மணப் பந்தலை நோக்கி ஓடிவரவும் சரியாக இருந்தது.

நான் அவருடைய கால்களில் விழவில்லை, கெஞ்சினேன்.

" என், கல்யாணத்தை நிறுத்த வேண்டும் ? நாங்கள் ஒன்றும் சீர் வரிசைகளில் குறைவைக்க வில்லையே ?

" இல்லை ! "

" பின் கல்யாணத்தை என் நிறுத்தவேண்டும்? "

" மானமிழந்தவர்களின் சம்பந்தமே எங்களுக்கு வேண்டாம் ? "

" இது முன்பே தெரிந்திருக்க வேண்டும் : "— ராகவனின் நண்பன் கேட்டான்.

ஆத்திரம் கொப்பளித்தது. மாசற்ற என் கல்யாணிக்கு மாசு கற்பித்த இவர்களைக் கொன்று போட்டு விட என் கைகள் துடித்தன. கோபம் குமுறலாக வெளிக்கிளம்பியது.

" சீ ! மனித மிருகங்களே ! வெளியே போங்கள். உங்களிடம் என் கல்யாணியைக் கொடுக்க இருந்தேனே? "

வந்தவர்கள் வெளியேறினர்கள்.

" ராகவா ! இனி நான் என்ன செய்யப் போகிறேன்.....இனி என் பெண்ணை யார் மணப்பார்கள் ? " விக்கினள், பெண்ணைப் பெற்றவள்.

கல்யாணியின் பக்கம் திரும்பினேன். அவமானத்தால் உடல் குன்றி, உளம் வாட, கண்களிலிருந்து கண்ணீர் மழை பொழிய, மணமேடையில் சுருண்டு கிடந்தாள்.

என்னல் அவர்களைத் தேற்றத்தான் முடிந்தது.

ஜானகி அம்மாள் கல்யாணியின் தாயார், ஒரு இளம் விதவை. தன்னுடைய ஒரே மகள் கல்யாணியுடன் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நடத்தி வந்தாள். கல்யாணி ! வளர்ந்து பெரியவளாகி திருமணத்திற்கு நிற்கும் ஒரு பெண். ஜானகி அம்மாள் தன்னல் முடிந்தளவு முயன்று பார்த்து விட்டாள். ஆனல் ஒருவரும், கல்யாணியை

மணக்க முன்வரவில்லை. அதற்கு அவர்கள் கூறிய காரணம் " மானமிழந்தவர்கள் சம்பந்தம் கூடவே கூடாதென்பதுதான் "

இரு தலைமுறைகளுக்கு முன்பு, யாரோ ஒருவர் வாழ்க்கையிலிருந்து வழுக்கிவிடப்பட்டார். அதன் பயனாக ஜானகி அம்மாளுக்கு நீண்ட நாட்கள் திருமணமாகாமலிருந்தது. ஆனால் அது தன் மகளையும் பாதிக்குமென அவள் கொஞ்சமும் எண்ணவில்லை. உளம் நொந்து உடல் குன்றினாள்.

அப்பொழுதுதான், விடுமுறையில் நான் ஊருக்கு வந்திருந்தேன். சிறுவயதிலிருந்தே எல்லோருடனும் விரைவில் ஒன்றிப் போகும் குணம் எனக்கு இருந்தது. பக்கத்து வீட்டில் வசித்துவந்த ஜானகி அம்மாளின் சோகக்கதை என் நெஞ்சில் புகுந்து என்னை வாட்டத் தொடங்கியது. அவர்களுடைய சோகக்கதையை மாற்றியமைக்க என்னால் முடிந்தளவு முயன்றேன். என் பெற்றோர்களின் ஆதரவும், உடன் பிறந்தவனின் ஒத்துழைப்பும் இருந்தன.

பணத்திற்காகக் கல்யாணியைமணக்க விரும்பும் சிலர், கடைசியில் திருமண நாளிற்குச் சில நாட்கள் முன்பு மணக்க மறுத்துவிடுவார்கள்.

ஆனால், திருமண மண்டபத்திற்கு வந்திருந்த எல்லோர் முன்னிலையில் இப்படி ஒரு அவமானம் நேருமென்று நாங்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அன்று—

என் தம்பியை அழைத்துக் கல்லும் கரைந்துருகும் வண்ணம் கெஞ்சினேன். முடிவில் என் தம்பியே கல்யாணியை மணக்க முன் வந்தான்.

நான் எதிர் பார்த்தளவு என்னுடைய பெற்றோர்கள், தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்காமல் தங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்தார்கள். ஜானகி அம்மாளுக்கோ ஒரே மகிழ்ச்சி! இவ்வளவு பெரிய பணக்கார இடத்தில் தன் மகளுக்குச் சம்பந்தம் வாய்க்குமென அவள் கொஞ்சமும் எண்ணவில்லை போலும்.

என்னை, ஜானகி அம்மாள் மனிதனாகக் கருதவில்லை. தெய்வமாகக் கருதினாள் !

திருமணத்திற்கு நாளும் குறித்தாகிவிட்டது. நானே எல்லா வேலைகளையும் செய்தேன்.

அன்று திருமணம்—

மணப் பந்தலிலே தங்கப்பதுமை போல மணமகள் கல்யாணி அமர்ந்திருந்தாள். அவளருகில் என் தம்பி செல்வம் அமர்ந்திருந்தான். கொட்டு மேளம் கொட்டியது !

மாங்கல்யத்துடன், மணமகளை நோக்கித் செல்வம் திரும்பவும், நான் என் கையில் வைத்திருந்த அட்சதைகளை, மணமக்களின் மேல் வீசிவிட்டு, எடுத்த காரியத்தைச் சிறப்பாக முடித்து விட்ட எண்ணத்தில், நின்றவாறே அருகிலுள்ள தூணில் மெல்ல சாய்ந்து கொண்டேன்.

ஜானகி அம்மாள், விழிகளின் கடையோரத்தில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துவிட்டவாறே என்னை நன்றியுடன் பார்த்தாள்.

" டேய், எழுந்திருடா ! இன்னும் என்ன வேண்டியிருக்கிறது? "

என் தலையில் இடி வீழ்ந்தது போலிருந்தது. ஐயோ! என் தகப்பனாரின் குரலல்லவா, அது !

மணப்பந்தலை சுற்றிலும் ஒரே கூட்டமாக இருந்தது. கூட்டத்தை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தேன்.

என்னை நோக்கி வீசியெறிந்த மாங்கல்யத்தை, கீழே விழாமல் பிடித்துக்கொண்டேன்.

" அப்பா, உங்களுடைய முடிவுதான் என்ன ? "

" நமக்கு இந்தச் சம்பந்தம் ஒத்து வராது ! நல்ல வேளை ! நானும் மோசம் போக இருந்தேனே ! "

தம்பியின் பக்கம் திரும்பினேன். அவனைக் காணவே என்கண்கள் கூசின.

இனி, கல்யாணியின் கதி ?

கல்யாணியின் அருகில் சென்று, குனிந்திருந்த அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தினேன். மெல்லிய செவ்விதழ்கள் துடிக்க, கரு விழிகளை மூடிய இமைகள் படபடக்க, என்னை நோக்கிக் கரம் குவித்து வணங்கினாள்.

(466-ம் பக்கம் பார்க்கவும்.)

அமைதி பிறந்தது

மா. பா. குருசாமி, பி.ஏ. (ஆனர்சு).

" அம்மா . . . ." என்ற வேதனையின் குரல் விட்டு விட்டு ஒலித்தது. புரண்டு, நெளிந்து படுக்கையில் கட்டில் வளைந்துகொடுக்கும் சத்தம் அதற்குப் பின்னணியாக அமைந்துவிட்டது. நான் உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து சிறிது பக்க வாட்டில் சாய்ந்து பார்த்தேன். தடுப்புக்குப் பின்னாலிருந்த காட்சி தெளிவாகத் தெரிந்தது.

அந்தப் பெண் படுவது துன்ப வேதனையல்ல, இன்பத்தின் எல்லையில் எழுகின்ற வேதனை. அவள் இன்னும் சில மணி நேரங்களில் தாயாகப் போகின்றாள். அந்தப் பெருமையைப் பெறத் தான் எல்லாவற்றையும் பல்லைக்கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்கின்றாள். கொடி போன்ற அந்த உடலுக்குள் ஓர் உயிர் வளர்ந்து வெளியுலகைப் பார்க்கத் துடித்துக்கொண்டிருக்கின்றது. அந்தப்பெண்ணை மாலையில்தான் கொண்டு வந்திருந்தார்கள்.

மணியைப்பார்த்தேன், பதினொன்று முப்பது. இரவு வேலை என்றாலே இப்படித்தான். என்று நர்ஸ் வேலைக்கு வந்தேனோ அன்றிலிருந்து பாதி நாட்கள் இப்படித்தான் ஊர்ந்து செல்கின்றன. கடமையின் பாரம் கண்ணிமையை மூடாமல் பார்த்துக்கொண்டது.

எழுந்து அந்தப் பெண்ணின் கட்டிலை நெருங்கினேன். கட்டிலுக்குப் பக்கத்தில் அந்தப் பெண்ணின் தாய் அப்பொழுதுதான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கட்டிலில் தூங்கிய அட்டையில் பெயரைப் பார்த்தேன், செல்லம் நெற்றியில் கைவைத்தேன். தூங்கவில்லை போலும், விழித்துக்கொண்டாள். முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"என்னம்மா, அடிவயிறு வலிக்குதா ?"

"அவ்வளவு அதிகம் இல்லைங்க." இதைச் சொல்லும் பொழுது அவள் முகத்தில் வெட்கம் கோடிட்டது. மாலைவேளை வானம்போல் செல்லத்தின் முகத்தில் சிவப்பு வண்ணக் கலவை பளிச்சிட்டது. அந்த முகம் என் தங்கை மல்லிகாவின் வட்ட முகத்தை நினைப்பூட்டியது. மன மயக்கமோ என்னமோ, முகச்சாயல் அப்படியே தெரிந்தது.

"செல்லம், இந்த மருந்தைக் குடித்துவிட்டு தூங்கம்மா," என்றேன். மறுமொழிபேசாமல் கொடுத்த மருந்தை வாங்கிக் குடித்தாள். படுத்துக்கொண்டாள். மல்லிகா மருந்து குடிக்க எவ்வளவு அடம் பிடிப்பாள் ! அவளை மருந்து குடிக்கவைக்க என்னால் மட்டுந்தான் முடியும். ஆனால் அவளின் உயிரைப்பிடித்துவைக்க ஒருவராலும் முடியவில்லையே !

கண்களில் நீர் துளிர்த்தது. சன்னலுக்கருகில் சென்று நின்றேன். வெளியிலிருந்து வந்த குளிர் காற்று உடலை நடுக்கியது. எங்கிருந்தோ ஆந்தை ஒன்று அலறியது. ஆம் . . . . மல்லிகா மறைந்த அன்றும் இப்படித்தான் ஆந்தை அலறியது. வானத்திலே வட்டமிடும் கருமேகங்களுக்குள் என் மல்லிகா மறைந்துகொண்டதைப்போன்ற ஒரு மயக்கம்.

சே, சே . . . . என்ன வாழ்க்கை ? எக்கப் பெருமூச்சும் இதயக்குமுறலுந்தான் வாழ்க்கையா ? என் வாழ்க்கைதான் பட்டமரமாகி விட்டது, மல்லிகாவாவது பெற்றுப்பெருகி வாழ்ந்திருக்கக் கூடாதா ? தலைப்பிரசவம். எவ்வளவு ஆவலோடு நாங்களெல்லாம் ஆணா, பெண்ணா என்பதைக் காணத்துடித்துக்கொண்டிருந்தோம் ! எல்லோரையும் ஏமாற்றிவிட்டுக் கண்ணை மூடி விட்டாளே !

மணிக்கூண்டிலிருந்து எழுந்த அலறல் மணி பன்னிரெண்டென்று சொல்லாமல் சொல்லியது. மனமோ பொங்கிவரும் சோற்றுப்பானையாக மாறி விட்டது. பானை கொதிக்கும்பொழுது அடியிலுள்ள சோற்றுப்பருக்கை மேலே வரத்தானே செய்யும் ? எனது மனதிற்சுடியில் அதுவரை கட்டுண்டு கிடந்த நிகழ்ச்சிகள் விழித்துக் கொண்டன. சிரித்ததும், அழுததும் சேர்ந்து மனதிலே பேயாட்டம் போட்டன.

அவர் . . . . இப்பொழுதும்கூட என்னால் அவரை வெறுக்க முடியவில்லை. அவர் கட்டிய தாலி

எனது மார்பில் புரண்டு கொண்டேயிருக்கின்றது. "செங்கமலம்" என்று அவர் அழைக்கும் தேனினுமினிய குரலைக்கேட்கக் காதுகள் தவங்கிடக்கின்றன. ஆனால் அவரோ என்னை எட்டி உதறித் தள்ளிவிட்டுச் சென்று விட்டார்.

அப்பொழுது அவர் சமூகத்தொண்டில் ஈடுபட்டிருந்தார். எங்கள் ஊரில் காலரா கோரத் தாண்டவம் புரிந்தபொழுது எங்கள் ஊருக்குத் தொண்டு செய்ய வந்த இளைஞர்களுள் அவரும் ஒருவர். ஒரேவாரத்தில் தாயையும் தந்தையையும் சாம்பலாக்கிவிட்டு வாடிவதங்கிய கொடிகளாக இருந்த எங்களுக்குப் பற்றிப் படரும் கொம்பாக வந்து சேர்ந்தார்.

அந்த ஊரிலேயே எங்கள் வீட்டில்தான் பெரிய இழப்பு, இதனைக்கேட்டு ஆறுதல் சொல்ல வந்திருந்தார். "செங்கமலம், பத்தாவதுவரை படித்த நீ இப்படித் துன்பத்தில் ஆழ்ந்து விடலாமா? உன் தங்கையைப்பார். அவளுக்குத் தேறுதல் சொல்லவேண்டியது நீதானே," என்று சொல்லிச் செரல்லி என் இதயபாரத்தைக் குறைத்தார்.

இயற்கையின் எழுச்சி எங்கள் இதயங்களிலும் அன்பு விதையைத்தூவியது. பச்சைப் பசும் பயிராய் அன்பு வளர்ந்தது. சமுதாய ஏற்றத் தாழ்வை மறந்து ஒரு நாள் பதிவுத்திருமணம் மூலம் ஒன்றுபட்டோம். நான் அவர் குடும்பத்தைப்பற்றி அதிகமாகக்கேட்கவில்லை. எங்கள் வீட்டிலேயே தங்கிவிட்டார். ஓராண்டு ஓடி மறைந்தது. கணவரின் அன்பும், தங்கையின் குறும்பும் எனக்கு வகை வகையான இன்பங்களை நல்கின.

ஒரு நாள் இடி இடித்தது. அதுவும் என் வாழ்க்கை மரத்திலேயே விழுந்தது. திடீரென்று அவருடைய தந்தை வந்து சேர்ந்தார். பணமும் குலவெறியும் அவரை மிருகமாக மாற்றி அனுப்பியிருந்தன. ஓராண்டாகத் தன் மகன் இருக்கும் இடந்தெரியாமல் தேடிக்கொண்டிருந்தாராம். இடம் தெரிந்தவுடன் வந்துவிட்டார். இழிந்த குலத்தில் பிறந்த என்னை மணந்து கொண்டதற்காகச் சீறிப்பாய்ந்தார்.

முதலில் அவரும் உறுதியோடுதான் இருந்தார் நான் அழுகையும் கண்ணீருமாகக் கெஞ்சினேன். காலில் விழுந்து மன்றாடினேன். ஆனால் அவர் தந்தையோ விடுபவராக இல்லை. ஊரைக் கூட்டினார். எங்கள் குலவழக்கம் அவருக்குச் சாதகமாகிவிட்டது. வேண்டாத பெண்ணைப் பரிசப் பணத்தையும் முப்பத்தைந்து ரூபாயையும் கொடுத்துத் தீர்த்து விடலாம். அதையே அவரும் செய்தார். ஊர்க்காரர்கள் தலையை ஆட்டினார்கள். நானே கோபுரத்திலிருந்து குப்பை மேட்டிற்குத் தள்ளப்பட்டதை உணர்ந்தேன். ஆனால் தாலியைக்கழற்ற மனம்வர வில்லை.

அதற்குப் பிறகுதான் ஓர் அம்மையார் இந்த வழியைக் காட்டினார்கள். இருந்ததை விற்று நர்சாகப்படித்தேன். தங்கையையும் படிக்கவைத்தேன். மீதியை வைத்து அவளுக்குத் திருமணம் செய்து வைத்தேன். அவள் வாழ்வே எனக்கு இலட்சியமாயிருந்தது. குருடனின் கையிலிருந்த ஒரே கோலும் ஒடிந்ததுபோல் ஓராண்டு மண வாழ்க்கையோடு அவளும் ஓடி மறைந்து விட்டாள். தனி மரமானேன். சிறிது சிறிதாக அல்லற்படும் நோயாளிகளுக்குப் பணிசெய்வதில் இனம் புரியாத இன்பம் இருப்பதைக்கண்டேன். அந்த இன்பம் கூடப் பழைய நினைவு வந்தால் பறந்து விடுகின்றது. எக்கப் பெரு மூச்சுத்தான் எஞ்சுகின்றது.

"அம்மா தண்ணீர்," என்ற செல்லத்தின் குரல் என்னைச் சுட்டியிழுத்தது. பிளாஸ்கிலிருந்த சுடு தண்ணீரை ஊற்றிக்கொடுத்தேன். அவள் முகத்தைச்சுழிப்பதிலிருந்தும் நிலையின்றித் தவிப்பதிலிருந்தும் "வேளை" நெருங்குகின்றதென்பதை உணர்ந்துகொண்டேன். பேச்சுக்கொடுத்து

ஒரு நாட்டின் நலம் பெரிதும் நாடகத்தைப் பொறுத்திருக்கின்றது.

—திரு. வி.க.

எல்லா உடைமைகளிலும் ஞானமே அழியாததாகும்.

—சாக்ரடீஸ்.

அவளது உடல் நோவை மறக்கடிக்கலாமென எண்ணினேன். அது எனக்கு உள்ள நோவைக் கொடுக்குமென்பது தெரியாமல் போய் விட்டது.

"செல்லம், உன் வீட்டுக்காரர் வரவில்லையா ?"

"அவர் நாளைக்கு வருவார். தந்தி கொடுத் திருக்கோம். இதுதான் முதல் பிரசவம். ஆதலால் அம்மா கூட்டிட்டு வந்திருந்தாங்க. நேற்றுச் சாயங்காலத்திலேயிருந்து வேதனை அதிகமாய்ப் போச்சு. அதுதான் இன்றைக்கு இங்கே வந்திட்டோம். அவர் தெரிஞ்சவுடன் ஓடோடி வருவார்."

செல்லத்தின் குரலில் பெருமை பொங்கி வழிந்தது. தமிழ் நாட்டுப் பெண்களின் பண்பு முழுமையாகத் தெரிந்தது. பெண்மை பூத்துக் குலுங்குவது தாய்மையின் போதுதான் போலும்.

அப்பொழுதுதான் படுக்கைக்குப் பக்கத்தில் ஒரு புகைப்படம் விழுந்து கிடப்பதைக் கண்டேன். என் கண்கள் அதில் நிலைத்து நிற்பதைக் குறிப் பால் உணர்ந்துவிட்டாள்.

"இது 'அவர்' படம். ஊருக்கு வரும்பொழுது எடுத்துக்கிட்டு வந்தேன். அதைப் பார்த்தா வேதனை குறைஞ்சு போகுது." சின்னக் குழந்தை போன்று சொற்களை அள்ளி—தயங்கித் தயங்கிச் சிதறினாள், ஏதோ ஒரு ஆவல் உந்தித் தள்ள சிறிது நகர்ந்து நின்று புகைப்படத்தை ஊன்றிக் கவனித்தேன்.

யாரோ என் இதயத்தைக் கசக்கி பிழிவதைப் போலிருந்தது. ஆம்......அது என் கணவர் படம், அப்படியானால்........? செல்லம் என் கணவரின் இரண்டாம் மனைவி. நான் இருக்க வேண்டிய இடத்தில் அவள் இருக்கின்றாள்.

இதுவரை களங்கமற்ற நீல வானமாக இருந்த நெஞ்சில் கருமுகில்கள் கூடிவிட்டன. இடி இடித்தது, மின்னல் வெட்டியது, புயல் வீசியது, பூகம்பம் கிளம்பியது. நாற்காலியில் வந்து அமர்ந்தேன். காற்றிலே அகப்பட்ட விளக்கு துடிப்பதைப்போல நெஞ்சம் துடித்தது, "நான் இருக்கவேண்டிய இடத்தில் அவள்...." இந்த எண்ணம் நல்ல பாலில் நச்சுத்துளியாக விழுந்தது;

"ஐயோ வேதனை தாங்க முடிய வில்லையே, அம்மா" என்று செல்லம் புலம்பத் தொடங்கினாள். பெற்றவள் பதறிக்கொண்டே எழுந்து ஆலாய்ப் பறந்தாள். டாக்டரம்மாவுக்கு ஆள் அனுப்பப்பட்டது.

"நர்சம்மா நீங்கதான் கொஞ்சம் பாருங்களேன். பிள்ளை கிடந்து துடிக்குதே" பெற்ற மனம் பொங்கி வழிந்தது. என் மனதில் ஒரு குறுக்கு வழி. பழிவாங்க நல்ல வாய்ப்பு. என்னை வாழா வெட்டி யாக்கியவரை வாடிக் கருக வைக்க பொன்னான சூழ்நிலை.

"இரம்மா, ஒரு மருந்து தாரேன். குடி" என்று சொல்லிவிட்டு மருந்துப் பெட்டியை அடைந்தேன். அந்தச் சீசாவைக் கையிலெடுக்கும் பொழுது கை நடுங்கியது. கொஞ்சந் தண்ணீரில் இரண்டு சொட்டு ஊற்றினேன். சிவப்பு நிறம். இரத்தமா ? கை நடுக்கத்தில் ஒரு சொட்டு என் வெள்ளை உடையில் பட்டு விட்டது. அது கறை, அது என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தது. என் வெள்ளை மனதில் விழுந்துவிட்ட வெறுக்கத் தக்க வழியை படம் பிடித்துக் காட்டியது. உடலெல்லாம் வியர்த்தது.

கட்டில் பக்கம் பார்த்தேன், அங்கே என் தங்கை துடிப்பதைப் போன்ற உருவெளித் தோற்றம். என் தங்கையையா அழிக்கப் போகின் றேன் ? என் இதயத்தை யாரோ நெருஞ்சி முள்ளால் குத்துவதைப் போலிருந்தது.

"பெண்ணாயிருந்த நீ எப்பொழுது பேயாக மாறினாய் ? தொண்டால் பெற்ற இன்பம் தொலைந்து மண்ணோடு மண்ணாகப் போகின்றது. யாரைக் காதலித்துக் கைப்பிடித்தாயோ, யாரை நெஞ்சக்கோவிலில் வைத்து வழிபடுகின்றாயோ, அவர் வாழ்க்கை கருகுவதால் உன் வாழ்க்கை தழைத்து விடுமா ? அவர் உனக்குத் துரோகம் செய்தாரென்றே வைத்துக்கொள். அடி பைத்தியக்காரி, அதற்கு இந்தப் பேதைப் பெண் என்ன செய்வாள் ?" மூளை கொதித்தது. "அக்கா என்னையா கொல்லப் போகின்றாய் ?" ஆம், அது என் தங்கையின் குரல்தான்.

என் பெண் மனம் விழித்துக்கொண்டது. நான் ஆக்கப் பிறந்தவள், அழிக்க வல்ல. உருவாக்கும் பணியில் ஈடுபட்டவள், உருக் குலைக்கவல்ல.

விறுவிறுவென்று முதலில் செய்ய வேண்டியவைகளைச் செய்தேன். டாக்டரம்மா வந்தார்கள். எல்லாம் செவ்வனே முடிந்தது. ஆண் குழந்தை. அவரை அப்படியே உரித்து வைத்திருந்தது.

''செங்கமலம் கூடவே இருந்து காலாகாலத்தில் செய்யவேண்டியதைச் செய்ததால்தான் இந்தப் பிரசவம் எளிதாய்ப் போய்விட்டது,'' என்று டாக்டரம்மா சொன்னார்கள். செல்லமும் அவள் தாயும் நன்றி ததும்ப என்னைப் பார்த்தார்கள்.

சன்னல் வழியாக என் பார்வை திரும்பிய பொழுது அவர் வருவதைக் கண்டேன். வேக மாகப் பக்கத்தறைக்குச் சென்றேன். குழந்தை யைப் பார்த்து அவர் முகத்தில் மகிழ்ச்சி கூத்திடுவதைத் திறந்த கதவு வழியாகக் கவனித்தேன்.

''அத்தான், இங்கே இருந்த நர்சாலேதான் எல்லாம் நல்லபடியா ஆச்சு. அந்த அம்மா தெய்வம் போல. நீங்க அதைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுங்க. அடுத்த அறைக்குத்தான் போயிருக்கு.'' செல்லம் சொல்லி முடிக்க அவர் நடந்து வரும் ஓசை தெளிவாய்க் கேட்டது.

கொல்லைப்புற வாசல் வழியே வேகமாக வெளி யேறினேன். என் மனதில் அமைதி பிறந்தது. கால்கள் வீட்டை நோக்கி என்னை இழுத்துச் சென்றன. பிறந்ததின் பயனைப் பெற்றதை அறிந்துகொண்டேன்.

மகளே பாடு!

தி. நா. அறிவுஒளி

முதல்

இன்பத் தமிழ்ப் பாடல் ஒன்றுபாடு! —மகளே!
அன்புக் கலை மணக்கும் அழகிசையோடு! (இன்)

இடை

துன்பக் கறையெல்லாம் ஓடும்; வாழ்வில்
இன்பக் கலைவளம் கூடும்; ஆழ்ந்தே (இன்)

கடை

நெஞ்சத்து அழுக்கெல்லாம் நீங்க; மேதை
கொஞ்சும் எழில் உணர்வு ஓங்கத்; தாயே! (இன்)

போருலகத் துன்பமெலாம் மாய; அன்புச்
சீருலவும் இன்பநலம் தோய; நன்கு (இன்)

பேரமைதி உள்ளமதில் ஊன்றி; பண்ணின்
சீரமைதி எண்ணமதில் தோன்றக் கண்ணே! (இன்)

தாலி - வேலி

கவிஞர் சி. இரா. சாரநாத்.

''அம்மா, மேனேஜர் உங்களைக் கூப்பிடறுர்!''— அறுபது வயது ஆபீஸ்பாய் இப்படிக் கூறியதும் தட்டெழுத்து பொறிகளிடையே ஓடிக்கொண்டிருந்த வெண்டைக்காய் விரலோட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு—

..நிலையின்றி அங்கிங்கெனுதபடி எங்கும் ஓடியாடும் விழிகளை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்—' பரிமளா '

''எம்பா, புது மேனேஜர் எப்படி? கோபக்காரா இல்லே சாந்தமா..'' அவள் முடிக்கவில்லை. ஆனாலும் முழுக் கேள்வியை அவன் புரிந்துகொண்டான். எல்லோரும் கேட்ட கேள்விதானே இவளும் கேட்கிறுள்.

''சுடுமூஞ்சி அம்மா! அவரு இந்த வேலையை எத்திக்கிட்டு சரியா மூணு மணி நேரம் ஆகுது. வந்ததிலே இருந்து அவர் முகத்திலே ஒரு சிரிப்பைக் கூட நான் பார்க்கலே. இந்த மூணு மணி நேரத்துக்குள்ளே முப்பது பேர் மேலே எரிஞ்சு விழுந்து இருப்பார்!''—பழைய—தங்கமான மேனேஜர் போய் இவர் வந்த ஆதங்கம் அவனுக்கு.

இதயம் டைப் மிஷின்போல் டக்டக் கென்று அடிக்க மெதுவாக நடுங்கியபடி மேனேஜர் அறைக்குள் நுழைந்தாள்.

பைலைப் புரட்டிக்கொண்டிருந்தார் மேனேஜர். அவரது முகம் சிவந்திருந்தது. கண்கள் கோபத்தைக் கொப்பளித்துக் கொண்டிருந்தன. பரிமளாவின் உடலைப் போலவே அவரது உடலும் நடுங்கிக் கொண்டுதான் இருந்தது. ஆனல்....

பரிமளா உடலின் நடுக்கத்திற்கும் அவரது உடல் நடுக்கத்திற்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

பரிமளாவின் உடல் பயத்தால் நடுங்கியது!

அவரது உடல்—கோபத்தால் நடுங்கியது!

''கூப்பிட்டீங்களா சார்'' —மெதுவாகப் பேசினுள்.

''நான்சன்ஸ்! பொறுப்பில்லாத ஜென்மங்கள் உங்க....!''—கோபத்துடன் இரைந்துகொண்டே நிமிர்ந்த மேனேஜர் பரிமளாவைப் பார்த்தார் அவ்வளவுதான். அவர்—

ஆடவில்லை!

அசையவில்லை!

அப்படியே உட்கார்ந்திருந்தார் சில மாத்திரை பொழுது. அவரது கைகளிடையே இருந்த பைலும் கீழே விழுந்ததை அவர் உணரவில்லையோ?

கோபத்தில் கோரமாகக் காணப்பட்ட அவரது முகத்தில் இப்போது சிரிப்பு முளைத்து அந்த முகத்தை மேலும் கோரமாக்கியது!

''ஹி..ஹி..! நீங்கதான்..''— என்றபடி தன் பெருத்த உடலை அசைத்தார் புது மேனேஜர்.

''சேல்ஸ் டிபார்ட்மெண்ட் டைப்பிஸ்ட் பரிமளா!''

''ஆமா ஆமா! சொன்னுங்க, நீக்கிறீங்களே, உட்காருங்களேன்!''—எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டினுர்.

''இல்லேசார், நீங்க கூப்பிட்ட விஷயம்..?'' என்று அவள் கூறுவதற்குள் ஏதோ முடிவிற்கு வந்தவராக, ''உங்க டிபார்ட்மெண்டை

மாத்தியிருக்கேன். இனி நீங்க என் ரூமிலேயே இருந்து நான் சொல்றதுகளை டைப் பண்ணனும்! சேல்ஸ்லே வேற ஆளைப் போட்டுக்கலாம்!"—என்ருர்.

"எஸ் சார்!"—இதைத் தவிர வேறு என்ன சொல்வது என்றே அவளுக்குத் தோன்றவில்லை.

2

பரிமளாவின் பட்டு விரல்கள் தட்டெழுத்துப் பொறிகளிடையே ஓடிக் கொண்டிருந்தன.

'டக்கு டக்கு டக்..டடக்'—தட்டெழுத்துப் பொறி ஓசை மட்டும் கேட்டது. மற்றப்படி அந்த அறையில் அமைதிதான்.

பைலை மூடி விட்டு நிமிர்ந்தார் மேனேஜர். கைக்கடியாரத்தைப் பார்த்தார். மணி 4·37. அலுவலகம் முடிய அரை மணி நேரம்தான் இருக்கிறது.

"பரிமளா!"— காண்டா மிருகம் பேசினுல் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவரது குரல்.

"சார்! "—என்றபடி நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். அந்தக் கோண முகத்தில் வழியும் ஒருபடி அசடு..சிரிப்பு வந்தது பரிமளாவுக்கு. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

"இப்படி வா!"—என்று அவர் கூறியதும் அடக்கத்துடன் எழுந்து அவர் முன் பிரசன்ன மானுள்.

"வேலை முடியலியா?"

"இல்லைசார், பாப்சன் கம்பெனி லெட்டர் மட்டும் பாக்கி. ஐந்து நிமிஷத்தில் முடிந்துவிடும்."

"ஓஹோ! ஆமா உனக்கு என்ன வயிசாச்சு!"

"ஒண்ணு மில்லே சார்! கூடிப் போனு பத்தொன்பது..இருபது..அவ்வளவுதான் சார்!"

"ஓஹோ!..ம்..இப்படி அறுபது ரூபாய் பிச்சைக் காசுக்கு மாடா உழைக்கணும்னு உன் தலை யெழுத்துப் போல. அழகிருக்கு, அறிவிருக்கு, நெனச்சா பெரிய சினிமா ஸ்டார் கூட ஆகலாம்."

"சார்"!—நடுங்கிய குரலில் இடைமறித்தாள் பரிமளா.

"இல்லே, நான் சொல்றது என்னனு வாழ்க்கையிலே அதிர்ஷ்டம் எங்கிருந்தோ ஒரு முறைதான் வரும் அது எப்போ, எப்படி வரும்னும் சொல்ல முடியாது. அப்படி வந்ததைத்தவற விட்டா பிறகு கடைசி வரையும் மீள முடியாது. இதிலே பாரு. என்னையே எடுத்துக்க. அப்படி எனக்கு என்ன வயசாச்சு. நாற்பது வயசும் ஒரு வயசிலே சேர்த்தியா? என் மூத்த சம்சாரம் காலமானதுமே எல்லோரும் மறுமணம் செஞ்சுக்க சொன்னுங்க. செய்றது பெரிசு. நல்ல பொண்ணு—உன்னைப் போல பாங்கான பொண்ணு கெடைக்கவேணும்!—பேசிக் கொண்டே போனுர் பெரிய மனிதர்.

"சார்! எனக்கு வேலை இருச்கு, அந்த லெட்டர்"—தப்பப் பார்த்தது மான். விடுமா புலி?

"அவசர மில்லே; நாளைக்கு அதை டைப் பண்ணலாம். வாயேன் ரேஸ் கோர்ஸ் வரை அப்பிடி ஜாலியா வாக்கிங் போயிட்டு வரலாம்.

"சார்..வந்து..!"—மருண்டது மான். விடுமா புலி?

"பாரு பரிமளா, என்னைப் போல படிச்ச, பணம் படைச்ச பெரிய மனிதன் உனக்குக்கணவனாக.. என்ற படி எழுந்தார் மேனேஜர்.

"மன்னிக்கனும், எனக்கு வேலை இருக்கு!"—என்று கூறியவள் திரும்பினாள்.

"பரிமளா!—என்றபடி அவளது கையைப் பிடிக்கப் போனார் மேனேஜர். அதற்குள்—

தன் ஜாக்கட்டுக்குள் இருந்த தாலியை வெளியே—ஜாக்கட்டின் மேல் போட்டாள். மறைந்து மின்னிய அம்மஞ்சள் கயிறு இப்போது வெளியே மின்னி அவளைச் சுற்றி வேலி போட்டது,

தாலியைப் பார்த்த மேனேஜர்—

அவள் மிஸ் அல்ல; மிஸஸ் என்பதைத்தெரிந்து கொண்டதாலோ என்னவோ—திரும்பி விட்டார்.

* * * * *

ஆபீஸை விட்டுப் புறப்பட்ட அவளுக்கு நேரே வீடு செல்ல மனம் இல்லை. நடந்து கொண்டே இருந்தாள். அவள் நடக்க நடக்க தல்லாகுளம் ரஸ்தா நீண்டு கொண்டேதான் இருந்தது.

மேனேஜர் படித்தவர்; பட்டதாரி. அது மட்டுமா வயது முதிர்ந்த அவர் அவளை மகளைப் போலல்லவா நடத்தவேண்டும். ஆனால் அவரோ—சபல புத்தி அவரையும் ஆட்கொண்டதே. பெண்ணுரிமை பெண்ணுரிமை என்று தொண்டை கிழிய மேடை தவறாமல் முழங்குகிறோமே—அது பேச்சோடு மட்டும் தானா? பெண்ணுக்கு உரிமை தரும் மனத்திடம் நமக்கில்லாததால்தான் இப்படிப் பேசியாவது திருப்திப் படுகிறோமோ?

பரிமளாவுக்கு இது புது அனுபவம் அல்ல. கல்லூரியில் படிக்கும் போது—மாணவர்கள் அவளைப்பின் தொடர்ந்தனரே அது கூடப் பெரிதல்ல. இளவட்டத்தின் உணர்வலை கட்டுக்கு அடங்காது என்று விட்டு விடலாம். அந்தக் கிழட்டுப் புரோபஸர் கூட அல்லவா அவளிடம் ஏறு மாறாக நடக்க ஆரம்பித்தார். வேலியே பயிரை மேய்ந்தது என்பது போல் மாணவன் இப்படித் தவறாக நடந்தால் அவனைக் கண்டித்துத் திருத்த வேண்டிய அந்தத் கழுகு மூக்குப் பேராசிரியரே அவளிடம் தவறினால்—?

கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு மட்டும் என்னவாம்? வெளியே எத்தனைப் பருந்துகள் வட்டமிட்டன இந்தக் கிளியிடம்.

காந்தி ஒரு முறை கூறினாராம், "இந்தச் சுதந்திரத்தை வைத்துக்கொண்டு மட்டும் நாம் சுயராஜ்யப் பிரஜைகள் என்று கூற முடியாது. ஒரு இளம் பெண்—அழகான பெண்—தனியாக—ஏராளமான நகைகளை அணிந்து—காட்டு வழியே பயமின்றி—ஆபத்தின்றி செல்லும் நாள் எதுவோ அதுவே சுயராஜ்யத்தின் ஆரம்ப நாள்!"—என்று

நீண்டதூரம் நடந்ததாலோ அல்லது மனச் சுமையைத் தாங்க முடியாததாலோ அவளது கால் வலி கண்டன. நின்றவள் சுற்று முற்றும் பார்த்தாள்.

இடப்புறத்தில் ஜனத்திரளிடையே மிதந்து கொண்டிருந்தது சி. எம். வி· பார்க்.

உள்ளே நுழைந்து புற்றரையில் அமர்ந்தாள் சிந்தனை தொடர்ந்தது.

இப்படித்தான் அன்றொருநாள் தோழி ஒருத்தியின் திருமணத்திற்குப் போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் பரிமளா.

அப்போது நேரம் இரவு பத்து மணி; என்றாலும் சாதாரணமாக—அவள் நடந்து கொண்டிருந்த தெற்கு மாசி வீதியில் இரவு பன்னிரண்டு மணிக்குக் கூட ஜன நடமாட்டம் மிகுதியும், பட்டப்பகலை பழிக்கும் பால் வண்ண விளக்குகள் எரிந்து கொண்டுமாய் இருக்கும். ஆனால் அன்று பார்த்து ஞாயிற்றுக் கிழமையாயினமையால் எல்லாக் கடைகளும் மூடப்பட்டு விளக்கொளி அற்றிருந்தன. போதாததற்குப் பெருத்த மழை—கார் மேகம்—தெரு விளக்கு எரியாமை என்று இத்தனையுமாய்ப் பெரும் சதியே நிகழ்த்தி விட்டன.

தோழிகூடச் சொல்லிப் பார்த்தாள், "இந்த மழையில் போக வேண்டாம் இரவு தங்கிக் காலையில் போகலாம்" என்று. ஆனாலும் கண்பார்வை இல்லாத வயதான தாய் மட்டும் வீட்டில் இருக்கும் போது பரிமளாவால் நிம்மதியாக இங்கு இருக்க முடியுமா? அதனால்தான் பிடிவாதமாகப் புறப்பட்டாள். ஒரு சைக்கிள் ரிக்ஷாக் கூட

கிடைக்காததால் தோழியிடம் குடை ஒன்றை இரவல் பெற்றே துணிவுடன் தன்னந்தனியாகப் புறப்பட்டாள்.

வைகையாற்றில் ஓட வேண்டிய தண்ணீர் தெற்கு மாசி வீதியில் ஓடியாதோ என்று எண்ணும்படி மழை நீர் ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு கையால் சேலையை நீரில் நனையாமல் சற்றே தூக்கிப் பிடித்தபடியும் மறுகையால் குடையைப் பிடித்தபடியும் விளக்குத்தூணைத்தாண்டி விட்டாள் பரிமளா. இன்னும் சற்றுத் தூரம்— போனால் போதும். வீடு வந்து விடும். மூச்சும் நிம்மதியாக விடலாம் அதற்குள்—

'தடால்!'

பரிமளா கீழே விழுந்து விட்டாள். ஆம் சிறு வெள்ளம் போல் ஓடும் அம்மழைநீரில்தான் குப்புற விழுந்தாள் அக்கோகிலவாணி !

விழுந்தது கால் தடுக்கியதால் அல்ல ;
விழுந்தது நீரோட்டத் தள்ளுதலால் அல்ல;—பின்

ஆமாம் ! பெண்மையைப் பேணிக்காக்க வேண்டிய ஆணினத்தில் தவறிப் பிறந்த ஒரு சோமாரியின் கோமாளித்தனத்தால் அவள் நீரில் விழுந்துவிட்டாள். மிருகமாகப் பிறக்க வேண்டியவன் தவறி மனிதனாகப் பிறந்தனன் போலும்!

ஆரம்பத்தில் இருந்து அவளைப் பின்தொடர்ந்து வந்த ஒரு 'காலாடிப்பயல்' சமயம் பார்த்து அவள்மீது எதிர்பாராதவிதமாய் வேண்டுமென்றே மோத—

விழுந்துவிட்டாள். அவள்மேல்—
அவனும் விழுந்தான்.

பரிமளாவுக்கு வெகு ஆத்திரம். குடையால் அவனை நையப் புடைக்கவேண்டும்போல் ஆவேசம். அவனோ பெரிய கேடி போல் இருந்தான். யாராய் இருந்தால் என்ன ? பரிமளாவும் பார்க்கப் பரம சாதுதான். ஆனால் தன் மானம், கற்பு போன்ற வற்றிற்குப் பங்கம் வரும் என்று தெரிந்தால் பெண்புலியும் அவளிடம் சீற்றத்திற்குப் பாடம் கேட்க வேண்டும் !

காற்று தென்றலாக வீசும்போது எவ்வளவு இதமாக இருக்கிறது...அதுவே புயலாக மாறினால் ......? இதுபோல்தான் பெண்மையும்கூட. அமைதி அவர்களிடம் குடிகொண்டிருக்கும்' உண்மை. ஆனால் கற்புக்கு பங்கம் வரும் போதோ வீரத்திற்கே ஒரு சிறந்த இலக்கணம் வகுக்கலாமே அவர்களைக் கொண்டு !

இருந்தும் பரிமளா ஒன்றும் செய்யவில்லை அவனை. காரணம் அவளுக்கு அவ்வளவு வேலையை வைக்கவில்லை பிரபாகர். பிரபாகர் வேறு யாருமல்ல ; பரிமளாவின் மாமன் மகன் தான். முதலாட்டம் சினிமா பார்த்துவிட்டுக் கொட்டும் மழையில் நனைவானேன் என விளக்குத் தூணுக்கருகில் ஒதுங்கி இருந்தவன் இக்காட்சியைப் பார்த்துவிட்டான். போவது பரிமளாதான் என்பது அவனுக்குத் தெரியாது. இருளில் சரியாக அடையாளம் காணக்கூடவில்லை. ஆனாலும் அவள் ஒரு பெண் என்பதை நிச்சயமாக அறிவான். மெய்யான ஆண்மை படைத்தவன் ஒரு பெண்ணிற்குப் பங்கம் ஏற்படுவதைக் காணச் சகிப்பானா ? அந்த முறையில்தான் அந்த ரௌடியைத் தூக்கி நிறுத்தி மழையில் ஒரு கை பார்த்தான் !

பரிமளாவுக்கு இச்சம்பவத்தை நினைத்ததும் இன்று நடந்ததுபோல் தோன்றியது. அவர்.... அத்தான் மட்டும் அந்த வேளையில் வந்திரா விட்டால்....ஒருகணம் உடல் சிலிர்த்தது.

தன்மேல் ஏதோ விழுவதை உணர்ந்த பரிமளா சிந்தனை உலகில் இருந்து மீண்டாள். விழுந்தது— பொடி கல் !

கல் வந்த பக்கம் பார்த்தாள். நான்கு கல்லூரி மாணவர்கள் (அவர்களின் உடை, பாவனை, பேச்சுகளில் இருந்து அப்படித்தான் ஊகித்தாள் பரிமளா) வம்பு மகாநாட்டை நடத்திக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் செய்த திருக்கைங்கரியம்தான் இது என்பது அவனது கையில் இருந்த சில சிறு கற்கள் பறை சாற்றின.

பரிமளா அவர்கள் பக்கம் திரும்பியதும்—
கண்ணடித்தான் ஒருவன்—
காலரைத்தூக்கிவிட்டுக் கொண்டான் மற்றவன்,
சீட்டியடித்தான் இன்னொருவன்,
விஷமச் சிரிப்பை உதிர்த்தான் மற்றொருவன்.

(449-ம் பக்ககம் பார்க்கவும்)

காலத்தின் அருமை

கே. வி. சுப்பாராவ்

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆறு நாட்களும் விடாது ஆபீஸில்உழைத்த நான் பகல் போஜனத்தை முடித்தபின் வீட்டின் ஹாலில் இருந்த ஊஞ்சலில் சாய்ந்த வண்ணம் தாம்பூலம் தரித்துக்கொண்டே நிம்மதியாகச் சற்றுக் கண்ணயர எண்ணிய சமயம் அங்கு வந்து பிரசன்னமானுள் என் அருமை மனைவி—மங்கையர்க்கரசி.

"என்ன உங்களைத்தானே! நேற்று மாலையில் கூறியதை மறந்துவிட்டீர்களா? அடுத்த ஞாயிறு ஆகட்டும், அடுத்த ஞாயிறு ஆகட்டும் என்று எத்தனை நாள்தான் இப்படித் தட்டிக் கழிப்பது? கிழிந்த இந்த முந்தாணியும் சாயம் வெளுத்த புடவையையும் உடுத்திக்கொண்டு எவ்வளவு நாள்தான் நானும் காலம் தள்ளுவது? தடையெதுவும் சொல்லாமல் இப்பொழுதே கிளம்புங்கள் கடைக்கு?" என்று ஆர்ப்பரித்தாள் அவள்.

என் வாழ்க்கைத் துணைவி கூறியது முற்றிலும் உண்மையே. அவளுக்குப் புடவை வாங்கும் அப்பயங்கர நிகழ்ச்சியை நானும் என்னுல் முடிந்தவரை ஒத்திப்போட்டுத்தான் வந்தேன். என்றாலும், அவள் தற்சமயம் என் எதிரே வந்து நின்றுகொண்டு விடாப்பிடியாக வற்புறுத்தியதால் வேறு வழியெதுவுமின்றி அவள் விருப்பத்தின்படியே கிளம்பவேண்டியதாயிற்று. நான் புறப்பட உறுதிகொண்டதையறிந்த அவள் உள்ளம் உவகையால் பொங்கி வழிந்தது என்றுல் அது மிகையாகாது. பீரோவைத் திறந்தேன். உள்புறம் சற்று இலேசாக அங்குமிங்கும் கிழிந்திருந்த மலைப்பாம்பு பார்டர் மடிப்பு அங்கவஸ்திரத்தை மதிப்பாக எடுத்து அணிந்துகொண்டு வீட்டினின்றும் வெளியேறினேன் என் மனைவியுடன்.

புறப்பட்ட அச்சமயம் வானத்திலே இருண்ட கருமேகங்கள் ஒன்று திரண்டு குமுறின.

"என்ன இது! பலத்த மழை வரும் போலல்லவோ......"

"என் வராது? ஒரு நாளுமில்லாத திருநாளாக எனக்குப் புடவை வாங்கித்தர நீங்கள் கிளம்பினுல்!" என்று ஒரு போடுபோட்டுக்கொண்டே மீண்டும் வீட்டினுள் சென்ற மங்கையர்க்கரசி கையில் குடையுடன் திரும்பி வந்தாள்.

கால்மணியில் கடைத்தெரு அடைந்தோம். ஜவுளிக்கடை அடையுமுன் காலியாயிருந்த என்பொடி டப்பியை நிரப்ப விரும்பி எதிரே இருந்த ஏகாம்பரம் பொடிக்கடைக்குச் சென்றேன் நான். செல்லும் வழியிலே அகஸ்மாத்தாக எங்கள் பக்கத்து வீட்டுப் பங்கஜம் வந்து சேர்ந்தாள் என் மனைவியினருகில். அவ்வளவுதான். இருவரும் பேச்சில் ஈடுபட்டனர். நெருங்கிய சிநேகிதிகளல்லவா அவ்விருவரும். 'தொண, தொண'வென்ற அவர்களின் பேச்சை எப்படியாவது முடித்துக்கட்ட முடிவுகொண்ட நான் "'மங்கை! இந்தா உன் புடவைக்கான ரூபாய். நீங்களிருவரும் ஜவுளிக்கடை சென்று 'சட்புட்'டென்று புடவை வாங்கிவந்து சேருங்கள்? இதோ தெருக்கோடியில் உள்ள பிள்ளையார் கோவில் வாசலில் காத்திருக்கிறேன்" என்று கூறினேன்.

சற்றும் தாமதமின்றி என் கையினின்றும் ரூபாயைப்பெற்ற அவள் 'அப்படியே ஆகட்டும்' ஐந்தே நிமிஷத்தில் திரும்பி விடுகிறேன் 'புடவையுடன்' என்று கூறியவாறே பங்கஜத்தை அழைத்துச் சென்றுள் "ஜம்புலிங்க விலாஸ்" ஜவுளிக்கடைக்கு. மங்கையின் பழக்கப்படி ஐந்து நிமிஷத்திலே திரும்பி வருகிறேன் என்றுல் குறைந்தது ஐம்பது நிமிஷமாவது பிடிக்கும் அவள் திரும்பி வர, என்று நன்கு அறிந்திருந்த நான் பிள்ளையார் கோயிலை நோக்கி நடந்தேன். கோயிலை அடைந்த எனக்கு உடனே ஒரு சிறிய ஏமாற்றம். கோயில் பூட்டிக்கிடந்தது ஒன்று, வெளிப்புறமிருந்த பந்தல் அன்றுதான் பிரிக்கப்பட்டிருந்தது மற்றுென்று. இதோடுகூடச் சற்றும் சந்தடியில்லாமல் கனத்த துளிகளுடன் மழையும் ஆரம்பித்தது அச்சமயம்.

உடனே என் கைக்குடையைத் திறந்து பிடித்துக்கொண்டேன். திறந்ததுதான் தாமதம். என் வீட்டின் கூரையைப்போலவே அக்குடையிலும் பல கிழிசல்களை அப்பொழுதுதான் நான் பார்க்க நேர்ந்தது. அச்சமயம் என் சட்டையின் மேலும் முகத்தின் மீதும் தாக்கிய சின்னஞ்சிறு மழைத்துளிகளை என் கைக்குட்டையினுல் துடைத்த வண்ணமிருந்தேன். 'அட கடவுளே! ஒரு விடுமுறை நாளன்று இப்படியுமா கொட்டிடும் மழையில் அகப்பட்டுக்கொண்டு அவதிப்பட வேண்டும் நான் நடுத்தெருவிலே,' என நினைந்து நினைந்து ஏங்கினேன்.

இச் சமயம்தான் முன்பின் நான் அறியாத ஒரு பரட்டைத் தலை பேர்வழி சகஜமான முறையில் என்னை அண்டி 'சார்! மழை சற்று நிற்கும் வரை தங்களது குடையில் நானும் கொஞ்சம் இடம் பெறலாமல்லவா?' என்ற பீடிகையுடன் என் குடையின்கீழ் பாதி இடத்தை ஆக்ரமித்துக்கொண்டேவிட்டான் அந்த ஆசாமி.

அந் நபரின் ஆக்ரமிப்பை அவ்வளவாக. அச் சமயம் ஆமோதிக்கவில்லை நான் என்ருலும் அவன் கோரிக்கைக்கு ஓரளவு இணங்கத்தான் வேண்டியிருந்தது. காரணம், சுற்றுப்புறத்தில் மழைக்கு ஒதுங்கக்கூடிய வேறிடமில்லாததுவே. என் குடையில் புகலிடம் பெற்ற அப் பேர்வழியும் கீழ்க்கண்டவாறு மெல்ல பேச்சை ஆரம்பித்தான். "பாருங்கள் சார்! இப் பரந்த உலகத்தில் இதே நேரத்தில் எவ்வளவு பேர் எவ்வளவு காரியங்களுக்காக காத்துக்கிடக்கிருர்கள். நான் மழை நிற்பதற்காகக் காத்திருக்கிறேன். நீங்கள்?" "என் மனைவிக்காகக் காத்திருக்கிறேன், ஜவுளிக் கடை சென்றிருக்கிருள் புடவை வாங்கிவர".

"அப்படியா விஷயம்! நான் எதற்காகக் கூற வந்தேன் என்ருல் மனிதனின் வாழ்நாளில் பெரும்பகுதியான காலம் காத்துக்கிடப்பதிலேயே வீணுகக் கழிகிறது. காத்திருக்க நேரும் அந் நேரங்களை வீண் போக்கக் கூடாது என்பதே என் கொள்கை, கோட்பாடு, எல்லாம்."

"சிறந்த கொள்கையேதான்" என்று பதிலிறுத்த நான் அப்பொழுதுதான் என் மூக்கின் மீது சொட்டிய ஓர் மழைத்துளி நீரைத் துடைத்துக் கொண்டேன். "இன்ஞெரு விஷயமும் கூட, என் குடும்பத்தைப் பொறுத்தமட்டில். காத்திருக்க நேரும் நேரங்களை நாங்கள் எவருமே வீணுக்குவதில்லை. உதாரணமாகப் பள்ளியில் படிக்கும் என் சிறுவன், சிங்காரம் மருந்து வாங்கி வர டாக்டரிடம் செல்லுகிருன். நோயாளிகள் நெருக்கடி மிகுதியால் அங்கு அவன் காத்திருக்க நேரும் காலத்தில் தான் மறுநாள் பள்ளியில் ஒப்புவிக்க வேண்டிய பின்னம் வாய்ப்பாடுகளை மனப்பாடம் செய்து விடுகிருன். வாய்ப்பாடு படிந்து விடுகிறது அவன் மனதில் ஆணித்தரமாக. —காத்திருக்கும் நேரமும் முடிந்து விடுகிறது சுலபமாக.

"பலே பலே! பரவாயில்லையே உங்கள் பையன்" என்றேன் நான். உண்மையில் அவன் கூறியதில் நல்ல கருத்து இருக்கத்தான் செய்தது. அதே சமயம் மழையும் வலுக்க ஆரம்பித்தது. எனினும் பேர்வழி பேச்சை மேலும் தொடர்ந்தான்.

"கேளுங்கள் சார்! இதையும். அஸ்கா வாங்கி வர என் மனைவி ரேஷன் கடைக்குப் போகிருள். அங்கு க்யூவில் நின்று கார்த்திருக்க வேண்டிய சந்தர்ப்பம் சில சமயங்களில் ஏற்படுகின்றன. அப்படி காத்திருக்க வேண்டிய தன் அருமையான காலத்தை அவள் வீணே கழிக்காது பின்னல் பனியன் போடுகிருள். அல்லது கைக்குட்டையில் பூத்தையல் போட்டுப் பழகிக்கொள்கிருள். இன்ஞெரு உதாரணமும் கூட, என்

'அடக்கமும் அன்பும் துன்பத்தால் கற்றுக் கொள்ளப்படும்.".

—ஜார்ஜ் எலியட்.

'உண்மையை நேசி, ஆனல் பிழையை மன்னித்துவிடு.

—வால்டேர்.

மூத்த பெண் மோஹனு, தினம் காலேஜுக்குச் செல்கிருள். பஸ்ஸுக்காகப் பல தடவை அவள் காத்துக்கிடக்க நேரிடுகிறது. ஆயினுமென்ன! பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் காலத்தை வீணடிக்காது புத்தம்புதிய சினிமா—ட்யூன்களை மெதுவாகத் தன் மனதிற்குள்ளாகவே பாடிப் பழகிக்கொள்ளுகிருள். அல்லது 'லேடீஸ் கிளப்'-ல் தான் ஆற்றப்போக நேரும் சொற் பொழிவை மனப்பாடமாகத் தயாரித்துக்கொள் கிருள். விளைவு? பஸ்ஸுக்காக இவள் காத் திருப்பது போக, இவளுக்காக பஸ்ஸே காக்கும் படி சில சமய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டாம். எப்படி சார்! பார்த்தீர்களா காலத்தின் அரு மையை! இந்நேரம் காற்றும் சற்று பலமாக, தாக்குண்ட என் குடையும் ஒரு புறமாய் சாயவே மழைத் தூறலும் என்னை ஒரு கை பார்த்தே விட்டது. இத்துடன் அப்பேர்வழியின் ரஸமான பேச்சும் என்னை மறுபுறம் தாக்கியது என்றே சொல்லலாம்.

"போற்றத்தக்க கோட்பாடுதான் உம்முடையது. ஆனல் ஒன்று மட்டும் கேட்கிறேன் உம்மை. இவ் வளவு நேரம் என்னுடன் 'சள சள' வென விடாது பேசிய இவ்வளவு நேரத்தையும் நீர் வீணுகவன்ருே கழித்தீர்! உம் அருமைக் கொள்கையை நீரே கடைப்பிடிப்பதாகக் காணுேமே!" என்றேன் நான் சற்று சலிப் புடனே.

"கேட்க வேண்டிய சரியான கேள்விதான், நானும் பதிலளிக்கக் கடமைப்பட்டவன்தான். உம்மைப்போன்ற கண்ணியமான கனவான்களைச் சந்திப்பதே என் போன்றவர்க்கு அரிது. அப்படிச் சந்தித்தாலும் உற்சாகமாய் உரையாடும் இது போன்ற வாய்ப்புப் பெறுவது அதனினும் அரிது. ஆகவே என்னைப் பொறுத்த வரையில் உம்மைப் போன்ற மேம்பட்ட பிரமுகர்களிடம் பேசிக்கழித்த காலத்தினல் நான் கண்டிப்பாய் லாபம் அடைந்தே தீருவேன் என்பது நிச்சயம் சார்! இதோ மழையும் நின்றுவிட்டது. தடையின்றி உமது குடையில் இடம் அளித்து உதவியதற்கு என் வந்தனம். மறுபடியும் உம்மை கூடிய சீக்கிரம் சந்திக்கலாம் என நம்புகிறேன்", என்று கூறியவாறே அப்பால் நடந்து கடைத் தெருக் கும்பலில் கலந்து மறைந்தேபோனுன் அந்த ஆசாமி.

ஆம், நானும் இன்று வரை, அன்று காலத்தின் அருமையைப் பற்றிப் பிரசங்கமழையே பொழிந்த அப்பேர்வழியைச் சந்திக்க வேணும் என்று முயற்சி செய்து கொண்டே வருகிறேன். பேர் வழிதான் இன்னமும் காணப்படவில்லை. ஏனென்ருல், அதே தினம் அந்த ஆசாமி என்னை விட்டகன்று போன பிறகு பக்கத்து "பத்ம விலாஸ்" ஹோட்டலில் காபி சாப்பிட்ட நான் சில்லறை கொடுக்கப் பையில் கையை விட்டபொழுது அதில் என் மணிபர்ஸையே காணும். தூக்கி வாரிப் போட்டது எனக்கு. பர்ஸில் மீதியிருந்த பத்து ரூபாயுடன் அதை 'அபேஸ்' செய்துவிட்டான் என்பதைக் கூறவும் வேண்டுமா? என்னே! அப்பரட்டைத்தலைப் பேர்வழியின் அபார கைவரிசை, பிரமாதமான வாய் வரிசை!!

அதிகம் கூறுவானேன். என்ன ஆயினும் சரி, அவன் கூறிய தன் கொள்கைப்படியே அன்று என்னிடம் பேசிக்கழித்த அக்காலத்தை வீணடிக் காமல் தனக்கு இலாபகரமாகவே பயன்படுத்திக் கொண்டு விட்டான் அப்பேர்வழி.

உண்மையில் காலத்தின் அருமையைப் பற்றி பெயரளவில், பேச்சளவில் மட்டு மின்றி நிதரி சனமாய் நடத்தியுமல்லவா காட்டிவிட்டான் அம் மகானுபாவன்!

வாழ்க்கை ஒரு படகு . . !

"தாரா"

கடலைப் போன்றது வாழ்வு—அதைக்
கடந்திடும் நாமொரு படகு.

இடர்கள் பலவும் ஏற்படலாம்—அதில்
இதயம் நொறுங்கவும் நேரிடலாம்.

மடக்கும் முதலைகள் நீந்திடலாம்—அதில்
மாய்க்கும் தீவினை வாழ்ந்திடலாம்.

கடக்கா வண்ணம் புயற்காற்றும்,
கடுமை யுடனே தாக்கிடலாம்.

இடர்கள் பலவும் இதுபோன்று
இணைந்து நம்மை அடைந்தாலும்—
இன்ப மென்றே யெண்ணி—அதை
இன்முகத்தோ டேற்றிடல் வேண்டும்!

நிழல் அருமை . . . !

"அலை"

சோறுக்கத் தெரிவதில்லை; வீட்டைச்சுத்தம்
செய்வதில்லை; தெருப்புழுதி! நூலாம்படைகள்
நூறாகிப் போர்தொடுக்கும்; கண்ணாடிச்சாமான்
நொறுக்குவதில் கணக்கில்லை; மனைவி என்றால்
பேருக்குச் சுறுசுறுப்பு! மதியந்தன்னில்
பெருந்தூக்கம்! வம்பளப்பு! குறைச்சல் இல்லை;
சீரில்லை! சிறப்பில்லை; இல்லந்தன்னில்
செழிப்பில்லை; எரிச்சல்கள் கோடி! கோடி! !

யார் செய்த தீவினையோ? உன்னை எந்தன்
தலையினிலே கட்டியது என்றுதானே
ஊருக்குத் துரத்திவிட்டேன்; பிடித்த பேயை
உலுப்பியதாய் என் எண்ணம்; ஆனால் இங்கே
யாருக்கும் லாபமில்லை! நட்டம் கோடி.
களையில்லை; கலகலப்பு சூனியம்தான்.
பாரினிலே பெண்ணில்லா வீடு வீடா?
பெருந்தவற்றைச் செய்துவிட்டேன் மன்னிப்பாயா?

வந்தவர்கள் போனவர்கள் "அம்மா"! எங்கே?
ஊருக்கா போயிருக்கு"? துளைக்கிறார்கள்;
சங்கடங்கள்! பால்வாங்க வருவோருக்குச்
சரியான பதில்சொல்ல முடிவதில்லை;
வெங்கொடுமை அழுக்குத்துணி வெளுக்கப்போடல்
வினையப்பா பெரியவினை; பூனை நாய்தான்
சங்கொலித்து கால்பின்னும்; கோழி சேவல்
சளசளப்புப் பெரும் கூச்சல்! என்ன செய்வேன்;

ஒரு நாளா! இரு நாளா! வாரம் மூன்று
ஒருபத்து எடைகுறைந்து போனதம்மா?
தெருவிற்குப் பதில் சொல்ல முடியவில்லை;
"செங்கமல" மில்லாத வீடு வீடா?
உறங்குதற்கு விடுவதில்லை; கோனார் காலை
உதிப்பதிற்குள் பால்கறக்க கத்தி ஓய்வான்,
கறப்பதற்குள் பால் வாங்கும் கூட்டம் சேரும்;
கழிப்பதற்குள் எட்டடிக்கும் குளிக்க வெந்நீர்—

வைப்பது யார்? பிரச்சனைகள்? குழப்பம்! ...கோபம்;
விறகெடுத்து மூட்டவரும் புகை நடுவில்
எப்படியோ நீர்இறக்கிக் குளிப்பதற்குள்
பத்தடிக்கும்; உணவெங்கே? விடுதி...காலி..:
பட்டினிதான்; கடைசென்றால் எரிச்சல் மூளும்
பாவைஉனை நினைக்கின்ற போதில் எல்லாம்
தெற்றனவே தெரிகிறது நீதி ஒன்று;
நிழல் அருமை வெயிலினிலே என்பதாகும்.

பத்தினியின் உள்ளம்

க. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.T.

கோல் ஊன்றித் தட்டுத் தடுமாறி நடந்து சென்ருன் அந்த மனிதன். அவன் கன்னங்கள் குழி விழுந்து பரிதாபமாகக் காட்சிதந்தன. கண்கள் பஞ்சடைந்து போயிருந்தன. நல்ல உணவு கண்டு எத்தனை நாட்கள் ஆயினவோ! வயிறு, பிடி சோற்றுக்காக வாடி வருந்தியது. கால்களோ, 'நடந்தது போதும்; கொஞ்சம் எங்களுக்கு ஓய்வு கொடு' என்று அவனைப் பார்த்துக் கெஞ்சின.

பம்பாய் எங்கே? கீரப்பாளையம் எங்கே? அப்பப்பா! இடையிலிருக்கும் தூரத்தை நினைத்தாலே அவனுக்கு இன்னதென்று புரியாத ஏதோ ஒரு பயங்கரமான உணர்ச்சி! இத்தனை தொலைவையும் அவன் எப்படித்தான் கடந்து வந்தானே?

கடலூரில் யாரோ ஒரு தர்மவான் அவன் மீது இரக்கப்பட்டு அரை வயிற்றுக்கு உணவு போட்டார். அதைச் சாப்பிட்டதோடு சரி. இடையில் அங்கங்கேயிருந்த டீக் கடைகளில் மனம் வந்து அவர்கள் தந்த கொஞ்ச நஞ்ச பட்சணம், வாய்க்கால் குளங்களில் விலை இல்லாமல் கிடைத்த தண்ணீர், இவைகளைக் கொண்டு வயிற்றை நிரப்பியபடியே மூன்று நாட்களும் கால் நடையாகவே நடந்து, வந்து சேர்ந்து விட்டான் இந்த ஊருக்கு. பம்பாயிலிருந்து கடலூருக்கு எப்படி வந்திருப்பானென்று நினைக்கிறீர்களா? டிக்கெட் இல்லாமல் திருட்டுத்தனமாக ரயிலேறித்தான்!

விட்டுப்போனபோது இருந்த ஊருக்கும் இப்போது இருக்கும் ஊருக்கும் ஏதாவது வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்வதில் ஈடுபட்டன அவனது மனமும் கண்களும். உள்ளும் புறமும் முற்றிலும் மாறித்தானிருந்தது கீரப்பாளையம். அப்போது, எண்ணினால் நூற்றுக்கே குறைவான வீடுகளைக் கொண்ட ஒரே தெருவாயிருந்த குக்கிராமம் இப்போது கீழத் தெரு, மேலத் தெரு, ரோட்டுத் தெரு, மேட்டுத் தெரு, நடுத்தெரு என்று ஐந்து தெருக்களைக் கொண்டதும், தபாலாபீஸ் பஞ்சாயத்து போர்டு, மின்சார விளக்கு, சினிமாத் தியேட்டர், இத்யாதியோடு கூடியதுமான ஒரு குட்டி நகரமாயக் காட்சியளித்தது. ஆனால் ஊரில் ஏற்பட்ட எந்த மாற்றமும் அரச மரத்தடிப் பிள்ளையாரையோ அவருக்கு எதிரேயிருந்த பிரம்மாண்டமான அல்லிக்குளத்தையோ ஒரு சிறிதும் பாதிக்கவில்லை.

குளத்தில் இறங்கிக் கை, கால், முகம் கழுவிக் கொண்டு, இரண்டு கைத் தண்ணீரை அள்ளிக் குடித்துத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டான் அவன். பின்பு பிள்ளையாரைப்

பார்த்துக் கும்பிடு போட்டான். அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின. அருகிலிருந்த சிமெண்ட் மேடையின் மீது அமர்ந்தான்.

யார் யாரோ குறுக்கும் நெடுக்குமாகப் போய் வந்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவராவது அவனைக் கண்டு கொள்ளவில்லை; கண்டு கொள்ள முடியவில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த தோற்றமா இப்போது இருக்கிறது அவனுக்கு ?

பொன்னுத் தேவர், தையல் ஆச்சி ஆகியவர் களுக்குத் திருமணமாகிப் பத்து ஆண்டுகள் கழித்துக் குலத்தைத் தழைக்கச் செய்ய ஒரே பசுங் கொடியாகப் பிறந்தவன்தான் பெருமாள். பெருமாள் பிறந்தவுடனே தந்தையை விழுங்கி விட்டான ! உலகம் இன்னதென்று தெரியாமல் வளர்ந்த தய். இப்போது எங்கிருந்துதான் ஆடவனுக்குரிய திடசித்தத்தையும் உடல வலுவை யும் பெற்றானோ தெரியவில்லை. துன்பத்தின இடைவிடாத சுமைடி அடி மென்மையான பெண்மையைக் கரடு தட்டிய முரட்டுக் கல்லாக உருமாற்றி விடுகிறது போலும்.

பால்ய விதவையான தையல் ஆச்சி, பெருமாளை இதயப் பேழைக்குள் விலை உயர்ந்த முத்துப்போல் வைத்துப் பேணி வளர்த்தாள். பெருமாள் ஆசைப்பட்டுக் கேட்ட எந்தப் பொருளும் அட்டி யின்றிக் கிடைத்துவிடும். எப்பாடு பட்டாவது அவனை விருப்பத்தைப் பூர்த்தி செய்துவிடுவாள் தாய் இத்தனை பையனுக்கு முரட்டுப் பிடிவாத மும், தான்தோன்றித்தனமும், தறுதலைக் குண மும் புனையிலேயே வேரோவிட்டுக் கிளைத்துப் படர ஆரம்பித்துவிட்டன. படிப்பு அவனுக்கு வர வில்லை. "ஒரு படி வேப்பெண்ணெயை வேண்டுமானாலும் மூக்கைப் பிடித்துக்கொண்டு குடித்துவிடுகிறேன். ஆனால் படிக்கமட்டும் சொல்லாதே, அம்மா ! அவ்வளவு கஷ்டமா யிருக்கிறது எனக்கு' என்று சொல்லிவிட்டான் அவன். அவ்வளவுதான. படிப்பு போனாலும் போகட்டும், பிள்ளை மனம் கோணாமலிருப்பது தான் முக்கியம் என்ற நினைப்பு ஏற்பட்டுவிட்டது தையல ஆச்சிக்கு. பிறகு கேட்க வேண்டுமா? பெருமாள் வைத்ததே சட்டம்.

காலதேவன் தன் ஓட்டப் பந்தயத்திலே இரு பது ஆண்டுகளைத் தாண்டி வந்துவிட்டான. ஒரு நாள் தையல் ஆச்சியின் காதுகளில் ஒரு விஷ யம் 'அரசல் பொரசலாக' விழுந்தது. பெருமாள் சில காலிகளுடன் கூடிக்கொண்டு முத்தாயி குடி சைப் பக்கம் போகிறான் என்பதுதான் அந்த விஷயம். அதைக் கேட்டவுடனே வயிற்றில் நெருப்பைக் கொட்டிக்கொண்டதுபோல் ஆயிற்று அவள் நிலை. உடனே மகனின் திருமணத்திற்கு ஒரே வாரத்தில் ஏற்பாடுகளைச் செய்து முடித்து விட்டாள்.

குறித்த நாளில் அமிர்தம் என்ற நங்கையின் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டினான் பெருமாள்.

கலியாணத்திற்குப் பிறகு பெருமாளின் பேக்கில் ஒரு மாறுதல். வீட்டிற்கு அடங்கிய பிள்ளையானான் அவன். சிதம்பரத்தில் பஸ் கம் பெனி ஒன்றில் வேலையும் கிடைத்தது அவனுக்கு. வேலைக்குப் போகவேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் காரோட்டிப் பார்க்க ஆசைப்பட்டு அந்த வேலையில் சேர்ந்தான் பெருமாள்.

அமிர்தம் குடும்பத்திற்கேற்ற பெண். படிப்புக் கிடையாது; ஆனால் பண்பு, பரிவு, அடக்க ஒடுக் கம், இல்லறப் பாங்கு இவ்வளவும் தெரிந்திருந் தன அவளுக்கு. அது போதாதா ஒரு கணவ னுக்கு? இல்வாழ்வு கனவுபோல் இனித்தது பெருமாளுக்கு. அதன் விளைவாகச் சில ஆண்டு களில் மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனாய் விட்டான் அவன்.

வேலைக்குப் போன பெருமாள் சம்பாத்தியம் என்ற பெயரால் ஏதோ கொஞ்சம் கொண்டுவந்து குடும்பத்தில் போட்டான். ஆனால் அதைவிட அதிகமாக நிலத்தைத் விற்றுவிற்று எடுத்துக் கொண்டு போய்ச் "சொந்தச் செலவு" செய்ய ஆரம்பித்தான.

மகனின் செய்கையைக் கண்ட தையல் ஆச்சி மங்கினாள் ; மனம் கலங்கினாள். மறைமுகமாகக் கண்டிக்கவும் செய்தாள். ஆனால் பெருமாளின் போக்கில் மாறுதல் என்பது பாலைவனத்திலே பசுமையைக் காண்பது போலத்தான் எனத் தெரிந்தது. ஏக்கம் அவளை வாட்டியது. உடலை ஒடுக்கி உயிரையும் பறித்துக்கொண்டது.

தாய் இறந்தபின பெருமாளின வாழ்க்கையில் ஒரு பெரும திருப்பம். இல்லறம் புளித்தது

அவனுக்கு. இரவு நெடுநேரம் கழித்து வீட்டுக்கு வருவான். சில நாட்களில் அதுவும் இல்லை. கொஞ்ச நஞ்சம் இருந்த கழனிகள் விலைக்குப் போயின. வீடு மட்டும்தான மிச்சம்.

மனைவி மக்கள் மீது பாசம் மறைந்துவிட்டாலும் வீட்டு நினைவாவது கணவனுக்கு இருக்கிறதே என்ற நிம்மதியடைந்திருந்த அமிர்தத்தின் நெஞ்சைத் திடீரென்று கலக்கியது அந்த அதிர்ச்சி.

தொடர்ச்சியாகப் பல நாட்கள் வீட்டுப் பக்கமே தலை காட்டவில்லை பெருமாள். சேலத்தில் இருக்கும் லாரி கம்பெனி ஒன்றில் அவன் டிரைவர் வேலை பார்க்கப் போய்விட்டதாகத் தகவல் கிடைத்தது. அதுமட்டுமா? அந்த ஊரிலிருந்து சிதம்பரத்திற்கு வந்து பழ வியாபாரம் செய்துகொண்டிருந்த பவழம்மாள என்பவளதான் அவனை மயக்கி அழைததுச் சென்று விட்டதாகக் கூறினார்கள்.

அமிர்தம் துடித்தாள்; துவண்டாள்; அலறினாள்; பொருமினாள்; 'இத்தனை குழந்தைகளையும் வைத்துக்கொண்டு எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ' என்று நினைத்தாள் போலும் அந்த அபலை! கணவனின் பிரிவுத் துன்பத்துடன் இன்னொரு கவலையும் அவளை வாட்டி வதைத்தது. அப்போது அவள் நிறை மாதக் கர்ப்பிணி, போன பாவி இதை வேறு 'பரிசாகக்' கொடுத்துவிட்டுப போகவேண்டுமா?

மூத்த பையன் கண்ணன் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவனை இன்னும் மூன்று வருடம் எப்படியாவது படிக்கவைத்துக் கண் திறந்து விட்டுவிட வேண்டும் என்று நினைத்தாள் அமிர்தம். நல்ல வேளையாகப் படிப்பில் கெட்டிக்காரனாக விளங்கிய அவனுக்குச் சர்க்கார் உபகாரச் சம்பளம் கிடைத்திருந்தது; அது சமய சஞ்சீவியாக உதவிற்று. மற்றப் பிள்ளைகள் எல்லாம் சின்னஞ் சிறுசுகள். அவைகளைத் தகப்பனில்லாத தத்தாரி என்று ஊரார் சொல்லாவண்ணம் வளர்த்துவிட வேண்டுமென்று திட்டமிட்டாள் அமிர்தம்.

மாமியார் பால்யத்தில் விதவையானவள். ஆனல் அமிர்தமோ கணவனை உயிரோடு பறிகொடுத்துவிட்டுத் தனி மரமாக நின்ருள். கொடுமையிலும் கொடுமை.

வீட்டில் பெரும்பகுதியை வாடகைக்கு விட்டாள். இட்டிலி, தோசை சுட்டு விற்பனை செய்யத் தொடங்கினுள். வெளியில எங்கும் போகாமல் மானமாகப் பிழைப்பு நடத்த அதைத் தவிர வேறு வழியில்லை என்பது புலப்பட்டது அவளுக்கு.

அமிர்தத்தின் வயிற்றிலிருந்த உருவம் பெண்ணாக வந்து பூமியை எட்டிப் பார்த்தது. அதன் மயக்கு விழிகளிலே, சொக்கவைக்கும் மழலையிலே கவலையை மறந்தாள் அவள்.

காலம் கண்ணுமூச்சியாடியது!

பெரியவன் கண்ணன் இப்போது தாலுகா ஆபீஸ் கிளார்க் வேலை பெற்றுத் தஞ்சாவூர்ப் பக்கம் போய்விட்டான். அவன் அனுப்பும் பணத்தை வைத்துக்கொண்டு சிக்கனமாகச் செலவிட்டு மற்ற இரண்டு பையன்களையும் படிக்க வைததாள் அமிர்தம், பெண் பொன்னியைக் குடும்ப வேலையில பழக்கினுள்,

வாழ்க்கையில் ஓரளவு நிம்மதி ஏற்பட்டுக் கொண்டிருந்த இந்த நிலையிலும், அமிர்தத்தின் உள்ளத்தில நீறு பூத்த நெருப்புபோல் கணவன் தன்னை நிர்க்கதியாக விட்டுச் சென்ற அந்தச் சம்பவம் நிலைத்துப்போய் இருந்தது, 'அவன் இறந்தானே அல்லது உயிரோடுதான் இருக்கிறனே! ஒரு தகவலும் தெரியவில்லையே' என்ற ஏக்கம் அவளை வாட்டும். கணவன் கைவிட்ட பின்னும் தான் யாருக்காக வாழவேண்டும் என்ற கேள்வி உதயமாகும். உடனே குழந்தைகளின் நினைவு அவள் சிந்தனையின் போக்கை வேறு பக்கம் திருப்பிவிடும்.

பெருமாள் பவழம்மாளுடன் ஓடிப்போனது உண்மைதான். ஆனல் அவர்கள் சேலத்திற்குப் போகவில்லை : பம்பாய்க்குச் சென்றனர்.

பம்பாயில் இருவரும் பல நாட்கள் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தினர். கடைசியாக ஒரு மில் முதலாளிக்குக் கார் டிரைவரானுன பெருமாள். உடனே அதிர்ஷடச் சக்கரம் அவர்கள் பக்கம் திரும்பியது, வாய்க்கு ருசியான உணவென்ன, விதம் விதமான உடையென்ன, சினிமா, டிராமா சங்கீதம், நடனம், இவையென்ன அத்தனையும் அனுபவித்தனர். ஓட்டவு நேரத்திலே மீனம்பூரா

வில் உல்லாச நடை போடுவர்; மேலைக் கடற்கரை மணலிலே அமர்ந்து உலகத்தின் இன்பங்களைப் பற்றிக் கனவு காணுவர்: பஸோரா நீரூற்றுக் கருகே நின்று மந்தகாசப் புன்னகை புரிவர். மலபார் ஹில்களைச் சுற்றி அளவிலா ஆனந்தம் அடைவர்.

ஆனல் இத்தனை சுகமும் எத்தனை நாள் நீடித்தது. எண்ணிப் பன்னிரண்டே மாதங்கள்! பிறகுதான் எதிர்பாராத அந்தப் பேரிடி வீழ்ந்தது.

அன்று!

எங்கோ வெளியில் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தான் பெருமாள். அவன் உள்ளத்திலே என்றைக்குமில்லாத புதுக்குழப்பம்— இப்போதெல்லாம் பவழம்மாள் அவனை விட்டு விலகிச் செல்வதுபோல் ஒரு பிரமை பிரமையா அல்லது உண்மையா? ஒன்றுமே புரியவில்லை அவனுக்கு. கிராமத்தில் அவன் நட்டாற்றில் விட்டதுபோல் ஆதரவின்றி விட்டு வந்த அமிர்தத்தையும் குழந்தைகளையும் நினைத்தான். 'ஐயோ, என்ன துரோகம் செய்துவிட்டேன் அவர்களுக்கு' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு கண்ணீர் உகுத்தான் பவழம்மாளின் தொடர்பை அறுத்துக்கொண்டு உடனே ஊருக்குப் போய்விட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தான்.

வீட்டையடைந்த பெருமாள் காணச் சகிக்காத காட்சி ஒன்றைக் கண்டான். வெட்கம்! வேதனை! ஆண்மைக்கே சவால் விடும் அட்டகாசமான நிகழ்ச்சி! ஆம். முதலாளியின் அன்பிலே ஆழ்ந்திருந்தாள் பவழம்மாள். நல்ல வேளையாக ஆத்திரம் எதுவும் கொள்ளவில்லை அவன். காலைக் கடித்த செருப்பைக் கழற்றி எறிந்து விடுவதுதான் முறை என்று மனத்தில் எண்ணிக்கொண்டு கனைத்தபடியே உள்ளே நுழைந்தான்.

வெலவெலத்துப் போனர் முதலாளி. விடுவிடு வென்று வெளியேறினர்.

பவழம்மாளிடம் எதுவும் பேசவில்லை பெருமாள். புயல் வீசவேண்டிய இடத்திலே அமைதி தவழ்வது கண்டு உள்ளுக்குள் சற்றுப் பயமாகவே இருந்தது பவழம்மாளுக்கு.

பெருமாள் கண்டதை வெளியே உளறித் தன் மானத்திற்குப் பங்கம் ஏற்படுத்திவிடுவானே என்று நினைத்த முதலாளி அவனைத் தீர்த்துக் கட்டத் திட்டமிட்டார்; அதுவும் பவழத்தின் மூலமாகவே!

இரவு தூங்குவதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தான் பெருமாள். பவழம்மாளின் முகத்தில் படர்ந்திருந்த பீதி விபரீதமாக ஏதோ என்று நடக்கப்போவதைச் சுட்டிக்காட்டியது. இடையில் பதுக்கியிருந்த குத்துக் கத்தியை, அவள்—அந்த நச்சுப் பாம்பு வெளியே எடுத்ததைக் கண்டானே இல்லையோ, உடனே பதறி எழுந்தான் பெருமாள். கத்தியை வெடுக்கென்று பிடுங்கி அவள் நெஞ்சில் பாய்ச்சினன்! 'சபாஷ்!' என்ற முதலாளியின் பேய்க்குரல் அவனைத் தூக்கி வாரிப்போட்டது. பிறகு......

கோர்ட் விசாரணை; அவன் கொலைக் குற்றவாளி எனத் தீர்ப்பு!

தற்காப்புக்காகவே குத்தினன் என்பதை உணர்ந்த நீதிபதி பெருமாளுக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனையோடு நிறுத்திவிட்டார்.

பெருமாள் சிறை புகுந்தான். மனைவி மக்களுக்குத் தான செய்த துரோகத்திற்கு இந்தத் தண்டனை நன்றாக வேண்டியதுதான் என்று நினைத்துக் கண்ணீர் விட்ட வண்ணம் காலத்தைக் கடத்தினன்.

நன்னடத்தை காரணமாக இரண்டு வருடம் முன்னதாகவே அவனை விடுவித்துவிட்டனர் அதிகாரிகள்.

விடுதலைபெற்ற பெருமாள் இப்போது காணச் சகிக்காத கோலத்துடன் பிறந்த மண்ணிலே வந்து நிற்கிறன்.

* * *

தோளில் புத்தகப் பையை மாட்டியபடி பள்ளிக் கூடம்விட்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் வீரனும், ரங்கனும்.

சிறையிலிருந்து விடுபட்டுத் தற்செயலாகத் திரும்பிய பெருமாளின் கண்களில் பட்டனர்

அந்தப் பிள்ளைகள். தன்னையறியாமல் அவர்கள் மீது பாசம் தோன்றுவதை உணர்ந்தான் அவன். உடனே அந்தச் சிறு பையனகளைப் பார்த்து "குழந்தைகளா! இங்கே வாருங்கள்!" என்று கூப்பிட்டான்.

இருவரும் பெருமாளை நெருங்கினர்.

"உங்கள் பேர் என்ன? நீங்கள் இந்த ஊர் தானே?"

"என் பெயர் வீரன்; இவன் பெயர் ரங்கன். நாங்கள் இந்த ஊர்தான் எங்க வீடு அதோ அந்த நடுத்தெருவில்தான் இருக்கிறது." பெரியவன் பதில் சொன்னான.

வீரன், ரங்கன் என்ற பெயர்களைக் கேட்டவுடனேயே அவன் தெரிந்துகொண்டான். அவர்கள் தன் குழந்தைகள்தான் என்று. அவன் தானே ஆசையோடு அவர்களுக்கு அந்தப் பெயர்களை வைத்தான். அவன் ஊரை விட்டுப் போனபோது பெரியவனுக்குப் பன்னிரண்டு வயது. இவர்களிருவருக்கும் முறையே நான்கும் இரண்டும் ஆயிருந்தது. என்ன பிரமாதமாக வளர்ந்துவிட்டார்கள் அவர்கள்!

"ரெண்டு பேரும் என்ன படிக்கிறீர்கள்?" கேள்வியைத் தொடர்ந்தான் பெருமாள்.

"நான் ஐந்தாம் படிவம் படிக்கிறேன். அண்ணன் ஆறும் படிவம் படிக்கிறுன்"—சின்னவன்-ரங்கன், சொன்ன பதில இது.

"ரொம்ப நன்ருய்ப் பேசுகிறீர்களே! உங்க அப்பா அம்மா யாரோ?"

இதைக் கேட்டதும் இருவர் முகமும் ஒரு மாதிரியாக மாறியது.

"எங்களுக்கு அம்மாதான் இருக்கா. அப்பா இல்லே."—வீரனின் கண்கள் கலங்கின.

"என், அப்பா செத்துவிட்டாரா?" கேள்வியில் பரபரப்பைக் காட்டினான் பெருமாள்.

அவர் உயிரோடிருந்தாலும் இறந்த மாதிரி தான. சின்ன வயசிலேயே எங்களையெல்லாம் விட்டுவிட்டுச் சேலத்துக்கு ஓடிவிட்டார்."

"ஆமாம், எங்க அப்பா ரொம்ப மோசம். அம்மாவையும், எங்களையும் தவிக்க வைச்சு டு ஓடிப்போனுர்" அண்ணன் தொடங்கிய பேச்சை தம்பி முடித்து வைத்தான்.

"அப்படியானல் உங்களுக்குச் சம்பாதித்துப் போடுவது யார்?"

"அம்மாவும் பெரிய அண்ணுவும்தான். அம்மா இட்டிலிக் கடை வச்சிருக்கா – அண்ணு தஞ்சாவூரிலே வேலையில் இருக்கார்"—இதைச் சொல்லும் போது ரங்கனின் கண்கள் கலங்கின.

பெருமாளும் கண்ணீர் விட்டான்; விம்மினன். 'சேலத்துக்குப் போவதாக வதந்தியைக் கிளப்பி விட்டு, பம்பாய்க்குப் போய்ச் சீரழிந்தாயே, குடும்பத்தைத் தவிக்கவிட்டு' என்று கூறி அவனை வதைத்தது மனச்சாட்சி.

"நீங்க என் அழறீங்க?" வீரன் கேட்டான்.

"உங்க கதையைக் கேட்டதும் எனக்கு வருத்தமாயிட்டுது, குழந்தைகளா! ஏனென்றால் நான் உங்கள் அம்மாவுச்குப் பால்ய சினேகிதன். சின்ன வயசிலே ரெண்டுபேரும் ஒன்ருய் ஓடி ஆடி விளையாடுவோம். பிறகு நான் கப்பலுக்குப் போய்விட்டேன். இப்போதுதான் திரும்பி வந்தேன். நீங்க சொன்னதைக் கேட்டதும் எனக்கு என்னமோ போல் ஆய்விட்டது!" உணர்ச்சியைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு மனதார ஒரு பொய்யைச் சொன்னான் பெருமாள்.

"அப்படியானல் நீங்களும் இந்த ஊர்தானு? உங்க வீடு எது?"

"இல்லே, எனக்குப் பக்கத்து ஊர். இப்படி சும்மா உலாவ வந்தேன். உங்க அம்மாவிடம் நான் விசாரித்ததாய்ச் சொல்லுங்கோ. போய்விட்டு வரேன்" என்று சொல்லிவிட்டு மெல்ல அவ்விடத்தினின்றும் நழுவினான் பெருமாள்.

'அவர் உயிரோடிருந்தாலும் இறந்தமாதிரி தான்' என்ற வார்த்தைகள் அவனைச் சாட்டையால் அடிப்பது போலிருந்தன. 'குருவிக் கூட்டைக் குரங்கு கலைத்துப் போட்டது போல் அல்லவா, உன் குடும்பத்தைச் சிதற வைத்துச் சின்னு பின்னப் படுத்திவிட்டாய் நீ! கட்டிய மனைவியையும் கண் நிறைந்த குழந்தைகளையும் உதறியடித்து விட்டுப் போன உனக்கு மீண்டும் அவர்களிடம் என்ன வேலே? அன்று உடம்பிலே ஊறியிருந்த அகம்பாவம் கண்ணை மறைத்தது. இன்று முட்டிக்கால் ரத்தம் சுண்டிப்போய், இருந்த சத்தெல்லாம் ஒடுங்கி, சக்கையான நிலையிலே அவர்களிடம வந்து

ஆதரவு பெற உனக்குக் கொஞ்சங் கூட வெட்கமா யில்லே? போ, போய்விடு. இனி அவர்கள் முகத் திலே விழிக்காதே! உன்னைக் கண்டாலே துளிர்த்த மரம் பட்டுவிடும். பாவி, சண்டாளா, பாதகா!' மனச்சாட்சி இதயத்தைப் புண்ணுக்க, தள்ளாடித் தள்ளாடி நடந்தான் பெருமாள்.

"அம்மா, அம்மா........!" என்று கத்திக் கொண்டே வந்த தன் பிள்ளைகளையும் பார்த்து ஆச்சரியமடைந்தாள் அமிர்தம்.

"வந்து, யாரோ ஒருத்தர் உன்னே, எங்களே அப்பாவைப் பற்றியெல்லாம் எங்களிடம் விசாரித் தார் அம்மா" மூச்சு விடாமல் பேசினான் வீரன்.

"அவரைப்பார்த்தா பரிதாபமாயிருக்கம்மா! தாடியும் மீசையுமாய் ரொம்ப இளேச்சுப்போய் கேவலமாயிருக்காரம்மா! நம்ம கதையைக் கேட்டதும் அவர் கண்ணுலே தண்ணீர் விட்டார். அவர் உனக்குச் சின்ன வயதிலே சிநேகிதராம் என்றான் ரங்கன்.

"ஆ, அப்படியா! இப்போது அவர் எங்கே யிருக்கிருர்?'

"அரசமரத்துப் பிள்ளேயார் மேடையில்!" என் றனர் இருவரும் ஏககாலத்தில்.

பதறிக் கொண்டே புதல்வர்கள் சொன்ன இடத்தை நோக்கி ஓடினாள் அமிர்தம். குழந்தை களும் அவளேப் பின்பற்றினர். ஆனால் என்ன ஏமாற்றம்! அந்த ஆசாமியை அங்கே காணவில்லே.

உடனே கிழக்குப் பக்கம் சுட்டிக் காட்டி, "ஓடுங்கள், ஓடுங்கள்! இப்படித்தான் போகிருர். எப்படியாவது அவரைக் கையோடு அழைத்து வாருங்கள். அவர்தான் உங்கள் அப்பா!'' என்று சிரமப்பட்டுச் சொல்லி முடித்துவிட்டு, அப்படியே அங்கிருந்த மேடையில் அயர்ந்து உட்கார்ந்து விட்டாள்.

அமிர்தத்திற்குக் கால்கள் மண்ணில் பாவவில்லே. கணவன் கிடைத்து விட்டான் என்ற மகிழ்ச்சியா தன் தாலி உறுதிப்பட்டு விட்டது என்ற மன எழுச்சியா? அவன் செய்த கொடுமைகளே யெல்லாம் மன்னிக்கவும் முன் வந்து விட்டதா அவள் இதயம்? ஐயோ, தங்கத் தமிழ் மண் ணில் பிறந்த பத்தினி ரத்தினமே! உன் உள்ளம் வேறு எந்த நாட்டுப் பெண்ணுக்கு உண்டு?

முன்னேறும் விஞ்ஞானம்

சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் முதலிய வற்றிலிருந்து வரும் வானொலி அலேகளே ரேடியோ டெலஸ்கோப் கருவிகளால் ஆராய்ந்து கேட்கும் அமெரிக்க விஞ்ஞானிகள், சூரியனில் பெருத்த வெடிச் சத்தங்கள் கேட்கின்றன என்றும், சந்திரன் சர சர வென ஒலிக்கின்றது என்றும், பால்வெளி உஸ் என்று இரைகிறது என்றும் தெரிவிக்கிருர்கள். அமெரிக்கத் தேசிய பூகோளச் சங்கம் இச் செய்தியை அறிவிக்கிறது.

* * * *

பாங்குகளில் வந்து சேரும் காசோலே ("செக்") பணம் போட்ட சீட்டு முதலிய பத்திரங்களே நிமிஷத்துக்கு 1,500 வீதம் இனம் இனமாகத் தனித்தனியே பிரித்து வைக்கும் கருவி ஒன்றின் பழக்கம் இன்று அமெரிக்காவில் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. பத்திரங்களின் மீது காந்த மையினுல் பொறிக்கப்பட்டுள்ள எண்களேயும், எழுத்துக்களேயும் கொண்டே இந்த "இயந்திர பாங்கு ஊழியன்" தன் வேலேயைச் செய்கிறன்.

* * * *

பதினைந்து ஆண்டு முதல் 20 ஆண்டு வரை நீடித்து உழைக்கக்கூடிய புதுவகை "டார்ச் லேட் பாட்டரி" ஒன்றைப் பெருவாரியாக உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிருர்கள் சோனேட்டோன் கார்ப்பரேஷன் தொழிற்சாலேயினர். புதுவகை பாட்டரி தீர்ந்து போனால், வீட்டிலுள்ள மின்சார இணைப்புடன் தொடர்பு ஏற்படுத்தி அதற்கு மீண்டும் மின்சாரம் ஏற்றிக்கொள்ளலாம்.

நாக்கு மூன்று அங்குல நீளந்தான் உள்ளது. ஆனல் அது ஆறடி உயரமுள்ள மனிதனையும் கொன்று விடும்.

—ஜப்பான்

தங்கையின் ஆசை

கு. அரங்கசாமி.]

அன்புத் தங்கை அல்லிக்கு,

சித்திரம் தீட்டினாற்போல கவின் பெருகும் எழுத்திலே எண்ணப் புதையலைத் தத்திக்கும் முத்தமிழில் தேனினுமினிய நடையில் தீட்டியிருந்தாய். எழிலொழுகும் உன்திரு முடங்கல் படித்தேன். எல்லையில்லாப் பேருவகைக் கடலில் மூழ்கிப் பேரின்பம் கண்டேன், என் பண்புத் தங்கையே!

"அன்புள்ள அண்ணா, அன்னையில்லாப் பெருங் குறையை அண்ணன் உருவெடுத்துத் துன்பம் போக்க வந்த பேருமை அண்ணா! கண் துஞ்சாது எத்தனையோ இரவுகளிலும் ஓய்வு கொள்ளாமல் உழைத்துக் கண்ணீர் வடித்து, எதிர்ப்படும் இடையூறுகளையும், தடைகளையும் தாங்கிக்கொண்டு என்னைக் கண்மணியைப்போல் பாதுகாத்து வருகிறீர்கள். என் தங்கை படித்துப் பட்டம் பெற்று உன்னத பதவியிலமர்ந்து, என் கலங்கிய கண்ணீரைத் துடைப்பாள்' என்றெல்லாம் இன்பமான கனவுலகத்தில் மிதந்துகொண்டிருப்பீர்கள்.

ஆனால்........அந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்ய இயலாதவளாக—அந்தச் சூழ்நிலையிலே—இருக்கிறேன் என்பதை நெஞ்சத்தில் புதைத்து வருந்துகிறேன் அண்ணா. என்னால் நம் குடும்பமே வளப்படப் போகின்றது என்ற எண்ணம் உங்கள் இதயத்தில் மகிழ்ச்சி—மலர்ச்சி—ஒளியைப் பரப்பியிருக்கும். என்னால் நம் குடும்பம் மட்டுமா வளப்பட இருக்கின்றது; இந்தச் சமூகமே என்னால் திருந்த வேண்டியுள்ளதே? என் வாழ்க்கை பாரதப் பெண்கள் சமூகம் முழுமைக்கும் உரிமையானது. ஆகவே, தலைமுறை தலைமுறையாக துன்பத்திலும் அறியாமையிலும் அழுந்திக் கிடக்கும் எண்ணற்ற குழந்தைகள் நலவாழ்விற்காகவும் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் என் வாழ்வை பூரணமாக ஒப்படைத்து விட்டேன். படித்து வளர்ச்சிபெற்றவுடனே சமூகத்திற்கு இயன்றளவு உழைப்பதே என் கடமை. இது என் ஆசை. இதற்கு நீங்கள் தடையாக நிற்கமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்" என்று பொன்னெழுத்துக்களால் செதுக்கப்பெற்ற அமுத வாசகத்தைப் பயின்றதும் விழிகள் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தன. தென்றலின் குளுகுளுப்பைப் போல உடலெங்கும் ஒரு இன்ப உணர்ச்சி! குழந்தையை அணைத்து முத்தமிட்டது போன்ற ஒரு ஆனந்தம்! இன்னும் சொல்வானேன்.... நெஞ்சத்திலின்றும் தேனூறு பிரவாக ஊற்றெடுத்து ஓடியது.

சிறுமை போக்க வந்தவளே! பெருமை பெற இருப்பவளே!! எந்தன் நெஞ்சக் குகையினிலே அடைபட்டுக் கிடக்கும் மாசில் ஆசையினை அணைத்தும் வஞ்சமில்லா எழுத்துக்களால் பொறித்த முடங்கலைப் பயின்றதும் என் அண்ணன் துடிதுடித்துப் போய்விடுவான். என்மீது அனல் பொங்கும் வெஞ்சினம் கொண்டு கல்விக் கழகத்திற்கு நிதி அனுப்ப மறுப்பான். 'படித்தது போதும் மனை திரும்புக' என்ற கட்டளை பறந்து வரும்—இவை போன்ற எண்ணங்களால் உன் சிந்தனையை ஆயிரம் கோணங்களில் அலைபாய விட்டிருப்பாய்!

அன்புப் புதையலே! என் இன்ப சொத்தே!! என் தங்கை கல்லூரி மாடிப் படிகளில் சிலையென நடமாடிவரும் உணர்ச்சிப் பாவையல்ல! மடமை மணமும் முடைநாற்றமும் மண்டிக்கிடக்கும் சமுதாயத்திலே வாழும் எண்ணற்ற பெண்மணிகளின் வருங்கால வழிகாட்டி! சமூகப் புரட்சித் தீயில் புடம்போட்டெடுக்கப்பட்ட தங்கப் பாவை! கல்லூரியின் நான்கு சுவர்களுக்கு மத்தியிலே அடைபட்டுக் கிடந்து உருப்போடும் ஆற்றலை மட்டும் வளர்த்து உள்ளத்தையும் மூளையையும் கெடுத்துக்கொண்டிருக்கிறாள் என் தங்கை என்றல்லவா இந்நாள்வரை நினைத்திருந்தேன்? ஆனால் இப்போதோ சமூகத் தொண்டில் தன் வாழ்நாள் அனைத்தையும் தியாகம்செய்த ஒப்பற்ற பெண்மணிகளின் வரிசையில் என்தாசைத் தங்கையும் ஒரு பொன் மலர்! அதுமட்டுமல்ல அவள் ஒரு பெண் மலர்!!

"உயிருள்ளவரையில் மாதர் சமூகத்திற்கு உழைத்துச் சாக விரும்புகிறேன். பின் தங்கிப் போன பெண் குலத்திற்கு உழைக்க உழைக்கத்

தான் என் உயிர் வாழ்வு இனிக்கும்". இந்த நல்லதோர் உணர்ச்சி தோய்ந்த வளம நிகர்த்த மணிச் சொற்களை உன் மலர்க்கரம் தீட்டும்போது உள்ளத்துப் பொலிவு உன் செந்தாமரை வதனத்தில் புன்னகையாய் மலர்வதை நான் இங்கிருந்தே உணர்கிறேன். தங்கமே! இந்தத் தீஞ்சுவைத் தேன் மொழிகளைக் கேட்டவுடனே இந்த உலகமே எனக்கு இனித்தது! கங்குல் இரவெல்லாம் கண்ணுறங்காமல் உனக்காகப் பட்டத் துயரனைத்தும் எங்கோ ஓடி மறைந்துகொண்டன. பெண்கள் பொது வாழ்க்கையில் மிகுதியாக ஈடுபடவேண்டும் என்பதில் பேரார்வம் மிககவன் என்பதை இந்த நிமிடமாவது அறிந்துகொள். போற்றுதற்குரிய இம் முடிவைத் தேர்நதெடுத்த பேற்றிற்காக தன் வாழ்நாளின் பெரும்பகுதியைப் பெண்கள் முன்னேற்றத்திற்காக எழுதிக் குவித்த ஜார்ஜ் பெர்னுட்ஷாவின் முதுமொழிகளை உனக்குப் பரிசாக அனுப்புகிறேன்.

"பெண்களுக்குள்ள ஏராளமான ஆற்றலை அவர்கள் பொது வாழ்க்கையில் பொறுப் புணர்ந்து பயன்படுத்தவேண்டும். உலக நடவடிக்கைகளில் பெண்கள் முழுப் பங்கும் ஏற்று உழைத்தால் அல்லாமல் ஒரு நாளும் அமைதியான நல்ல நிலைமையை அடைய முடியாது. அவர்களுடைய ஆற்றல் பொதுமக்களின் முன்னேற்றத்திற்கு இடைவிடாமல் உதவவேண்டும்."

இக்கருத்துக் கருவூலங்களை உனது நெஞ்சப் பேழைக்குள்ளிட்டுப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்.

நீ விடுமுறை நாட்களில் நம் சிற்றூரில் துவக்கி வைத்த "மாதர் சங்கம் ஆற்றும் பணிகளைப் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் அறிய ஆவலுள்ளவளாக இருக்கிறேன்; அதைப் பற்றி எழுதுங்கள்" என்றும் உன் மடலில் குறிப்பிட்டிருந்தாய். விடுமுறை நாட்களில் பலனற்ற பொழுதுபோக்குகளில் காலங்கழித்து வீணாக்காமல் உன் தோழிகளுடன் இணைந்து தோற்றுவித்த மாதர் சங்கம் மகத்தான பணிகளை ஆற்றி வருகிறது. சமையல் அறை என்னும் சிறையினில் இந் நாள் வரை அடங்கிக் கிடந்த பெண்கள் ஓய்வு நேரங்களில் சங்கத்தில் கூடி அறிவூட்டும் பேச்சுக்களைப் பேசியும் செய்தித்தாள் பயின்றும் பொது அறிவு பெற்றுப் பயன் பெறுகின்றனர். அம்பர் சர்க்கா பயிற்சி நிலையம் அமைத்தும் தொழில் பயின்று வருகின்றனர். வேலையில்லாமல் வீண் வம்பிலும் அரட்டையிலும் பூசல் வளர்த்த பெண்கள் தரமான குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயை அதன் மூலம் பெற்று வாழ்கின்றனர் இவையெல்லாவற்றிற்கும் மேலாக அரிஜனப் பெண்களின் வாழ்விலும், அச் சேரி குழந்தைகளின் வளர்ச்சியிலும் அக்கறைக் காட்டிவரும் பணியொன்றே எல்லாச் செயலினும் மேலானதாகும்.

மனிதப் படைப்பில் மாதர்கள் பாதிப் பேர் அடுத்த தலைமுறையைப் பெற்று வளர்ப்பதில் அவர்கள்தான் மிக முக்கியப் பங்கை ஏற்கின்றனர். சிற்றூர்களிலுள்ள குழந்தைகளைச் சரியான படி வளர்ப்பதே மாதர்கள் நம் நாட்டிற்குச் செய்யும் மிக உயர்ந்த சேவையாகும்! அவர்களை அந்தப் பணியில் ஈடுபடத் தகுதியாக்குவதே உன் போன்ற படித்த பெண்களின் கடமை. இது உன்மேல் உயிரையே வைத்திருக்கும் அண்ணனின் அன்புக் கட்டளை உன் ஆசையும் இது தானே!

எண்ணத்தில் நிறைந்தவளே! மண்ணில் அமுதாய் விளைந்தவளே!! இதோ, கல்லூரி விடுதிக்குத் தேவையான பணம் அனுப்பியுள்ளேன் பெற்றுக்கொள். கடமை என்னை அழைக்கிறது. விடை பெறுகிறேன்.

இன்னணம்,
உன் சேதி கேட்டுப் பூரிக்கும்
அண்ணன்.

'சோறு'—மனிதனுடைய முதற் பசி
'காதல்'—மனிதனுடைய இரண்டாவது பசி
—வி. ஸ. காண்டேகர்.

வாழ்க்கையில் எதிர்ப்படும் துன்பங்களைச் சமாளிப்பதற்கு நண்பர்களே உற்ற துணை
—அரிஸ்டாடில்

நூற்க வாரீர்

(ஓரங்க நாடகம்)

" மேரி காந்தன் "



முதல் சீன்.

இடம்—சௌபாக்கியத்தின் வீடு.

பாத்திரங்கள்:—கிராம சேவகி, சௌ பாக்கியம் தாயார்

தாயார்.—(கிராம சேவகி வருவதைப் பார்த்து) வாங்க அம்மா வணக்கம்..

கி. சேவகி.—வணக்கம்......சௌபாக்கியத்தை எங்கே..காணலே..

தாய்.—சௌபாக்கியமா..வீட்டில்ல வேலே செஞ் சிக்கிட்டு இருக்கு....இப்படி இருங்க.. இதோ வரச்சொல்றேன்..[கொஞ்ச நேரம் கழித்துச் சௌபாக்கியம் வருகிருள்.]

சௌபா.—வாங்க அக்கா..வணக்கம்....எப்போ வந்தீங்க..

கி. சே.—இவ்வளவு நேரத்திற்குப்பிறகு வந்து கேட்கிருயே ..ஆமா உங்கம்மா உன்னே வரச்சொல் றேனு வந்தாங் களே எங்கே அவர் கள்....

சௌபா. — அவங்களா ..வீட்டில் தான் இருக்கிருர்கள்....

கி. சே.—ஏன் சௌபாக் கியம்..என்ன விச யம்..

சௌபா. — ஒன்றுமில் லக்கா..வந்து..

கி. சே.—என்ன சும்மா சொல்லு.

சௌபா.—அக்கா எங்க வீட்டுல்ல இந்த ஒரு சேலேத்தான் நல்ல சேலேயா இருக்கு.. நீங்க வரும்பொழுது அம்மா இந்தச் சேலே யைத்தான் அம்மா உடுத்திக்கொண்டு வெளியே போய் விட்டு வந்தார்கள்..நீங்க வந்திருப்பதாகத் தெரிந்ததும் நான் வாங்கி உடுத்துக் கொண்டு வந்தேன். கந்தல் சேலேயை உடுத்திக்கொண்டு அம்மா உங்க முன்னே வருவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு வீட்டிலே இருக்கி ருர்கள்.

கி. சே.—சௌபாக்கியம்......உங்க நிலைமையை கேட்கும் பொழுது மிகவும் மனச் சங்கடமாகத் தான் இருக்கிறது. எங்குப் பார்த்தாலும் இந்த மாதிரிதான் ஏழைப் பெண்களுக்கு தங்கள் மானத்தைக் காக்ககூடச் சரியான துணிமணி இல்லாமல் இருக்கிருர்கள். தான் பெற்ற பிள்ளேகளுக்கு ஒரு முழம் துணி எடுத்துக் கொடுக்ககூட இயலாமல் எத்தனே குழந்தைகள் தெருவில் நிர்வாணமாக அலே கிருர்கள். குளித்து விட்டு, ஒரு முனேயை இடுப்பிலும் இன்னெரு முனேயை மரத்திலும கட்டிக் காய வைத்து கட்டுகிருர்கள். அந்த ஒரு சேலேயைத் தான் வருசக்கணக் கில் கட்டிக் கொள் கிருர்கள். பாவம் ..பார்க்கவும்கேட்க வும் பரிதாபமாக இருக்கிறது .. அது சரி சௌபாக்கியம் உனக்கு நூல் நூற்க தெரியு முல்லெ..

சௌபா. — பள்ளிக் கூடத்தில் படிக்கும் பொழுது கொஞ்சம் கற்றுக்கொண் டேன்...... இப் பொழுது வருமோ என்னவோ..

கி. சே.—என் வராது..நாங்கள் எல்லாம் முதலில் நூற்கத் தெரிந்து கொண்டா நூற் றேம்..இரண்டு நூற்ருயானல் தானே வந்து விடுகிறது..

சௌபா.—கஞ்சிக்கே கஷ்டமாக இருக்கும்பொழுது இராட்டை, பஞ்சுக்கு எங்கேபோவது..

கி. சே.—இந்தா பார் பாக்கியம்..ஒரு இராட்டை நான்கு ரூபாய்க்கும் குறைவுதான்..பூரா பணத்தையும் நீ உடனே கொடுக்க வேண்டாம்: முதலில் ஒரு ரூபாயோ, எட்டணவோ கொடு, மீதிப் பணத்தை ஆறு தவணையில் சிட்டமாகக் கொடுத்துக் கழித்து விடு, சரியாகப் போய்விடும். இராட்டையுடன் இரண்டு கட்டு பஞ்சும் கொடுப்போம். அதை வைத்து நூற்றுக் கொண்டே சிட்டம் போட்டுச் சிட்டத்தைக் கொடுத்து பஞ்சும், பணமும் வாங்கிப் கொள்ளலாம். பணமாகத் தர வேண்டியதில்லை. நீ விடாது நூற்ருயானல் உனக்கும் உங்கம்மாவுக்கும் வேண்டிய துணி மணிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொள்ளலாம். என்ன சொல்கிருய்..

சௌபா.—சரியாக்கா அம்மாவிடம் சொல்லி இன்றைக்கே ஒரு இராட்டை வாங்கிக் கொள்கிரேம்..

கி. சே.—அம்மாவும் ஒய்ந்த பொழுதில் நூற்கலாம். இன்னு ஒன்னு. பாக்கியம் நீ வயது வந்த பொண்ணு..வெளியே எங்கேயும் போய் வேலை எதுவும் செய்ய முடியாது, இராட்டை நூற்கிறது மாதிரி வேறெந்தத் தொழிலையும் பெண்கள் பத்திரமாக பாதுகாப்பாகச் செய்யமுடியாது. பெண்களுக்கு மானம் காக்கும் தொழில் என்ருல் வீட்டுக்குள்ளே இருந்து இராட்டை நூற்கிறது ஒன்றுதான். இன்னும் நூல் நூற்கும் போது எந்தக் கவலையும் கோபதாபங்கூட மறைந்து விடும். நாமே வாங்கி அந்த நூலைக் கொண்டு துணி மணி நூற்று உடுத்தும் பொழுது நமக்கே ஒரு சந்தோசம் உண்டாகிறது. இப்படி நம்ம உழைப்பால் சும்மா வருவது மாதிரி கிடைப்பதைப் பார்த்து மற்றவர்களும் நூல் நூற்க ஆரம்பிப்பார்கள். வீட்டுக்கு வேண்டிய சில்லரை செலவுக்கும் பணம் கிடைக்கும். நீ மட்டும் மனம் தளராமல் நூல் நூற்க ஆரம்பித்து விடு..அப்புறம் பாரேன்..

சௌபா.—சரியக்கா.....கொஞ்சம் பணம் கொடுத்து ஒரு இராட்டை வாங்கிக் கொள்கிரேம்..

கி.சே.—அப்படியானல் இராட்டையை எடுத்துக் கொண்டு தருகிறேன்..வரட்டுமா..

சௌபா.—சரி யக்கா (போகிருள்).

இரண்டாவது சீன்

இடம்:—சரோஜா வீடு.

பாத்திரங்கள்.—சரோஜா, கிராம சேவகி.

கி.சே.—சரோஜா..சரோஜா..

(சரோஜா வீட்டிலிருந்து வருகிருள்).

சரோ.—ஓ..நீங்களா..வாங்க அக்கா, வணக்கம்.

கி. சே.—வணக்கம்..உன்னிடம்தான் வந்தேன்..

சரோ.—என்ன விசயம் சொல்லுங்கள்..

கி. சே.—நம் ஊரில் நூற்போர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கலாமென்று இருக்கிரேம். அதில் நீயும் சேர வேண்டும்..

சரோ.—எனக்குத்தான் நூற்கவே தெரியாதே..

கி. சே.—சீக்கிரம் பழகிக் கொள்ளலாம். இரண்டு நாள் நூற்ருயானல் தானே வந்து விடுகிறது..

சரோ.—நான் நூற்று எதற்கு ? அதில் என்ன ஆகப்போகிறது!

கி. சே.—வீட்டில் எவ்வளவு நேரம் சும்மா போகிறது. அதிலும் நீ ஒரு வேலையும் செய்வதில்லை. சும்மா இருக்கும் நேரங்களில் இராட்டை நூற்றுக் கொண்டிருந்தால் எவ்வளவோ பிரயோஜன முள்ளதாக இருக்கும். நேரம் போவதே தெரியாது. மனதிற்கும் சந்தோசமாக இருக்கும். சிறு வருமானமும் வந்து கொண்டிருக்கும்..

சரோ.—அதிருக்கட்டும் அக்கா..நான் ஒன்று கேட்கிறேன்..மில் ஆலைகளும் இயந்திர சாலைகளும் நிறைந்திருக்கும், இந்தக் காலத்தில் இப்படி இராட்டை மூலம் நூல் நூற்றும், குடிசைத் தொழில் செய்தும் வருவாயை பெருக்கிக் கொள்ளலாம், சுயதேவையைப்

பெருக்கிக் கொள்ளலாமென்று சொல்கிறீர்களே..வேடிக்கையாக இல்லையா....அது எப்படி முடியும்..

கி. சே.—எல்லோரும் சொல்கிறதைத் தான் நீயும் கேட்கிறாய்..இந்தா பார் சரோ..இயந்திர சாலைகளையும், மில் ஆலைகளையும் எல்லா இடங்களிலும் வைக்க முடியுமா? மில் ஆலைகள் மூலம் இங்குள்ள மக்களுக்கு எவ்வளவு பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும். வீட்டுக்கொரு இராட்டை சுற்றும்பொழுது அவர்களுக்கு வேண்டிய துணிமணி கிடைத்து விடுகிறது. சுயதேவையை பூர்த்தி செய்வது என்பது வேடிக்கையாக இல்லையா என்று கேட்கிறாய்..நெடுநாள் படுத்த படுக்கையாகக் கிடந்த நோயாளியை ஓடு என்றால் அவனால் ஓடத்தான் முடியுமா! அல்லது அந்த நோயாளி சிறு பையன்கள் ஓடியாடி விளையாடுவதைப் பார்த்து தானும் அவர்களைப் போல ஓடியாடி விளையாட எண்ணினால் முடியுமா!

சரோ.—முடியாது..

கி. சே.—அது போன்றுதான் இராட்டை மாதிரி சிறு சிறு தொழில்களை தங்கள் நிலைமைக்குத் தக்கப்படி செய்து கொஞ்சம் கொஞ்சமாகத்தான் முன்னேற வேண்டும்.

சரோ.—அதுசரி இராட்டை போன்ற சிறு தொழில்கள் நிலமைக்குத் தக்க காரியம்தான் என்றாலும் மில் துணிகளும் மற்ற மேல் நாட்டுத் துணிகளும் மலிவாகவும் நல்லதாகவும் கிடைக்கும் பொழுது கதரை யார் அதிக விலை கொடுத்து வாங்குவார்கள்..?

கி. சே.—மில் துணியுடன் கதரால் போட்டிப்போட முடியாது தான்..ஆனால் ஒன்று சரோஜா. சிறு துளி பெரு வெள்ளம்; குழாய் நீர் எவ்வளவு வேகமாக வந்து கொண்டிருக்கிறது..மழை துளி, துளியாகத் தான் பெய்கிறது, ஆனாலும் மழையிடம் குழாய் நீர் போட்டி போட முடியுமா! அனைவரும் நூற்கும் பொழுது என் அதிக விலை கொடுத்துகதர் வாங்க வேண்டும். உழைப்புக்குத் தகுந்த ஊதியம் என்ற கணக்கில் போய் விடும். அதிலும், சிறுக சிறுகத்தான் பெருக்கிக் கொள்ளவேண்டும்..பாரம் தூக்கும் பயில்வான் கொஞ்சம் கொஞ்சமாகத் தூக்கிப் பழகிய பின்னர்தான் பெரும் பாரத்தைத் தூக்க முடியும்..நிலைமைக்கு, தக்க நினைப்பு விரலுக்குத் தகுந்த வீக்கம் என்றது மாதிரி கையிலிருக்கும் பணத்துக்கு ஏற்றப்படிதான் வியாபாரமோ மற்ற வேலைகளோ செய்ய முடியும்..அப்படியில்லாமல் ஆரம்பித்தால் பெரிய ஜவுளிக்கடை, பெரும் சாமான் கடை தான் ஆரம்பிப்பேன் இல்லை என்றால் ஒன்றும் வேண்டாமென்றிருந்தால் என்ன ஆகும்! ஒன்றுமே முடியாது..வலிமைக்கு தக்கப்படியும், வசதிக்கு ஏற்றபடி படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும்..

சரோ.—அது சரி. நூற்கவே முடியாதவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்..ஆபிசில் வேலை செய்பவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நூற்பதற்கு நேரம் எங்கே கிடைக்கும்.

Our "ROSE BRAND GHEE" is prepared scientifically from pure and fresh butter and tested in our own well equipped laboratory. It is crystaline and has got very good natural aroma and flavour. It withstands the Food Adulteration Act of the Government of India.

Available in 39 lbs., 9 lbs., 2 lbs., and 1 lb. sealed tins.

Manufactured by

LINGAM & CO.,

COIMBATORE

அவர்கள் எல்லாம் எப்படி அதிக விலை வாங்குவது; எவ்வளவு காலத்துக்கு இப்படி அதிகமான விலை கொடுத்துக் கதர் துணியாக வாங்கிக் கொண்டிருக்க முடியும்..

கி. சே.—நல்ல கேள்விகளைத்தான் கேட்கிறாய்.. வியாதியாக இருக்கிறவர்களை அவர்கள் குணமாகிற வரைக்கும் வீட்டிலுள்ளவர்கள் மருந்தும் உணவும் மற்றதும் செய்து காப்பாற்றுவது போல இராட்டை போன்ற எளிய தொழில்களைச் செய்யும் மக்களுக்காக அவர்களை விட வசதியிலும் வாழ்க்கைத்தரத்திலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் கொஞ்சம் அதிக விலை கொடுத்து வாங்குவது மனிதனின் சுய முயற்சிக்கு உதவுவது போல்தானே..அதிலும் நம் மனிதர்களின் சிறு தொழில் துறைக்கு உதவாமல் வேறு பெரும் தொழில் சாமான்களுக்கு விலை கொடுத்து வாங்குவது மனித முயற்சியை மதிக்காதது போல்தானாகும்.... நூற்க முடியாதவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கேட்கிறாய்..மனதிருந்தால் இடமுண்டு; ஒரு அரைமணி நேரம் கூடவா கிடைக்காமல் போகிறது. உன்னைப் போன்ற படித்த பெண்களும் மற்றப் பெரிய வீட்டுப் பெண்களும் சும்மா இருக்கும் நேரங்களில் ஏன் நூற்கக் கூடாது..வீண் பேச்சிலும் வெட்டிக் காரியங்களிலும் நம் காலத்தை செலவழிக்கிறோமே தவிர வேறெந்த நல்ல காரியத்தைச் செய்கிறோம்..

நாம் நூற்பதைப் பார்த்து மற்றவர்களும் நூற்க ஆரம்பிப்பார்கள். அதனால் எத்தனையோ எளிய தொழிலாளிகளுக்கும் வேலை கிடைக்கும் “ஏழைகளுக்கென்று நூல் நூற்கவும் கூட இஷ்டமில்லாமல் வெறும் சமாதானம் சொல்லிச் சும்மா இருப்பவர்களுக்கு சேவை என்பதன் பொருளே தெரியாது. தானும் நூற்று ஏழைகளுக்கு வழி காட்டி அவர்களையும் நூற்கச் செய்கிறவன் தெய்வத்திற்குப் பணி செய்கிறவனாவான்” என்று காந்திஜியே சொல்லி இருக்கிறார்.. சேவையைப்பற்றி எல்லோரும் தான் சொல்கிறோம்..இந்த ஒரு செயலைக் கூடவா செய்ய முடியாது !

சரோ.—சரி அக்கா..நீங்கள் சொல்கிறது மாதிரி நானும் இனி நூற்க ஆரம்பித்து விடுகிறேன்..

கி. சே.—ரொம்ப நல்லது. நாளைக்கே இராட்டையும் பஞ்சும் கொண்டு வந்து கொடுக்கிறேன். வரட்டுமா..வணக்கம்..

தினசரிக் கடமைகள்

ப. தேவகுரு

காலையில் தினமும் எழுந்திடுவாய்
கடவுளைத் தொழுது வணங்கிடுவாய்
வேலையை முடிக்கப் பழகிடுவாய்
விரைவில் பள்ளி சென்றிடுவாய்!

கற்றுக் கொடுக்கும் பாடங்களைக்
கவனமாய்க் கேட்டுப் படித்திடுவாய்
மற்றவர் களைக் காட்டிலுமே
மதிப்பெண் வாங்க முயன்றிடுவாய்!

சுறுசுறுப் பாக இருந்திடுவாய்
சுத்தமாய் இருந்து வந்திடுவாய்
விருவிருப் போடு பாடங்களை
வேகமாய் நீயும் படித்திடுவாய்!

பெரியவர் களைக் கண்டாலே
பணிந்து மதிப்புத் தந்திடுவாய்
உரிய பழக்கம் பெற்றிடுவாய்
உண்மை என்றும் பேசிடுவாய்!

நடந்து ரோட்டில் செல்லுகையில்
நான்கு பக்கம் பார்த்திடுவாய்
இடது பக்கமே சென்றிடுவாய்
இடையில் நிற்பதை நிறுத்திடுவாய்!

குணமாய் அன்பாய்ப் பழகிடுவாய்
கூடிமா லையில்விளை யாடிடுவாய்
தினமும் இரவில் படித்திடுவாய்
தாய்தந் தைசொற்படி கேட்டிடுவாய்

சுகமாய் இரவில் தூங்கிடுவாய்
சோம்பல் நீக்கி வாழ்ந்திடுவாய்
மகிழ்ச்சி யாக இருந்திடுவாய்
மாண்பை யடைய உழைத்திடுவாய்!

(432-ம் பக்கம் தொடர்ச்சி)

'பள்ளியில் பண்பு பயிலும் மாணவர்களின் (மாணவர்கள் தானா?) செய்கை இப்படி இருந்தால் நாடு முன்னேறுவது எப்படி?'—என்று எண்ணிய பரிமளா விருட்டென எழுந்து நடந்தாள்.

* * *

ஆடைகளை மாற்றிக்கொண்டு பூஜை அறைக்குள் நுழைந்தாள் பரிமளா. அங்கே கடவுளர் படங்களிடையே—

பரிமளாவை மணந்த மறுமாதமே அவளை விதவையாக்கி மறைந்த ஆணுலக திலகம்—அவளது அத்தான் பிரபாகரின் படமும் இருந்தது. அதை வணங்கிவிட்டு மானசீகமாக,

"அத்தான்! நீங்கள் என்னை விட்டுப் பிரிந்த பிறகும் நீங்கள் கட்டிய தாலியைக் கழட்டாமல் பூட்டிக்கொண்டிருப்பதற்காக என்னை மன்னித்து விடுங்கள். என் பெண்மையை நான் காப்பதற்கு அது அவசியமாகிறது. வாயால் மட்டும் பண்பு பேசி செயலில் அதை மறந்த இவ்வுலகில் தாலியே பெண்ணிற்கு வேலி!"—என்று உள முருகப் பிராத்தித்து அம்மங்கல நாணைக் கழட்டி அப்படத்தின்மேல் வைத்தாள். இனி நாளை காலையில் அவள் வெளியே புறப்படும்போதுதான் அது அவளது கழுத்தை அலங்கரிக்கும். அது வரை இங்குத்தான் அதற்குவாசம்.

'தாலி பெண்ணுக்கு வேலி!'—என்ற திரைப்பட இசை ஒன்று அடுத்த வீட்டு வானொலியில் முழங்கியது பரிமளாவுக்கு நன்றாக கேட்டது!

இயற்கை என்றால் கடவுள். கடவுள் என்றால் இயற்கை. இரண்டும் உண்மையே! கடவுள் என்று கொண்டாலும் கொள்ளுங்கள். இயற்கை என்று கொண்டாலும் கொள்ளுங்கள். எல்லாம் ஒன்றே!

—மறைமலையடிகள்.

கருகிய மலர்கள்

தென்புத்தூர்—தில்லையாடிவள்ளி

பின்னணி.—

[ஆசையை மறந்து—அன்பு மார்க்கத்தால் அகிலமெலாம் கட்டியாளவேண்டும் என்ற புத்தர் கொள்கையை, புனிதக் கொள்கை யாக மதித்து மண்டலங்கள் பலவற்றை இணைத்து, வட இந்தியாவின் பெரும் பகுதியைத் தன் ஆளுகைக்கு உட்படுத்திய ஹர்ஷ சக்கரவர்த்தியின் அரசு அஸ்தமித்து விட்ட நேரம். நாடு சிதறுண்டது. நாடாள நாங்களும் உண்டு எனப்பலர் முன்வந்த காலை இந்துஸ்தானத்தின் பெரும் பகுதியை இழந்துவிட்டு—ஒரு பகுதியை 'தாஹீர்' சிற்றரசன் ஆண்டு வந்தான்]

[தாஹீரின் செல்வக் குமாரிகள் தாம் 'மாலினி', 'சித்ரா' என்னும் இருவரும் தாஹீரின் அரசவை இசைக் கலைஞன் 'ஜெய்வந்த்' என்பான் இவர்கள் இருவருக்கும் இசைபயிற்றுவித்து வந்தான். மாலினி என்பாள் அவனின் கட்டழகில் மயங்கித் தன்னையே அவனுக்குத் தத்தம் புரியச் சித்தமாயிருந்தாள். அப்போது ஒருநாள்......]

இயல் 1

[மாலினி தனிமையின் கோரப்பிடியில் சிக்கித் திக்குமுக்காடிக்கொண்டிருந் தாள். தங்கை சித்ரா வந்ததைக் கூட அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை.]

சித்ரா.—என்ன அக்கா..! உன்னுடைய கமல முகத்தில் ஒருவிதக் கலக்கம் காணப் படுகிறதே !

மாலினி.—ஒன்றுமில்லை....! திங்கள் ஒளிபெறல் செழுங்கதிர் வரவால்....!

சித்ரா.—என்ன ?

மாலினி.—அப்படித்தான் கலைஞர்கள் கூறுவர்..

சித்ரா.—அக்கா..திறமையாகப் பேசுவதாக எண் ணம்..எனக்கு ஏதும் தெரியாதா என்ன ?

மாலினி.—என்ன தெரியுமாம்....?

சித்ரா.—மாலினி தேவியார் அவர்கள் அரசவை இசைக்கலைஞன் ஜெய்வந்திடம் தன் உள்ளம் முழுவதையும் விட்டுவிட்டார்கள் என நன்றாகத் தெரியுமே... !

மாலினி.—என்..அவருக்கென்ன அழகில்லையா !

சித்ரா.—அழகில்லாமல் என்ன ? அந்தஸ்து இல்லையே என்றுதான் அப்பா சொல் லுவார்கள்.

மாலினி.—ஏழை—பணக்காரன் ; உயர்ந்தவன்—தாழ்ந்தவன் ; எனப் பார்த்தா அன்பு உதய மாகிறது ? அன்பின் முன் அகிலத்தில் உள்ளவர்கள் அனைவரும் சமம்தானே சித்ரா !

சித்ரா.—அக்கா..! எனக்குக் கூடத் தெரியும்.. அண்ணாந்து பார்க்கவேண்டிய மாளிகையை யும்—குனிந்து நுழைய வேண்டிய குடிசை யின் முன் மண்டி இடச்செய்யும் வல்லமை அன்புக்குத்தான் உண்டு என்பது..இருந் தாலும் அப்பா சீறுவாரே....

மாலினி.—சித்ரா..! "செம்புலப் பெயல் நீர் போல, அன்புடை நெஞ்சம்" இரண்டும் ஒன்றிவிட்டன. ஒருயிரும் இரண்டுடலும் நாங்கள்—எங்களைக் கட்டுப்பாடென்னும் உளி கொண்டு வெட்டிப் பிரித்துவிட முடியாது.. அப்பாவினால் மட்டுமல்ல ஆண்டவனாலே கூட

....

சித்ரா.—என்னவோ அக்கா....எனக்கேது அந்த அனுபவம்....

மாலினி.—சித்ரா..எனக்காக ஒன்று செய்ய வேண்டும்..செய்வாயா..சித்ரா ?

சித்ரா.—என்ன அக்கா....அது ?

மாலினி.—இன்று இரவு நம் அரண்மனைப் பூங்காவில் அவருக்காக நான் காத்திருப்பேன் என அவரிடம் சொல்லவேண்டும்..

சித்ரா.—இதுதானு அக்கா.... அழைத்துக் கொண்டே வந்துவிடுகிறேன்.

மாலினி.—சரி..சித்ரா!

— திரை —

இயல் 2

[நிலைமை.—அரண்மனைப் பூங்காவில் ஜெய்வந்தின் வருகைக்காக மாலினி காத்துக்கொண்டிருக்கிருள். ஜெய்வந் மொட்டவிழ்ந்த ரோசா மலர் ஒன்றைத் தன் கையில் ஏந்திய வண்ணம் அவள் எதிர்வந்து நிற்கிருன்.]

மாலினி.—வாருங்கள்..எங்கே வரமாட்டீரோ என ஐயப்பட்டிருந்தேன்..

ஜெய்வந்.—அரச ஆணையாயின் தவற விட்டுவிடும் துணிவு ஓரளவிற்கு எனக்குண்டு..அன்பு ஆணையாயிற்றே..தண்டனை பலமாகவல்லவா இருக்கும்.

மாலினி.—ஜெய்வந்! நீங்கள் நினைப்பதுபோல் ஒன்றும் இராது..

ஜெய்.—[மாலினியின் கருங்குழலில் வண்ண ரோசாவைச் சூடிக்கொண்டே] மாலினி! இதோ நான் சூட்டும் மலர் இன்னும் சிறிது நேரத்தில் கருகிவிடும். நமது அன்பிற்கு அதைப் போன்ற நிலை என்றும் ஏற்படாதே?

மாலி.—உள்ளத்தில் உறுதியும்—எதையும் தாங்கும் இதயமும் இருக்கும் வரை அப்படியொன்றும் ஆகிவிடாது ஜெய்வந் !

> பொறுமை எங்கு இல்லையோ....அங்குக் காதலும் இல்லை.
>
> —பிரெஞ்சு

ஜெய்.—மாலினி அதோ பார்.,வானில் தண்மதி ஒளிர்கிறது..இதோ என் அருகில் அந்த வானத்து வட்ட நிலா—இவ்வையகத்தே குதித்து வந்ததைப் போல் நீ அமர்ந்திருக்கிருய். உனக்கும் அக்கோல நிலவிற்கும்தான் எத்தனை மாறுபாடு..நிலா பெற்றிருக்காத குளிர்ச்சியும் அழகும் நீ பெற்றிருக்கிருய்...நிலாவழகி .... தங்கத் தகட்டிலே வைரமணி பதித்ததுபோல் உன் அழகு எனில்..உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை! ஆனுல் அந்த அழகு அமர வேண்டிய இடத்தில் அமரவேண்டுமே என்பதில் எனக்கு அக்கரை அதிகம்.

மாலி.—அந்த அழகுக்குடைய அழகநம்பி தாங்கள் ஒருவர்தான் என்பதில் ஐயமே வேண்டுவதில்லையே !

ஜெய்.—மாலினி ! இது எனக்கு மட்டுமே கிடைத்த நல்வாய்ப்பு. இந்த நிலை என்றும் நீடிக்குமா என்ற கவலையே என்னை ஆட்கொண்டுள்ளது. ‘மன்னர் மகள்’ என்ற குறுக்குச் சுவர் மட்டும் இல்லாமலிருந்தால், கண்ணே ! இன்பம் நிலையானதுதான்.

மாலி.—அப்பா தடுத்தாலும்—இந்த அகிலமே எதிர்த்தாலும்—தப்பாமல் நம் திருமணம் நடந்தே தீரவேண்டும் ஜெய்வந் !

ஜெய்.—மாலினி ! பசி உடலை வளரச் செய்கிறது. நம் இருவரின் உள்ள மலர்ச்சியும் கருகி அன்பு உயிரை மலரச் செய்கிறது. சருகாகிவிட நிறைய வழிகள் உண்டு....

மாலி.—கண்ணுளா ! உங்கள் உள்ளத்தில் உரம் இருக்கும் வரை எனக்கு அச்சமே இடையாது....

ஜெய்.—அன்பே ! எலியென்று இகழப்படும் கோழைகூட கட்டழகியின் கடைவிழியிலே தன்னை ஏற்கும் காதலைக் கண்டால் புலியாகி விடுவான். “கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்—மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்” மன்னனின் அடக்குமுறை முன் உன் உறுதி தூளாக்கப் பட்டுவிடும்..என்று தான்..

மாலி.—அன்பரே! மன்னனின் அடக்கு முறையால் என் உடலை வேண்டுமானால் பிரிக்க முடியும்..என் உள்ளத்தை எந்த அடக்கு முறையாலும் அசைக்கவே முடியாது.... கண்ணாளா! "ஆரத்தழுவி அடுத்த விநாடிக்குள் உயிர், தீர்ப்போ மெனினும் தேன்போல் வரவேற்பேன்".

ஜெய்.—அன்பே! இந்த உள்ள உறுதி ஒன்று மட்டுமே போதும்! நாம் ஒன்றுபடுவது உறுதி!

[கருவிழிகள் ஒன்றையொன்று கவ்வின. அதற்குமேல் அவர்களால் ஒன்றும் பேசமுடியவில்லை. விழிமொழியில் இவ்வுலகையே விலை பேசினர் போலும். காலம் அவர்களைக் காட்டிக் கொடுக்கும் தூரத்திற்கு விரைந்தது. பிரியாமல் பிரிந்தனர்].

— திரை —

இயல் 3

[பாக்தாத் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு, வடமேற்கு ஆசியாவில் பெரியதொரு முஸ்லீம் சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த கலிபாவாலித் என்பவன்—இந்தியாவிலும், புத்த மார்க்கத்தை அழித்து—நபிகள் நாயகத்தின் கொள்கையைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன், முகமது காசிம் என்ற சேனைத் தலைவனின் தலைமையில் பெரியதொரு படை அனுப்பி இருந்தான். இந்தியச் சிற்றரசர்கள் அனைவரும் போரிட்டுத் தோற்றனர். வலிமை பொருந்திய முகம்மதியர் படைமுன் தாஹீரின் படை உலைந்து ஓடியது. தாஹீரும் போரில் எதிரிகளால் கொல்லப் பட்டான்].

[காட்டு மிராண்டிகள் போல் மனித இனம்—ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொள்வதை எண்ணி—எண்ணி நைந்து, மாலினியும், சித்ராவும் அரண்மனை மாடத்தில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களின் நம்பிக்கைகுப் பாத்திரமான வேலையாள் நரேந்திரன் ஓடோடியும் வருகிறான்]

மாலி.—நரேந்திரா! என்ன இவ்வளவு வேகம்....?

நரே.—இளவரசியாரே! வணக்கம். போரின் நிலையைத் தங்களிடம் சொல்லவும்—இக்கடிதத்தைக் கொடுக்கவும் பணித்தார் ஜெய்வந்!

மாலி.—நரேந்திரா! போரின் நிலைமை என்ன?

மாலி.—இளவரசியாரே! முகமதியப் படைகள்—நம்படைகளை முறியடித்துவிட்டன.

மாலினி & சித்ரா.—ஆ......!

நரே.—அது மட்டுமல்ல அரசியாரே! நம் மன்னரும் விழுப்புண் ஏற்று—செத்தும் சாகாத நிலையை அடைந்துவிட்டார்கள்!

மாலினியும் சித்ராவும்.—அப்பா....! [இருவரும் அழுகின்றனர்]

நரே.—இளவரசியாரே! அழுவதற்கு இதுவா நேரம்....அடுத்தது என்ன எனச் சிந்தித்துப் பணியாற்ற வேண்டும்....!

மாலினி.—அவர் என்ன சொன்னார்?

நரே.—இதோ....அதைக் கடிதம் சொல்லும்.

[கடிதத்தை வாங்கி மாலினியும் சித்ராவும் படிக்கின்றனர்]

மாலி.—அன்பு மாலினி.

["நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. இனி இங்கிருந்தால் நாம் முகமதியரால் பிடிக்கப்படுவது உறுதி. அரண்மனையைப் பிடிக்குமுன் ரகசிய வழி மூலம் வெளியேறி வந்து விடுங்கள். நாம் எப்படியும் புருஷபுரத்திற்குச் சென்று விடலாம். வேலையாள் நரேந்திரன் வேண்டியதைச் செய்வான்"] **—அன்பன் ஜெய்வந்.**

தனக்குத் தெரியாததைப் பெண் மறைத்து விடுகிறாள்.

—பிரிட்டன்.

சித்ரா.—அக்கா......!

மாலி.—என்ன சித்ரா!..

சித்ரா.—எதிரியின் தாக்குதலுக்குப் பயந்துதானே நாம் தப்பவேண்டியுள்ளது....?

மாலி.—நிலைமை அப்படி..வேறு வழி இல்லை சித்ரா..

சித்ரா.—ஏன் அக்கா வேறு வழியில்லை....போர் உடை அணிந்து புறப்படு....களம் காண் போம்.

மாலி.—சரி....சித்ரா. விரைவில் புறப்படு. அவரைக் காண்போம்..எண்ணத்தை எடுத் துரைப்போம்!

இயல் 4

[வேலையாள் நரேந்திரன் உதவியோடு இரகசிய வழிமூலம் புறப்பட்டுக் கோட் டையின் வெளிப்புறத்தை அடைகின் றனர். ஆங்கே ஜெய்வந் இரண்டு குதிரைகளோடு நின்றிருக்கிருன். மாலினி, சித்ரா இருவரின் வருகையை அறிந்து..]

ஜெய்.—மாலினி! நீயும் சித்ராவும் இதோ இந்தக் குதிரையில் ஏறிக்கொள்ளுங்கள். விரைவில் சென்ருக வேண்டும்.

சித்ரா.—நாங்கள் தப்பித்துக்கொண்டு போகும் எண்ணத்தோடு வரவில்லை....

ஜெய்.—பின்....

சித்ரா.—போருடை தரித்துக் களம் செல்லப் போகிருேம். எங்களுடையத் தந்தையைக் கொன்றவனையும்..நாட்டை இடுகாடு ஆக்கிய வனையும் பழிக்குப்பழி வாங்கவேண்டும். தங்களின் எண்ணம் அறியவே ஈண்டு வந்தது....

ஜெய்.—மாலினி! சித்ராவின் பேச்சை நீயும் ஒத்துக் கொள்கிருயா?

மாலி.—ஜெய்வந்! எனக்கு ஒன்றுமே விளங்க வில்லை....

சித்ரா.—எப்படியக்கா உங்களுக்கு விளங்கும்? நீங்கள் தான் காதல் போதையில் கருத் திழந்து இருக்கிறீர்களே!

மாலி.—சித்ரா..இது உனக்கே அழகாக இருக் கிறதா? எனக்கு மட்டும் தந்தையின் பாச மும்—தாய் நாட்டின் நேசமும் இல்லை யென்று எண்ணுகிருய்? ஆத்திரத்தில் அறிவை இழந்துவிடக்கூடாது....

சித்ரா.—அக்கா......நீங்கள் வேண்டுமானுல் அறிவை இழக்காமல் இருங்கள்..நான்....

ஜெய்.—சித்ரா......உன்னுடைய வீரத்தைப் பாராட்டுகிறேன். ஆனுல்....'விளக்கில் மோதிய விட்டிலாகி விடுமே உன் வீரம்'....

சித்ரா.—என்ன சொல்லுகிறீர்கள்....?

ஜெய்.—முகமதியப் படைமுன் 'நமது வீரம்' எம் மாத்திரம்?

சித்ரா.—வெற்றி தோல்வியைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. போரிலே வீர மரணமடைந்து **பெண்கள் இனத்திற்கு, மங்காத சுடர் விளக்காய் ஒளிரும் தாய்க் குலத்திற்குப் பெருமை தேடிக் கொடுக்கிறேன்.** நாட் டின் பேராசிரியர்கள் என் உடலிலிருந்து வடியும் குருதி கொண்டு வீரகாவியம் வரையட்டும்! பெற்றதாயும் பிறந்த பொன் ஞடும் பெருமை கொள்ளட்டும்!

ஜெய்.—சித்ரா! நாம் எதையும் இப்போது செய் வதற்கில்லை. வீரத்தால் அவர்களை வெற்றி கொள்வதென்பது முடியாது! வஞ்சகத் தால்தான் வெற்றி கொள்ளவேண்டும். அதற்கும் இதுவல்ல நேரம். சீக்கிரம் கிளம் புங்கள்....எதற்கும் புருஷபுரம் சென்று ஒரு முடிவு காண்போம்.

மாலி.—சித்ரா! எந்த நேரத்திலும் நம்மை இடர் சூழலாம். எனவே அவர் சொற்படி செய்வோம்.

நரே.—இளவரசியாரே! ஜெய்வந் சொல்வது தான் மிகவும் பொருத்தமாக இருக்கிறது அவ்விதமே செய்யலாம்.

[மாலினி, ஜெய்வந், நரேந்திரன் ஆகிய இவர்களின் முடிவை சித்ரா ஒத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனு லும் அவளை ஊமையாக்கிவிட்டது. அவர்களின் ஒருமித்தக் கருத்து.]

ஜெய்.—நரேந்திரா ! இருட்டிவிட்டது நீபோய் ஒரு தீவட்டி எடுத்துக் கொண்டுவா. நாங்கள் இருள் விலக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்.

[மாலினியின் இடுப்பை இறுகப் பற்றியவாறு சித்ரா குதிரை மீதமர்ந்து கொண்டாள். ஜெய்வந் மற்றொரு குதிரைமீதமர்ந்து, வழிகாட்டி முன்னே செல்லுகிறான்....]

மாலி.—முட்டாள்களின் உள்ளம்போல் வானம் இருண்டு கிடக்கிறது பார்த்தீர்களா ?

ஜெய்.—'அறிவு' எனும் விளக்கு தெளிவளிக்க இதோ வந்துவிடும் மாலினி !

மாலி.—'இலட்சியப்பாதை' எப்படி எல்லாமோ இருக்கும் என்கிறார்களே—அது இப்படி இருக்குமா ஜெய்வந் !

ஜெய்.—மாலினி ! வேடிக்கையான பேச்சு....

மாலி.—இருள் நங்கையின் முந்தாணியை விலக்க இதோ நிலவுப் பெண்ணாள் வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அவள் மட்டும் வந்துவிட்டால்....

ஜெய்.—நரேந்திரன் உதவி தேவையே இல்லை என்கிறாயா ?

மாலி.—இல்லை ஜெய்வந் ! இந்த இடமே இன்ப புரியாகிவிடும். அவள் வழியவிடும் பால் நுரையினால், பாறைகளான இக்குன்றுகள் பளிங்காக மாறிவிடும்.

ஜெய்—மாலினி ! எப்படியும் எதிரிகளின் தாக்குதல் நமக்கு உண்டு..இன்னும் சிறிது தூரம் தான் இக்கரடு முரடானவழி..பிறகு நதிக்கரைதான் அங்கு படகுகள் நமக்காக காத்திருக்கும். சில தினங்களுக்குள் புருஷபுரம் அடைந்துவிடலாம் பின்னர் இடரே நமது வாழ்க்கையில் ஏற்றம் பெறாது....வேகமாக வாருங்கள்....

மாலி.—நரேந்திரன் நம்பின்னாலேயே தீவர்த்தியுடன் வருவதாகப் போனானே..இன்னும் வரவில்லையே....(ஆழ்ந்த பெருமூச்சு..)

ஜெய்.—அதோ........தீவர்த்தியுடன் நிற்பது நரேந்திரனாகத்தான் இருக்கவேண்டும்..?

சித்ரா.—நமக்கு முன்னால் இந்த பாதையைக் கடந்து எப்படிப்போனான்....?

மாலி.—ஏதோக் குரல்கள் கேட்கின்றனவே....

சித்ரா.—அதோ நிற்பது நரேந்திரன்தான்....

[இவர்கள் மூவரும் குரல்வந்த இடத்தை நெருங்கினர் தீவர்த்தி அணைந்தது பலமான கரங்களால் அணைப்புண்டனர். கும்மிருட்டு. உணர்வுகள் தான் பயங்கரமான நிகழ்ச்சிகளை அவர்கள் அறிவிற்கு எட்டவைத்தது.]

— திரை —

இயல் 5

[மாலினி, சித்ரா, ஜெய்வந் ஆகிய மூவரும் முகமதிய சேனைத்தலைவன் முகமது காசிமின் முன் கொண்டு வரப்பட்டனர். உணர்விழந்திருந்த மூவரும் உணர்வுபெற்று விழித்தெழுந்தபோது முகமதிய சேனைத் தலைவன் பாசறையில் தாங்கள் இருப்பதையும்—முகமது காசிமின் முன் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நரேந்திரன் நின்றிருப்பதையும் கண்டு..........ஆத்திரங் கொண்ட மாலினி....]

மாலி.—துரோகி......எங்களை மாற்றானுக்குக் காட்டிக்கொடுத்து, கைக்கூலி பெருமளவிற்கு இழிந்தவனாகிவிட்டாயே ! படமெடுத்தாடும் நாகத்தை வண்ணச் சரமென்று நம்பி ஏமாந்து விட்டோம்..ஏத் துரோகியே ....துலைந்துபோ....

[ஜெய்வந்தின் இடையில் இந்த கட்டாரியை எடுத்து நரேந்திரன் மீது வீசினான் 'ஹா' என்ற பேரோலியுடன் கீழே சாய்கிறான். இவ்வளவும் ஒரு கணத்தில்....]

மாலி.—முகமது காசிம் ! துரோகிகளுக்கு இந்த தண்டனை வேண்டியதுதானே....

முகமது காசிம்—மாலினி ! நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள். வஞ்சகத்தால் வெற்றி கொள்ள எண்ணினீர்களே..அதேவஞ்சகத்தால்தான் நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள். இது தெரியுமல்லவா ?

மாலி.—ஏன் தெரியாது? கோழையுள்ளம் கொண்ட சந்தர்ப்பவாதிகளும், கொடு நினைப்புடைய நரேந்திரன்களும் இருக்கும்வரை இதுவும்—இதைவிட அதிகமாகவும் நடக்குமென்றுத் தெரியுமே....!

காசி.—மாலினி! இன்னும் ஒன்றையும் தெரிந்து கொள்....உன்னுடைய காதலன் ஜெய்வந் என்பானை உன் எதிரிலேயே இதோ கொலை செய்யப் போகிறேன்....

மாலி.—ஐயோ..! காசிம்! வேண்டவே வேண்டாம்! என் கண்ணீரால் உன்பாதத்தைக் கழுவி கெஞ்சுகிறேன். அவரை மட்டும் ஒன்றும் செய்யாதே! இந்த உலகத்தில் எங்களுக்குள்ள ஒரே சொத்து—விலைமதிக்க முடியாத மலைபோன்ற செல்வம் அவர் தான். அவருடைய உயிர் இங்கே பிரிகிறதென்றால்—எங்கள் இருவரின் உயிரும் நிலைக்காது காசிம்!

காசி.—மாலினி! நீ நினைப்பதுதான் நடக்காது. எங்கள் மன்னர் 'காலிபாவாலித்'தின் அந்தப் புரத்தை அலங்கரிக்கவே உங்களைக் கொண்டு செல்கிறோம். இதோ பார்.... இந்தகத்தி ஜெய்வந்தின் உயிரைப் பிரிக்கப் போகிறது....இதை உங்களின் கண்களாலேயே கண்டுகளியுங்கள்....!

[கத்தியை ஓங்கி ஜெய்வந்தின்மேல் வீசினான். இக்கோரக் காட்சியைக் காணச் சகியாத மாலினியும் சித்திராவும் கண்களைப் பொத்திக் கொண்டனர்.]

காசி.—யார் அங்கே....? [உரக்கக் கூவினான். இருபணிப் பெண்கள் வந்தனர்.]

பணி.—வணக்கம்....தலைவ!

காசி.—இதோ....இந்த இருவரும் உங்கள் பொறுப்பில் இருக்கட்டும். நாளை இரவு நமது பயணம் ஆரம்பமாகிறது. பாக்தாத் நகரம் செல்லும் வரையிலும் இவர்களை ஒரு இடரும் சூழாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். இது என் ஆணை!

பணி.—அப்படியே..தலைவ!

— திரை —

இயல் 6

[முகமது காசிம் வெள்ளைக் குதிரை மீதமர்ந்து செல்ல—மாலினியும் சித்ராவும் பணிப்பெண்களோடு பல்லக்கில் உடன்வர—அரபிய வீரர்கள் இருபுறமும் அணிவகுத்து முன்னும் பின்னும் தொடர அவர்கள் பாக்தாத் பயணம் ஆரம்பமாயிற்று.]

[இடை வழியில் ஒரு பாலைவனத்தில் முகாம் அமைத்துத் தங்கினர். மாலினிக்கும் சித்ராவிற்கும் அமைக்கப்பட்ட பாடி வீட்டில் மாலினியும் சித்ராவும் தனிமையில்......]

மாலி.—சித்ரா! எப்படியும் முகமது காசியை பழிக்கப் பழி வாங்கவேண்டும்.

சித்ரா.—நான் இப்படிச் சொன்னதைத்தான் நீங்கள் கேட்கவில்லையே! அதன் விளைவு தான்......!

மாலி.—நடந்தவைகளைப் பற்றிப் பேசாதே...... இனி நடக்கவேண்டியதை....

சித்ரா.—அக்கா......அவனைப் பழிவாங்க என்ன செய்ய வேண்டும்?

மாலி.—நான் சொல்லும் எந்தச் செயலுக்கும் நீ உடன்பட்டாக வேண்டும். அப்போதுதான் ...... நாம் வெற்றியடைய முடியும்

சித்ரா.—அக்கா! மூத்தவர்கள் சொல்லை மீறும் அளவிற்கு எனக்குத் துணிவில்லை. அறிவிலும் மூத்தவர்களாகிய உங்கள் சொல்லை நிச்சயம் மீறமாட்டேன்.

மாலி.—அப்படி என்றால்......சித்ரா ஒன்று செய்.

சித்ரா.—என்ன அக்கா அது......?

மாலி.—முகமது காசிம் மீது நீ காதல் கொண்டு விட்டதாக நடிக்கவேண்டும்.

மொழி ஒரு மரம், சொற்கள் அதன் இலைகள்.

—பிரான்சு.

சித்ரா.—நடிப்பதுதானே அக்கா! நடிப்பு என் உடன் பிறந்ததாயிற்றே........!

பணி.—இளவரசியாரே! உணவருந்த வாருங்கள்.

[எதிர்பாராத விதமாக முகம்மது காசிம் அங்கு வருகிறான்.]

மாலி.—தளபதியாரே! வருக! வருக!

சித்ரா.—அக்கா அவரும் நல்ல சமயத்தில்தான் வந்திருக்கிறார்.

காசி.—எது வரவேற்பு அணை கடந்து இருக்கிறதே!

மாலி.—இனிமேல் எங்களுக்கு எல்லாம் நீங்கள் தானே; இந்த அகண்ட உலகத்தில் எங்களுக்கிருக்கும் ஒரே துணை உங்களைத் தவிர வேறு யார்?

காசி.—(மாலினியை நோக்கி) உணவருந்தி விட்டீர்களா?

சித்ரா.—இன்னும் இல்லை. தாங்களும் எங்களுடன் உணவருந்த வேண்டும். இது என் அன்பின் ஆணை.

காசி.—சித்ரா! உன்னுடைய ஆசையை நிறைவேற்றத்தான் வேண்டுமா...... ?

சித்ரா.—என்ன இப்படிச் சொல்கிறீர்கள்.. ....காசிம்! என்னுடைய ஆசையெல்லாம் நிராசையாகிவிடக்கூடாது.

காசி.—இதற்காக ஏன் இவ்வளவு பீடிகை. ஊம் ....வாருங்கள் உணவருந்துவோம்.

[பணிப்பெண் உணவுவட்டிக்க, மூவரும் உணவருந்துகிறார்கள். உணவு உண்ட பின்....]

சித்ரா.—காசிம்! இப்போதுதான் என்மனம் ஒரு நிலையில் இருக்கிறது, எவ்வளவு அழகாக வானத்தில் வட்ட நிலா காய்கிறது. தென்றலின் இனிமைதான் என்ன..? வாருங்களேன் அப்படித் தனிமையிற் சென்று....

காசி.—காத்திருக்கிறேன்....சித்ரா!

— திரை —

இயல் 7

[சித்ரா இயல்பாகச் சிரித்துக்கொண்டே அவனை அழைத்துக்கொண்டு தனிமையில் சென்றாள். நிர்மலமான நீலவானில் முழு நிலா ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. வெண்மணற் பரப்பில்....தண்சுனை அருகில் காசிமும் சித்ராவும் அருகருகே அமர்ந்து பேசுகின்றனர்.]

சித்ரா.—காசிம்!....நாம் பாக்தாத் நகரம் செல்ல இன்னும் எவ்வளவு நாட்களாகும்?

காசி.—இன்னும் மூன்று வாரங்களுக்கும் மேலாகலாம்....!

சித்ரா.—காசிம்! நான் உங்களைக் காதலிக்கிறேன்....

காசி.—நான் உங்களுக்குத் தகுதியுடையவன் அல்லவே....பட்டாளச் சக்ரவர்த்தி பார்த்தாலும் உன்சிரிப்பு—கட்டாணி முத்துக்குக் காலில் விழமாட்டார்களா? மேலும்.... எங்கள் நாட்டு மன்னனின் அந்தப்புரத்திற்கு சொந்தமான பதுமைகளாயிற்றேநீங்கள்!..

சித்ரா.—காசிம்....'நீ' என்றே உரிமையோடு சொல்லுங்கள்......அதுவே எனக்கு மணக்கும்....இனிக்கும்! எனக்கு உரியவர் நீங்கள்தான். உங்கள் மன்னனிடமே இதைக்கேட்கிறேன்....காசிம்! இந்த உலகத்தில் நீங்கள் இல்லையேல் நான் இல்லை.

காசி.—சித்ரா......இப்போதுதான் எனக்கு ஒரு எண்ணம் உதயமாகிறது......

சித்ரா.—என்ன காசிம் அது?

காசி.—நான் உங்கள் இருவரையும் அரண்மனை கொண்டு சேர்த்துவிட்டபின், மன்னனை அணுகி "மன்னவ! இந்தியப் படையெடுப்பின் வெற்றிச் சின்னமாக எனக்கு ஒரு பரிசு வேண்டுகிறேன்" எனக் கேட்கிறேன். "என்னவேண்டும் என்பார்" உன்னையே கேட்டுப் பெற்றுக்கொள்கிறேன்.

> இலட்சியம் இல்லாத மனிதன், திசையறி கருவி இல்லாத கப்பலை யொப்பான்.
>
> —ஆவ்பரி.

சித்ரா. நல்ல திட்டம் காசிம் !.

காசி.—உன்னைச் சந்தித்த முதல் நாளே........ 'என்னை உனக்குக் கொடுத்துவிட்டேன்—இனி உன்னை எனக்குக் கொடுத்துவிடு ' சித்ரா !

சித்ரா.—காசிம் ! ' இனி நீயும் நானும்—நேருக்கு நேர் தித்திக்கும் பாலும் தேனும் '.

காசி.—சித்ரா ! மது நிறைந்த வண்ணமலர் —வண்டை வாவென்று அழைக்காவிட்டாலும் மலர்மணம் சுமந்து தென்றல் தூது போகிறது......நீ எல்லோரையும் ஒதுக்கி விட்டு வாழ்ந்தாலும்....உன்னுடைய அழகும் இளமைப் பொலிவும்....இளம் உள்ளங்களிடையே தூது போகத்தான் செய்யும் சித்ரா ! நான்மட்டும் விதி விலக்கா என்ன..?

சித்ரா.—காசிம் ! எல்லோராலும் என்னைக் கவர்ந்து விடமுடியாது....தங்களிடம் ஏதோ ஒரு காந்த சக்தி இருக்கிறது....

காசி.—செம்மாதுளை உதட்டில் புன்னகையை வீசி —கயல் விழிகளில் காந்தப் பார்வையை மின்னவிட்டு—கதுப்புக் கன்னங்களில் கனி ரசத்தை வழிய விட்டு—நீ விரித்த காதல் வலையில் வீழ்ந்து விட்டேன். காக்க வேண்டியது உன் பொறுப்பு சித்ரா !......அருகில் வா....நெருங்கிவா....எனக்கு உள்ளக் குளிர்ச்சியை ஊட்டு....வா சித்ரா !.... வா !....

சித்ரா.—காதல் !..பாக்தாத் நகரம் சென்றபின் இன்பத்தைத் தேடலாம்.... என்னுடைய அக்கா காத்திருப்பார்கள்......விரைவிற் சென்றாகவேண்டும் !....

காசி.—என்ன சித்ரா !....வரைமட்டம் ஓங்கி வளர்ந்த என் ஆசையைத் தரை மட்டம் ஆக்கிவிட்டாயே !

> கடவுள் கதவை அடைத்தால் ஜன்னலைத் திறந்து விடுகிறார் !
>
> —இத்தாலி.

சித்ரா.—காசிம் நம் காதல் களவொழுக்கத திலேயே இருக்கட்டும்......கற்பொழுக்கத் திற்குத் தாவ வேண்டாம் என்கிறேன். இது தவறு....? வேறுபட்ட இரண்டுள்ளங்கள் ஒன்றிவிட்டது. ' உடலால் இருவர்—உள்ளத் தால் ஒருவர் ' என்ற நிலையெய்திவிட் டோம். இதுபோதும். இனி ' கத்திக்கும் நான் அஞ்சேன்—வேந்தன் காவலுக்கும் அஞ்சேன் ' காசிம் ! விரைவில் பாசறை அடைந்தாக வேண்டுமே..?

காசி.—பிறகு....உன்விருப்பம் !....

சித்ரா.—காசிம் ! வருகிறேன்......விரைவில் சந்திப்போம்....

[இருவரும் பாசறையை அடைகின்றனர். சித்ரா தன் பாடிவீட்டில் அக்காள் மாலினியிடம்....

மாலி.—சித்ரா ! முகமது காசிம் போய் விட்டானா ?

சித்ரா.—அக்கா ! அவன் என்னை முழுவதும் நம்பும்படி நடித்துவிட்டேன்..இனிமேல் முகமது காசிம் நாம் உருட்டி விடும் பொம்மை தான்.

மாலி.—பழிக்குப்பழி..ஆம்..முகமது காசிமின் தலை கீழே உருளவேண்டும்....அப்போது தான் அப்பாவின் ஆன்மா..என் உயிர்க் காதலன் ஜெய்வந்தின் ஆன்மா இரண்டும் சாந்தியடையும்..

சித்ரா.—இனிமேல் அவனை எதுவேண்டுமானாலும் செய்யலாம் அக்கா !

மாலி.—வஞ்சம் வெற்றி பெற்றே தீரும்....சரி சித்ரா ! படுக்கைக்குச் செல்வோம்..

— திரை —

இயல் 8

[நாட்கள் சில சென்றன. முகமது காசிம் தன் வீரர்கள் சிலரோடும் மாலினி, சித்ராவோடும் பாக்தாத் நகரம் அடைந்தான்.]

[அன்று முழுநிலா நாள். மாலினியும் சித்ராவும் ' டைக்ரீஸ் ' நதிக்கரையில் அமைந் திருந்த அரசனது மாளிகையில்—

விலையுயர்ந்த அணிமணிகள் பூண்டு—தந்தக் கட்டிலின்மேல் அமர்ந்திருக்கின்றனர். அப்போது சித்ரா....]

சித்ரா.—இங்குள்ள விலைமதிக்க முடியா முத்துக்கள் எல்லாம் நமக்குக் கிடைப்பதில்லையே, ஏன் அக்கா..?

மாலி.—இவைகளெல்லாம் தமிழ்நாட்டுக் கடல்களில் குளிக்கப்பட்ட முத்துக்கள்....இங்குள்ளோர்தமிழர்களுக்காக குதிரைகளைக்கொண்டு கொடுத்துவிட்டு—அதற்குப் பதிலாக விலையுயர்ந்த முத்துக்களும், மணிகளும், பூந்துகில்களும் வாங்கி வருகிறார்கள்.

சித்ரா.—ஏன் அக்கா அருகில் இருக்கும் நமக்கு இவைகள் எல்லாம் கிடைப்பதில்லை ?

மாலி.—தமிழர்கள் கடல் அடக்கி கப்பல் செலுத்துவதில் வல்லவர்கள். கடல் மூலமாகவே தங்கள் வாணிகத்தைப் பெருக்கி வளம் சேர்த்தவர்கள். மேலும்..அவர்களுக்கும் நமக்கும் அவ்வளவாக ஒற்றுமை நிலவவில்லை....

[இவ்வாறாக இவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும்போது — அரசன் காலிபா—வாலித் வந்தான். அதைக் கண்டு தங்கள் பேச்சை மாற்றிக் கொள்கின்றனர். அவனைக் கண்டும் காணாததுபோல வேறு பக்கம் திரும்பி பேச்சைத் தொடர்கின்றனர்]

ாலி.—'அவர்' ஏன் இன்னும் வரவில்லை. அவரின் குறும்புப் பேச்சு—நம்மையெல்லாம் கொள்ளை கொண்டுவிடவில்லையா சித்ரா !

சித்ரா.—[மன்னனைப்பார்த்து] அதோ....அவர். [பாதியிலேயே நிறுத்துகிறாள்....]

[நல்ல அத்தர் வாசனை அவ்வறை எங்கும் கமழ்ந்தது. மிக ஆடம்பரமான அலங்காரத்துடன் அவர்கள் எதிரே வந்து நின்றான் காலிபா—வாலித்.]

மாலி.—யார் நீங்கள்..? பெண்கள் தனித்திருக்கும்பாது....அனுமதியின்றி அறையில் நுழைகிறீர்களே !..

காலி.—எனக்கு உரியவர்கள்..நீங்கள் !

காலி.—நாவடக்கம் வேண்டும்......இதை, 'அவர்' அறிந்தால் உடன் உங்கள் தலையைக் கொய்வது அவர் கடனாக இருக்கும் !

காலி.—யார் அந்த அவர்..?

மாலி.—இந்நாட்டின் தளபதி—என் நாட்டை வெற்றிக்கொண்ட முகமது காசிம் !

சாலி.—என்ன உளறுகிறீர்கள்....?

மாலி.—நாங்கள் ஒன்றும் உளறவில்லை........ எங்கள் நாடு அவரால் சிறைபிடிக்கப்பட்டபோது பயந்து ஓடினோம் ! பின் அவரால் கைது செய்யப்பட்டோம். அவர் நல்லவர். எங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இதைப் பிறகே உணர்ந்தோம்.

[காலிபாவின் கண்கள் தீச்சுடர்போல் மாறியது.]

காலி.—என்னை உங்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. இதோ பாருங்கள் காசிம் அனுப்பியக் கடிதம்.

மாலி.—[காலிபா கொடுத்த கடிதத்தை வாங்கிப் படிக்கிறாள்].

மன்னர்—மன்னனுக்கு !

வணக்கம்.

இரு ராஜபுதன அழகுப் பெட்டகங்களை, தங்கள் அந்தப்புரத்தை அலங்கரிக்கவே அழைத்துவந்துள்ளேன். நேராக அவர்களை வசந்த மாளிகைக்கு அனுப்பியுள்ளேன். முழுமதி நாளன்று அவர்களைச் சந்திக்கலாம்.

தங்கள் உண்மைத் தளபதி
முகமது காசிம்.

சித்ரா.—ஹா......!

க்ாலி.—என்ன ஆச்சரியப்படுகிறாய் ?

சித்ரா.—எங்களை தங்களுக்குக் கொடுக்கவா அழைத்துவந்தார்..?

காலி.—இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது ?

சித்ரா.—ஏன் இல்லை ? பற்றற்று எதிலும் சுவை இல்லாது வாழ்ந்த நான்....அவரைக்

கண்டது முதல் ஒரு மாறுதல் அடைந்தேன். இருண்ட என் வாழ்வில் ஒளிவீசும் நிலவானுர் அவர். வசந்தத்தின் வரவால் துளிர்த்த பசுஞ்சோலேக்கிடையே—மலர்ந்த மலர்கள் நிரம்பிய பூஞ்சோலேயாக மாறியது என் வாழ்க்கை என நினேத்தேன். அவ்வளவும் பகற்கனவாயிற்ரு ? பார்வைக் குத் தட்டுப்படும் வரை குளிர்ச்சியேது மில்லாது வெம்மை வீசும் பாலேவனம்தாஞ என் வாழ்க்கை ?

[மயங்கி வீழ்பவள்போல் கீழே சாய்கிருள்.]

காலி.—என்ன......? காசிம் உங்களிடம் முறை தவறி நடந்துகொண்டாஞ ?

சித்ரா.—வேறு என்ன செய்யவேண்டும்! காதலிப்பதாகச் சொன்ஞர். கள்ளமற்ற வர் என்று வெள்ளே உள்ளத்தோடு நம்பி னேன். கணவன் மனேவியாகவே நடந்து கொண்டோம்.

காலி.—அயோக்யன்......நம்பிக்கைத் துரோகி ! .....இதோ வெட்டி வீழ்த்துகிறேன் அவனே ! ....

சித்ரா.—[அகமகிழ்வோடு] வேண்டவே வேண் டாம். இந்த உலகத்தில் எனக்கு இன்பம்—துன்பம் எல்லாமே அவர் தான் ! அவரை ஒன்றும் செய்யாதீர்கள் வாழ்வளியுங்கள் எனக்கு !

மாலி.—மன்னவ ! என் தங்கை சித்ராவிற்கு வாழ்வைக் கொடுங்கள் !..........அவள் வாழ்வு பட்டுவிடவும் எங்கள்குடி அடியோடு கெட்டுவிடவும் ஒன்றும் செய்துவிடாதீர்கள்.

காலி.—உங்கள் கண்ணெதிரிலேயே எல்லா வற்றையும் கண்டு களியுங்கள் !....[உரத்த குரலில்] யார் அங்கே....?

[மெய்க்காப்பாளன் உள்ளே வந்து]

மெ.கா.—மன்னவ ! ஆணேக்குக் காத்திருக்கி றேன்......

காலி.—துரோகத்தின் பிரதிபிம்பம் முகமது காசிமைக் கொன்று மாட்டுத்தோலில் தைத்து இங்கே கொண்டுவாருங்கள்....

மெ.கா.—முகமது காசிமுக்கா இந்தத் தண்டனே ?

காலி.—அயோக்யன் ! அவனுக்கு இதைக் காட்டிலும் கொடிய தண்டனே கொடுக்க வேண்டும். சிந்து இராஜ்யத்தில் சிறை பிடித்த இரண்டு அரசிளங் குமரிகளேக் கற்பழித்ததோடல்லாமல் அவர்களே எனக்குப் பரிசாக வேறு அனுப்பியிருக்கிருன். என்ன திமிர் அவனுக்கு ? தண்டனேயை உடனே நிறைவேற்றவேண்டும்.

[முகமது காசிமுக்குத் தண்டனேயை அளித்து விட்ட காலிபா தலே கவிழ்ந்த வண்ணம் ஒரு ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். ஆங்கே சுடுகாட்டு அமைதி நிலவியது. சிறிது நேரம் சென்றதும் இரண்டு சேவகர்கள் காசிமின் உயிரிழந்த சடலத்தைக் கொண்டுவருகின்றனர்].

சேவ.—மன்னவ ! ஆணேப்படியே இதோ கொண்டுவந்திருக்கிருேம்.

காலி.—[மாலினியையும் சித்ராவையும் காட்டி] இதோ இவர்கள் முன் உருட்டுங்கள்....

[மாலினி காசிமின் சடலத்தைக் கண்டு ஒரு பேய்ச் சிரிப்பு சிரிக்கிருள்.]

காலி.—சிரிப்பென்ன......?

மாலி.—நாங்கள் போட்ட திட்டம் இதோ நிறை வேறிவிட்டது......

காலி.—[ஆச்சரியத்தோடு] என்ன......?

மாலி.—ஆம் ! உங்கள் தளபதி எங்கள் தந் தையைக் கொன்ருர். எங்கள் தலேநகரைச் சூறையிட்டார். கோயில்களே இடித்தார். முகமது நபியின் கொள்கைகளேப் பரப்பும் முறை இதுதாஞ என்று கேட்டவர்களேக் கொன்று ஒழித்தார். நாங்கள் தப்பி யோடினேம். எங்கள் வேலேயாள் நரேந் திரன் செய்த துரோகத்தால் எங்களேக் கைது செய்தார். என் உயிர்க் காதலன் ஜெய்வந் என்பவரை என் கண் எதிரிலேயே கொலே செய்தார்.

காதல் கண்பார்வையை இழக்கச் செய் கிறது. கல்யாணம் அதைக் காப்பாற்றுகிறது.

—**பெரலீவியா.**

ஜெய்வந்தின் இறப்பு எனக்குமட்டுமல்ல பெரும் இழப்பு. தீஞ்சுவை நாட்டின் பூம்பொழிலில் எழில்களை இதயத்தே தேக்கி இன்பக் கவிதைகளாக வடித்து நாட்டு மக்களுக்கு நல்லுணர்வையூட்டிய அவ் விசைக் கலைஞனின் இறப்பு எங்கள் நாட்டிற்கே ஈடுசெய்யமுடியா பெரும் இழப்பாகும். இதற்கெல்லாம் வஞ்சம் தீர்க்கவே ஒரு முடிவு செய்தேன். என் தங்கை சித்ராவின் கையாலேயே அவனைக் கொல்ல காதல் நாடகமாடச் செய்தேன். அந்த அவசியமே எங்களுக்கில்லை. நாங்கள் சொன்னதை நீங்கள் நம்பினீர்கள். அவர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். எங்கள் வஞ்சம் தீர்ந்தது.

காலி.—இவ்வளவும் உங்கள் சூழ்ச்சியா ? ஆராயாமல், தீர விசாரியாமல் அவசர, புத்தியால் ஒரு சிறந்த தளபதியை உண்மை ஊழியனை இழந்துவிட்டேனே !

[காலிபா பேசிமுடிப்பதற்குள் ஒரு போர்வீரன் ஓடிவந்து]

போ.வீ.—மன்னவ ! சிந்து மாகாணத்தை மறு படியும் சிந்து சேனைப் பிடித்துக்கொண்ட தாம். நம்படைகள் திரும்புகின்றன. எல்லா நாடுகளுமே திரும்ப அவர்கள் கைக்கு மாறிவிட்டதாம் !

மாலி.—என் சூழ்ச்சியால் எங்கள் கற்பு பிழைத்தது. பெண்மையின் அரிய, உயரிய பண்பை உங்களால் அழித் தொழிக்க முடியவில்லை. பெண்மையின் முன் தலைகுனிந்து நிற்கிறீர்கள் , எங்கள் நாடும் பிழைத்துக்கொண்டது! 'அன்பு' அகிலத்தில் வெற்றிபெற்றே தீரும் ! எங்கள் வேலை இனித் தீர்ந்து விட்டது.

காலி.—உங்கள் இருவருக்கும் எவ்வளவு பெரிய தண்டனை விதிக்கிறேன் பாருங்கள்.

மாலி.—இதற்கு முன்பே நான் ஒரு முடிவு கட்டிவிட்டேன் ! நாங்கள் சாவுக்குப் பயந்த வர்கள் அல்ல. ஆனால் நிம்மதியான சாவு இன்றுதான் கிடைத்தது. நினைத் தாலே நெஞ்சம் புழுங்கும் வேதனைச் சம்பவங்கள் பலவற்றையும் நினைத்துக் கொண்டு இனியும் உயிர்வாழ எங்களுக்கு விருப்பமில்லை. எங்கள் உள்ளத்திலேயும், எங்கள் நாட்டு மக்கள் உள்ளத்திலேயும் பொங்கி எழுந்த வேதனை உணர்ச்சிகளை ஒரு முடிவிற்குக் கொண்டுவந்துவிட்டோம் !

தன் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டவ னிடத்தில், கொஞ்சி, குலவி—கிளிமொழி பேசி, நிறை இன்பத் தெள்ளமுதை வாரி வாரிப் பருகி, இல்லறத்தின்ஒளிவிளக்காய்ச் சுடர்விட வேண்டிய பருவத்தில்— நெஞ்சிலே கொண்ட சூளுரையைச் செயலிலே காட்ட, எங்களையே மறந்து, இறுதியில் கொண்ட சபதத்தை நிறை வேற்றிக் காட்டிய மறவர்குல திலகங்க ளாக இதோ மடியப்போகிறோம்.

சிந்து இராஜ்யத்தின் சரித்திரத்தை நினைக்கும் போதெல்லாம் எங்களின் எழிலுருவம் மக்களின் மனக்கண்முன் தோன்றாமலிருக்காது. சிந்து நாட்டின் புகழேட்டில் மாலினி, சித்ரா இருவரும் இடம் பெறத்தான் செய்வோம் ! இராசபுத்ர மங்கையர்களுக்கு உயிரைவிட மானம்தான் பெரிது! இதோ வருகிறோம் ! பெற்ற தாயும்—பிறந்த பொன்னாடும் வாழ்க !

[மாலினி தன் இடையில் ஒளித்து வைத்திருந்த உடைவாளால் சித்ரா வைக் குத்திவிட்டுத் தானும் குத்திக் கொண்டாள். சாவென்னும் 'புகழ முதை' இருவரும் வாரிக் குடித் தார்கள். 'இராஜபுதன மலர்கள்' இரண்டும் கருகிவிட்டன. இக்கோரமிக்க கொலைக் காட்சியைக் காணச் சகியாத காலிபா சாளரத்திற்கு வெளியே பார்வையைச் செலுத்தினான்]

— திரை —



நீரழிவு

குமாரி இந்திராணி

வெள்ளம் வரும் முன்பே அணை போடுபவன் அறிஞனா? அல்லது வெள்ளம் வந்த பின்பு அணை போடுபவன் அறிஞனா? வெள்ளம் வரும் முன்பே அணை போடுபவன் தானே அறிஞன். அதேபோன்று நீரழிவு நோய் வந்த பின்பு நிவிர்த்திக்க முயற்சிப்பவனை விட அந் நோய் வராமலேயே காப்பவன் எவ்வளவோ சிறந்தவன் அல்லவா!

பெரும்பாலானவர்களுக்கு இந்நோய் உண்ணும் உணவின் காரணமாகவே ஏற்படுகின்றது. ஒரு சிலருக்குத்தான் வம்ச பரம்பரை நோயாக ஏற்படுகின்றது. இந் நோய் பணத்தைப் பணம் எனப் பாராமல் பதறடிக்கச் செய்யும் மாபாதக நோய். நீடிய நாட்கள் வரை நிஷ்டூரப் படுத்தும் நிகரிலாக் கொடும் நோய். செல்வமாய் வளர்க்கப் பட்ட செல்லப் பிள்ளைகளையும் சீரழியச் செய்யும் கருணையில்லாக் கடும் நோய். மட்டில்லா மகிழ்ச்சியுடையான் மனதையும் பதை-பதைக்கச் செய்யும் பாதக நோய். தூக்கத்தைக் கெடுத்து துன்பத்தைக் கொடுக்கும் துணிகர நோய். உடலின் ஊக்கத்தைக் கெடுத்து உயர்வைத் தடுக்கும் உன்மத்த நோய். இந் நோய் சிங்காரச் சீமானா யிருந்தாலும் சீரழியச் செய்யும்; ஒய்யார வதனனா யிருந்தாலும் ஒடுக்கிவிடும். கவலைகள் கட்டிகள் பல—பல கொடுத்து கஷ்டப்படுத்தும் கடூரநோய்.

இந் நோயை ஆங்கிலத்தில் டயப்டீஸ் என்பர். இந் நீரழிவு நோய்க்கு மதுமேக நோய், நீர் நோய், குடிக்கும் நீரழிவு நோய் எனச் சில பெயர்கள் உண்டு.

நோய் வரக் காரணங்கள்.—இந் நோய் பாரதம், பர்மா, ஈழம் போன்ற நாடுகளில் மிகுதியாகப் பரவியிருக்கின்றது. பெண்களைப் போனறு ஆண்களில் இரு மடங்குப் பெருக்கு இருந்து வருகின்றது. பெண்களில் பெரும்பாலும் பத்து வயது முதல் பதினைந்து வயதிற்குள்ளும்; ஆண்களில் பெரும்பாலும் நாற்பது முதல் நாற்பத்தி ஐந்து வயதிற்குள்ளும் இந் நோய் உண்டாகின்றது.

பொதுவாக தேக உழைப்பின்றி இருக்கும் சோம்பேறிகட்கும், சர்க்கரையும் சர்க்கரையால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பலகாரங்களை உண்பவர்களுக்கும்; மதுபானங்களை விரும்பிக் குடிக்கும் குடிகாரர்களுக்கும்; ஸ்தூல தேக முடையவர்களுக்கும்; நரம்புக் குழாய்கள் சீர்கெட்டுப் போன இரத்த அசுத்த முடையவர்களுக்கும்; அதிக மாக மூளை வேலைசெய்யும் குமாஸ்தா, வக்கீல், எழுத்தர் போன்ற ஆராய்ச்சிகாரர்களுக்கும்; மனநிம்மதியற்ற மனவேதனைக்காரர்களுக்கும்; மிகுந்த கஷ்டங்களை அனுபவிப்பவர்களுக்கும்; மிதமிஞ்சிய பெண் சம்போகக்காரர்களுக்கும்; கல்லீரல் கெட்டுப்போனவர்களுக்கும் இந் நோய் உண்டாகின்றது.

நாம் சுகச் க்ஷேமமுடன் வாழ மூன்று விதமான சத்துள்ள உணவுப் பொருள்கள் தேவை. (1) கார்போஹைட்ரேட், (2) கொழுப்பு, (3) புரோட்டின். இந்த மூன்று வித உணவுப் பொருட்களின்றி வைட்டமின்கள், உப்புகள் தேவை. ஆனால் வைட்டமின்களினாலோ அல்லது உப்புக்

களிஞலோ மட்டும் உடல் வலிமை பெற்று விடுவதில்லை. உடல் வலிமை பெற கார்ப்போஹைட்ரேட், கொழுப்பு, புரோட்டின் போன்ற சத்துடைய உணவுப்பொருட்களே பிரதானமானவை. கார்போஹைட்ரேட்கள் அரிசி, உருளைக்கிழங்கு, கோதுமை, சர்க்கரையிலிருந்தும் ; கொழுப்பு எண்ணெ, பால், வெண்ணெ, நெய்யிலிருந்தும் ; புரோட்டின் பால், மோர், முட்டை, மாமிசத்திலிருந்தும் கிடைக்கின்றது.

மேலேகூறப்பட்ட சத்துள்ள உணவுப் பொருட்கள் ஜீரணிக்கப்பட்டு சத்துப் பொருட்கள் குடலிலிருந்து இரத்தத்துடன் கலக்கின்றது. ஆகையால் இரத்தத்தில் எப்போதும் சர்க்கரைப் பொருட்கள் இருந்துகொண்டே யிருக்கின்றது. நாம் சுறு-சுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கக் காரணம், இரத்தத்தில் சர்க்கரைப் பொருள்கள் கலந்திருப்பதேயாகும்.

நம்முடைய உடலில் உள்ள இரத்தம் பூராவிலும் எப்போதும் ஐந்து கிராம் சர்க்கரைப் பொருள் உண்டு. உடலின் இரத்தம் பூராவிலும் ஐந்து கிராம் சர்க்கரை பொருளுக்கு மிகுதியாக யிருப்பினும் சரியே ; குறைவாகயிருப்பினும் சரியே ; நிச்சயம் ஆரோக்கியம் கெடவே செய்யும். எப்போதும் ஐந்து கிராம் அளவு சர்க்கரைப் பொருள் போக மிகுதியை கிளைக்கோஜனாக மாற்றி ஈரல் சேர்த்து வைத்துக்கொள்ளுகின்றது. இரத்தத்தில் சர்க்கரைப் பொருள் குறையுங்கால் ஈரலில் சேகரிக்கப்பட்டுள்ள கிளைக்கோஜன் மறுபடியும் சர்க்கரையாக மாற்றப்பட்டு இரத்தத்துடன் கலக்க ஈரல் உதவி புரிந்து வருகின்றது. ஈரலானது கிளைக்கோஜனாகவுள் ளசத்தைச் சர்க்கரையாக மாற்றி இரத்தத்துக்கு உதவி புரியாவிடின் புதிதாக வரும் கார்ப் போஹைட்ரேட், கொழுப்பு மிக்க உணவுப் பொருட்களால் உடலுக்குப் பயனின்றிப் போய்விடும்.

ஈரலில் கிளைக்கோஜன் குறையுங்கால் கிட்டோன் என ஒரு சத்துப் பொருள் உற்பத்தியாகின்றது. இக் கிட்டோன் சர்க்கரைக்குச் சமானமான சக்தியை அளிக்கும் வல்லமையுடையது. இக் கிட்டோன் ஈரலில் அளவோடு உற்பத்தியாயின் நலம் ; மிகுதியாக உற்பத்தியாயின் மயக்கம் ; புத்திக் கோளாறு போன்ற கெடுதல்களை செய்யும். மேலேகூறப்பட்ட உணவுப் பொருளில் ஏற்படும் தொழில் முறை கோளாறினாலும் நீரழிவு நோய் உண்டாகின்றது. இந் நீரழிவு நோயிலும் இரண்டு வகையுண்டு. சிறு நீரில் சர்க்கரைப் பொருள்கள் கலந்துள்ளதை இனிபபு நீரழிவு என்றும் ; சிறு நீரில் சர்க்கரைப் பொருள் கலவாததை சுவையற்ற நீரழிவு எனவும் கூறுவர்.

நீரழிவு நோய் வரும் முன்பு காணப்படும் சில அறிகுறிகள்.—ஒரு நாளைக்கு ஒரு நாள் உடல் மெலிவுறும் ; சர்மம் வெளுக்கும், கால் கைகளில் சூடு உண்டாகி லேசாகக் காந்தல் அடிக்கும் ; கண் இமை லேசாக வெளுக்கும் ; தாகம் மிகுதியாகி நாக்கு உதடுகளில் வறட்சி உண்டாகும் ; நாளுக்கு நாள் உண்ணும் உணவின் அளவு குறையும்; சோம்பல் மிகுதியாகி இரவும் பகலும் நித்திரை வரும் ; வாயானது எப்போதும் புளிப்புச் சுவையுடனிருக்கும் ; கண்ணின் பார்வை கொஞ்சம் மங்கலாகும் ; சர்மத்தில் சாம்பல் பூத்து வெடித்துச் சொறி ஏற்படும் ; பல்லீறுகளிலிருந்து அடிக்கடி இரத்தம் கசியும் ; பல்லீறுகள் பலமற்று பற்கள் விழ ஆரம்பிக்கும் ; சிறு நீர் கழியுங்கால் நீர்த்தாரையின் வழியிலும், ஆண் குறியின் நுனிச் சதையிலும் லேசாக வலியும், பச-பசவென அரிப்பும் இருக்கும் ; சிறு நீர் கழிந்த இடத்தில் சிறு நீரில் வெண்ணிற நுரைகள் தோன்றும் ; பற்களின் வெண்மை நிறம் மாறி சாம்பல் பூத்தது போன்று அழுக்குப்படிய ஆரம்பிக்கும் (எப்படித் துலக்கினும் அழுக்கு நிறம் மாரு); நாவறட்சியுடன் வாயிலிருந்து துர்நாற்றம் அடிக்கும். இவைகள் யாவும் நீரழிவு எனும் நோய் வரும் முன்பு காணப்படும் அறிகுறிகள்.

நீரழிவு நோயில் சாதாரண நீரழிவு என்றும், பிரமேக நீரழிவு என்றும் இரண்டு வகைகள் உண்டு.

சாதாரண நீரழிவு நோயின் வகையும் குணமும்.—நீரழிவு வாதத்தில் மூன்றும் ; வாத பித்தத்தில் நான்கும் ; பித்தத்தில் மூன்றும் ; பித்த வாதத்தில் இரண்டும் ; சிலோத்துமத்தில் நான்கும் ; சிலோத்தும பித்தத்தில் இரண்டும் சிலோத்தும வாதத்தில் ஐந்தும் ஆக இருபத்தி மூன்று வகைகள் உண்டு.

1. வாத நீரழிவு மூன்றின் குணம்.—மூத்திரம் மாம்பூவின் வாசனையாக இருக்கும். சிலருக்குக் குங்குமப்பூவின் வாசனையாகவும், காடி நீரின் வாசனையாகவும் இருக்கும். சிறு நீரானது ருசியில் புளிப்பாயும், கைப்பாயும் இருக்கும்.

2. வாத பித்த நீரழிவு நான்கின் குணம்.—மூத்திரமானது அலரிப் பூவின் வாசனையாகவும், மஞ்சளின் வாசனையாகவும், பாலின் வாசனையாகவும் இருக்கும். சிறு நீரானது புலால் நாற்றம் அடிக்கும் சிறு நீரானது ஐந்து வகை ருசியுடனும், புளிப்பு, கைப்பு, கசப்பு ருசியுடனும் வசம்பைப் போன்ற ருசியுடனும், இருக்கும்.

3. பித்த நீரழிவு மூன்றின் குணம்.—சிறு நீரானது வெல்லம் கரைக்கப்பட்ட பானக நீர் வாசனையாகவும், மல்லிகைப் பூவின் வாசனையாகவும் இருக்கும். ருசியானது உப்பைப் போன்று கைப்பாயும், சிறிது காரமாயும் இருக்கும்.

4. பித்த வாத நீரழிவு இரண்டின் குணம்.—சிறு நீரானது பசுவின் கோமிய நீர் வாசனையாகவும், சந்தனத்தின் வாசனையாகவும் இருக்கும். ருசி சிலருக்குத் துவர்ப்பாயும், சிலருக்கு மிளகு போன்று காரமாயும் இருக்கும்.

5. சிலோத்தும நீரழிவு நான்கின் குணம்.—சிறு நீரானது தாழம் பூவின் நிறத்தைப் போன்றும், சாணத்தின் நிறத்தைப் போன்றும், இரத்தத்தின் நிறத்தைப் போன்றும், எலுமிச்சங் கனியின் நிறத்தைப் போன்றும் இருக்கும். ருசி வாசனையாகவும் இனிப்பாகவும், புளிப்பாகவுமிருக்கும். சிலருக்குச் சிறு நீரானது சுண்ணாம்பு நீரைப் போனற நிறத்துடனும், சுண்ணாம்பு நீரைப் போன்று கார ருசியுடையதாகவும் இருக்கும்.

6. சிலோத்தும வாத நீரழிவு ஐந்தின் குணம்.—சிறு நீர் மிக மிக நாற்றமாயும், ருசி புளிப்பாயிமிருக்கும்.

சாதாரண நீரழிவு நோயைப் போன்று பிரமேக நீரழிவினும் பற்பல வகைகளுண்டு. பிரமேக நீரழிவு வாதத்தில் நான்கும், பித்தத்தில் ஆறும் சிலோத்துமத்தில் பத்தும் ஆக இருபது வகையான பிரமேக நீரழிவு உண்டு.

1. வாதப் பிரமேக நீரழிவு நான்கின் குணம்.—சிறு நீரில் மூளையைப் போன்றும், இளம் நுங்கின் சதையைப் போன்றும், இறுகிய கெட்டியான சளியைப் போன்றும், முதிர்ந்த சுக்கிலத்தைப் போன்றும், நீளமான நரம்பு போன்றும் மிதக்கும். சிறு நீரானது கொழுப்பை உருக்கின நெய்யைப் போன்றும், நல்லெண்ணெயைப் போன்றும் வள-வளப்பாக வெளிப்படும். மூத்திரத்தில் நிறைய ஈக்கள் மொய்க்கும்.

2. பித்தப் பிரமேக நீரழிவு ஆறின் குணம்.—உடல் கடுக்கும், வலியுண்டாகும், நாக்குத் துவர்ப்பும்—புளிப்பும் கலந்த ருசி யுடையதாக இருக்கும், தலை சுற்றி இறு-இறுப்புண்டாகி அடிக்கடி மயக்கம் உண்டாகும். சிறு நீரானது மஞ்சள் நிறமாயும், சில சமயம் நீல நிறமாயும், கருப்பும், நீலமும் கலந்த நிறமாயும், சாம்பல் கரைந்த நீர் நிறமாயும், புலால் கழுவின நீர் நிறமாயும் வெளிப்படும். பொதுவாகப் பித்தப் பிரமேக நீரழிவுக்காரர்களுக்குச் சிறு நீர் மஞ்சளாகவே வெளிப்படும். இந் நீரைக் காய்ச்சி தீபம் எரிப்பின் தீபம் எரியும்.

3. சிலோத்தும பிரமேக நீரழிவு பத்தின் குணம்.—சிறு நீரானது கரும்பின் சாற்றைப் போலவும், மாவு கரைத்துள்ள நீரைப் போலவும், பன்னீரைப் போலவும், தயிர், பால் தண்ணீரைப் போலவும், சர்க்கரைப் பாகைப் போலவும், தேன் பாகைப் போலவும், எரிச்சல் மிகுந்து கடுகடுப்புடன் நீர்த்தாரையினின்றும் வெளிப்படும். இச் சிறு நீரில் நெய் போன்ற எண்ணெய்ப் பசை பளபளப்பாக மிதக்கும். பொதுவாகச் சிலோத்தும பிரமேக நீரிழிவு நீரானது நுரையுடன் வெளிப்படும். இச்சிறு நீரையும் பித்தப் பிரமேக நீரழிவு நீரைப் போன்று காய்ச்சித் திரியிட்டு தீபம் எரிக்கத் தீபம் எரியும்.

மேலேகூறப்பட்ட நாற்பத்திமூன்று வகை நீரழிவைப் போன்று இன்னும் பற்பல வகையான நீரழிவும் உண்டு.

1. ஜலப் பிரமேக நீரழிவின் குணம்.—சிறு நீரானது தேங்கி நிற்கும் சுனையின் நீரைப் போன்றும், பழங் கூரையினின்றும் விழும் மழை நீர்த்துளி போன்றும், வெல்லப் பானகத்தின்

நீரைப் போன்றும், கரும்பின் சாற்றைப் போன்றும் வெளிப்படும். இந் நோய்க்காரர்களுக்கு உடல் பூராவும் வலி எடுக்கும், மனம் பதை பதைக்கும். சில சமயங்களில் அறிவானது மந்தம், மயக்கமும் உண்டாகும். அடிக்கடிச் சிறுநீரானது பிரியும்.

2. சுப்பிரபிரமேக நீரழிவின் குணம்.—புதிதாகப் பெய்யும் மழை நீரைப் போன்றும், தேனைப் போன்றும் சிறு நீர் வெளிப்படும் சிறு நீரானது புலால் நாற்றம் அடிக்கும். பல்லின் நிறம் மாறி வாய் நாற்றம் அடிக்கும். இச் சிறு நீரைக் காய்ச்சின் தேன் போன்று இருக்கும். சிறு நீர் பிரியும் போது நீர்த் தாரையில் கொடிய வலியுண்டாகும்.

3. சுக்கிலப் பிரமேக நீரழிவின் குணம்.—சிறு நீர் பிரியும்போது கடைசியில் சுக்கிலம் போன்று வெண்மையாக விழும். இந் நோயாளியின் உடல் கறுப்பு நிறமாக மாறும்.

4. சீயக்காய் பிரமேக நீரழிவின் குணம்—சிறு நீரானது நார் நாராக வெளிப்படும். சீயக்காயின் வாடை இச் சிறு நீரில் இருக்கும்.

5. மலப் பிரமேக நீரழிவின் குணம்.—சிறு நீரானது மலத்தின் துர் வாடையை ஒத்திருக்கும்.

6. மருந்திட்டின் பேரில் காணும் நீரழிவின் குணம்.—சிறு நீரானது சுண்ணாம்பு கரைசலின் நீர் நிறமாயும், சுடலைச் சாம்பல் கரைசலின் நீர் நிறமாயும் வெளிப்படும். இவ்விரண்டு நீரையும் ஒன்றாகக் கலக்கின் எவ்வாடை வருமோ அவ்வாடை இந்நீரினின்றும் வரும்.

நீரழிவு நோயில் எப்படிப் பல வகைகள் உண்டோ அப்படியே சிறு நீரில் சர்க்கரைப் பொருள் கலந்திருப்பதாலும் பற்பல—நோய்கள் உண்டாகின்றன. சிறு நீரில் சர்க்கரைப் பொருள் கலந்திருப்பதால் ஏற்படும் நோய்களாவன.—

1. சர்ம நோய்கள்.—சொறி, சிறங்குக் கொப்பளங்கள் ராஜ பிளவைக் கட்டிகள், ஆறுது புரையோடி புரையோடிப் புடை வைக்கும், புண்கள் உண்டாகும்.

2. சுவாச் கோசத்தைப் பற்றியவைகள்.—க்ஷய ரோகம், மார்புச் சளி, இருமல், சுவாச கோசப் புண்கள், ஜுரங்கள் முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

3. இருதய நோய்கள்.—மார்படைப்பு (ஹார்ட்-பெயிலர்), இரத்தக் கொதிப்பு (பிளட்-பிரஸர்) உண்டாகும்.

4. குடல் வயிறு நோய்கள்.—அடிக்கடி வாயில் புண் உண்டாகும். தொண்டையிலும் புண் உண்டாகும். கிராணியை உற்பத்தி செய்து, வயிற்றுப் போக்கை உண்டாக்கும். சில சமயங்களில் அன்னத் துவேஷமும், வாந்தியும் கூட ஏற்படும்.

5. நரம்பின் வியாதிகள்.—பாரிச வாய்வு உண்டாகும், உள்ளங் காலில் குழிப்புண் உண்டாகும். காக்கை வலிப்புக்கூட உண்டாகும். உடம்பெல்லாம் வலியும், குத்தலும் ஏற்படும். கால் கைகளில் மத மதப்புக் கொடுக்கும்.

6. கண்ணைப் பற்றிய நோய்கள்.—'காடராக்ட்,' எனும் கடுர கண் வியாதி உண்டாகும். கண்ணின் பார்வை ஒரு நாளைக்கு ஒரு நாள் மங்கும். கண் கோவைப் பழம் போல சிவந்து பார்வையை மங்கச் செய்யும், 'நீர்-ரோக-காமா,' எனும் பயங்கரமான மயக்கமதைக் கொடுக்கும், 'நீர்-ரோக-காமா,' எனும் மயக்கம் வரும் முன்பு மூச்சுத் திணறல், பயம், மனச்சஞ்சலம், தலை பாரம், சிறு கிறுப்பு, மேல் வயிற்று வலி, வாந்தி, வயிற்றுப் போக்கு முதலியன சம்பவிக்கும் இந் நோய் உள்ளவர்களிடம் நெருங்கினல் ஒரு விதமான துர்வாடை வீசும். கடைசியாக மயக்கம் ஏற்பட்ட பின்பும் சுவாசம் வாங்கும், நாடி துரிதமாகத் துடிக்கும் சிறு நீர் இறங்குவது குறைந்து ஓரிரு தினங்களில் மரணம் ஏற்படும்.

சிறுநீரில் சர்க்கரைப் பொருள் உள்ளவர்கள் காயம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும், காயம் ஏற்படின் காயங்களோ, அல்லது அதனல் ஏற்படும் புண்களோ விரைவில் ஆறுவது இல்லை, புண்கள் விரைவில் ஆறுதவர்களுடைய சிறு நீரில் சர்க்கரைப் பொருள் மிகுதி எனத் தெரிந்து கொள்ளலாம்.

சின்னஞ் சிறு குழந்தைகட்கும் இந் நோய் பீடிக்கின்றது. குழந்தையின் உடல் நாளுக்கு நாள் இளைத்து மூன்று வயதிற்குள் மயக்கத்தினுலாவது, அள்ளு மாந்த ஜுரத்தினுலாவது மரணம் ஏற்படும்.

பெரியவர்களுக்கு இந் நோய் ஏற்பட்டால் அநேகமாக மயக்கத்தினுலாவது, சுவாச கோச க்ஷயத்தினுலாவது, சளி ஜுரத்தினுலாவது, மார்புச்சளி ஜுரத்தினுலாவது மூளையில் உள்ள இரத்தக் குழாய்கள் உடைந்து மரணம் சம்பவிக்கும். சிலருக்கு ஆறாத ரணங்கள உண்டாகி அழுகிக் கொண்டே போய் இறுதியில் இசிப்புச் ஜன்னியினுல் மரணம் சம்பவிக்கும், நீரழிவு நோய் கண்டவர்களில் பெரும்பாலோர் நீடிய நாட்கள் வரை பற்பல நோய்களால் அல்லற்பட்டு இறுதியில் மரணத்துக்கே ஆளாகி வருகின்றனர்,

இங்ஙனம் மனிதர்களைப் பீடிக்கும் இந்நீரழிவு நோய் விலங்குகட்கும், பறவைகட்கும் வருவதில்லையே! ஏன்? காரணங்கள் பலபல உணடு,

1. அவைகள் மலக்கட்டு ஏற்படாமல் அன்றாடம் மலம் கழிக்கின்றது.

2. பறவைகள் ஸ்நானம் செய்து வாழ்கின்றன.

3. சத்து மிகுதியான உணவுகளை உண்ணுகின்றது.

4. கருத்தரித்த பின்பு கலவி புரிவதில்லை,

5. மிருகங்கள் குட்டிகளுக்குப் பால் புகட்டும் வரை புணர்வதில்லை,

6. கருத்தரித்துள்ளதை அறிந்து கொள்ளும் அறிவு அவைகளுக்கு உண்டு,

7. அவ்வவ் வேளைக்கு வேண்டிய உணவை மட்டுமே உண்டு வருகின்றது, மித மிஞ்சிச் சேகரிப்பதோ உண்பதோ இல்லை.

8. ஓய்வு நேரததை இன்பமாகக் கழிக்கின்றது

9. பெரும்பாலும் பயமின்றி மனச் சந்தோஷமுடன் இருக்கின்றது.

நீரழிவு நோயாளிகட்குப் பகிரங்கமாகக் காணப்படும் ஒரு சில அறிகுறிகள்,

1. இந் நோயுள்ளவர்கள் நாள் ஒன்றுக்கு 120 முதல் 490 அவுன்ஸ் வரை சிறு நீர் கழிப்பர்.

2. மனோ பலமும், உடல் வலிமையும் நாளுக்கு நாள் குறையும்.

3. அளவுக்கு மீறிய நாவறட்சி தாகம் கொடுக்கும்.

4. சதா வாயில் துர் நாற்றமும், வீச்சமும் இருந்து கொண்டே இருக்கும்.

5. சதா கை கால்களில் எரிச்சலிருக்கும்.

6. மலச்சிக்கல் ஏற்படும். ஆனுல் பசி உண்டாகும்.

7. அயர்ந்த தூக்கம் வராது, தூக்கம் குறைவுபடும்.

8. ஒரு சிலருக்குக் கட்டிகள் உண்டாகும்.

நீரழிவுக் கட்டிகள் உண்டாகக் காரணம்.—நம்முடைய சர்மத்தில் மூவாயிரம் கண்ணுக்குத் தெரியாத சர்மத் துவாரங்கள் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் உண்டு. இத்துவாரங்களை நாம் ஒவ்வொன்ருக வரிசைக் கிரமமாக அடுக்கினுல் சுமார் பதிமூன்று மைல் நீளம் வரையிலும் அடுக்கலாம். இந் நோய்க்காரர்களுக்குச் சர்மத்தின் வேலை தடைப்படுவதால் அசுத்தப் பொருட்கள் சர்மத்தின் அடியில் தங்கி உறைந்து கட்டியாகப் புறப்படுகின்றது. நீரழிவுக் கட்டியுள்ளவர்கள் உண்ணு நோன்பு இருந்து, மருந்து உபயோகிக்க, விரைவில் குணமாகின்றது.

நீரழிவாகிய இக் கொடிய நோயை நிவர்த்திக்கும் வழிகள்.—பகவானை த் தொழுதும், மனதுக்குச் சந்துஷ்டியான எண்ணங்களை நினைத்தும், மனக்கவலையை நீக்கிக் கொள்ள வேண்டும், சந்தோஷகரமான எண்ணங்களால் இந் நோயின் வீரியம் குறைவுறும். சத்துமிக்க உணவுகளை உண்டு, சம்போகததை அறவே ஒழிக்கவேண்டும்.

சம்போகத்தால் மூலத்தில் உஷ்ணம் மிகுந்து மேகம் உண்டாகி, சிரசுவரை வெந்து நகி தாது கெட்டு, நாம்பின் பலம் குறைந்து இரத்தமும் கெட்டு, இரத்த நரம்புக் கெடுவதினுல் கல்லீரலும் கெட்டுப் போவதால் சர்க்கரைப் பொருள்களை ஜீரணிக்கும் சக்தியைக் கல்லீரல் இழப்பதால் நீரழிவு நோய் உண்டாகின்றது, ஆகவே பெண் சம்போகமும் கெடுதியே. மித மிஞ்சிய சர்க்கரைப் பொருட்களை உண்பதும் கெடுதியே,

எப்போதும் இரத்தத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வயிற்றையும் குடலையும் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அடிக்கடிச் சிறு நீர் வெளிப் படும் ஆகையால் அதைச் சரி செய்யப் போதுமான அளவு நீர் அருந்த வேண்டும், சர்க்கரைக்குப் பதிலாக 'குளுக்கோஸ்' உபயோகப்படுத்தலாம். இந் நோய்க்கு 'இன்சுலின்' எனும் மருந்தை ஊசி மூலம் செலுத்தியும் ஓரளவு நிவர்த்திக்க லாம்.

ஆவாரந்துள், கல் மதம், கொன்றைபட்டை, மிளகு இந் நான்கையும் சம அளவாகக் கலந்து நீர் விட்டு எட்டுக்கு ஒன்றாகக் காய்ச்சிக் கஷாயம் செய்து சாப்பிட்டு வர நீரழிவு சாந்தியாகும்.

நாவற் பட்டையை அரைத்துப் புன்னைக்காயின் அளவு பசுவின் பாலில் கலந்து ஐந்து நாட்கள் சாப்பிட ஓரளவு தணியும்.

அத்திப்பட்டை, ஆவாரம்பட்டை, சரக்கொன்றைப் பட்டை, மருதம் பட்டை ஆக இந் நான்கு பட் டைகளையும் சமன் எடையாக கலந்து நீர் விட்டு நாலுக் கொன்றாக காய்ச்சிக் கஷாயம் செய்தும் சாப்பிடலாம்,

கல், மண் இல்லாத சுத்தமான எள்ளை வெல் லம் சேர்த்து இடித்து, காலை மாலை இரு வேளை யும் எலுமிச்சம் பழத்தின் அளவு உட்கொண்டு வரவும். நீரைக் கட்டிக் கொள்ளின் நாட்டுச் சர்க்கரையைச் சாப்பிடவும், நாட்டுச் சர்க்கரை சாப்பிட நீர் தாராளமாக இறங்கும்.

இந் நோய்க்காரர்கள் சிற்றகத்தி இலையில் பசு வின் பால் கலந்து விட்டிடுத்துச் சாறு பிழிந்து அச் சாற்றுடன் நல்லெண்ணை விட்டுக் காய்ச்சி வாரம் இரு முறை அதிகாலையில் தலை முழுகி வர நல்லது.

இந் நோயை உடையவர்கள் கேழ்வரகு அல்லது கோதுமைக் கூழையோ அல்லது மேற்படி மாவி னால் தயாரிக்கப்பட்ட பலகாரங்களையோ புசித்து வரலாம், ருசிக்காக ,குளுக்கோஸ், பவுடரைச் சேர்த்துக்கொள்ளலாம். இது உடலை பாதிக்கும் ஒரு கொடிய வியாதியாகையால் இவ் வியாதி வந்த பின்பு தடுக்க முயற்சிப்பதைவிட வர விடாமல் எச்சரிக்கையாக இருப்பதே நல்லது.

கூடாது பெண்ணே !

(வித்வான் மு. கணேசன்)

பிறந்த வீட்டை மறந்து வெளியில்
திரியக் கூடாது
திறந்த வீட்டில் நாயைப் போல
புகவும் கூடாது
பெரிய இடத்தில் புகுந்த தனல்
பெருமை கூடாது
பெற்ற வயிறு எரிய எரிய
பணமும் கூடாது
வரவை மிஞ்சிய செலவுத் திட்டம்
வகுக்கக் கூடாது
வார்த்தைகளை அளந்து பேச
மறக்கக் கூடாது
நகைக்கு ஏங்கி புன் னகையை
பகைக்கக் கூடாது
பகைக்கு அஞ்சி பகுத் தறிவை
இழக்கக் கூடாது
குழந்தை முன்னே குடும்பச் சண்டை
நிகழ்த்தக் கூடாது
குடும்பச் சண்டையைக்குவ லயத்து
கூறக் கூடாது.

(421-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நிமிடம்! நான் நிலை குலைந்துவிட்டேன். என்னை நம்பி, எனக்காக வாழ்ந்து வரும் என் காதலி-என் மாமன் மகள்-விமலாவை நோக்கி னேன். படித்தவளல்லாமல், பண்பும் பரிவும் கொண்டவள் விமலா. அவளுள்ளத்திலே நடந்த போராட்டம் அவளுடைய முகத்திலே நிழ லாடிற்று. அவள் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். கடைசியில்—

கல்யாணியின் நல் வாழ்விற்காக தன்னுடைய காதலைத் தியாகம் செய்ய முன் வந்ததை, அந்தக் காதல் தெய்வம் கண்ஜாடையால் சொல்லியது.

மனதில் எந்தவிதமான சலனமில்லாமல், நிறைந்த உள்ளத்துடன், குனிந்து கல்யாணியின் தந்தக் கழுத்திலே மூன்று முடிச்சுகள் போட் டேன். மங்கல ஒலி எங்கும் நிறைந்தது.

மாதர் நல இலாகா

அன்பு சேவை

சங்கச் செய்திகள்

[1960-ம் ஆண்டு ஜூன்–ஜூலை மாதத்தை ஒட்டியவை.]

தஞ்சை மாவட்டம்

திருக்காட்டுப்பள்ளிக் கிளை

மாதர் நல அமைப்பாளரால் 112 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. 15 பேர்களுக்குச் சாதாரண வியாதிகளுக்கு மருந்து கொடுக்கப்பட்டது. மாதாந்திரக் கூட்டத்தில் "சத்துள்ள உணவு", "குழந்தை வளர்ப்பு", "கைக்குத்தல் அரிசியின் நன்மை" முதலியவை பற்றிப் பேசப்பட்டன. "மைதா மாவு அப்பமும்" "அப்பள பஜ்ஜி"-யும் செய்முறையாகச் செய்து காட்டப்பட்டன.

அங்கத்தினர்களால் ரூ. 18·66 மதிப்புள்ள பொருள்கள் செய்து தங்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டதில் ரூ. 4·25 கூலியை மிச்சப்படுத்தினர்.

தங்களுடைய சொந்தமான பொருள்களைக் கொண்டு பொருள்கள் தயாரித்துக் கொண்டதில் ரூ. 4·37 கூலியை மிச்சப்படுத்தினர். தையல் இயந்திரத்தில் தைத்ததால் ரூ. 6·43 கூலியை மிச்சப்படுத்தினர்.

குடிசைத் தொழிலான ஜவ்வரிசி வற்றல் போடுதலில் 9 அங்கத்தினர்கள் ரூ. 8·66 கூலியைப் பெற்றனர்.

18 அங்கத்தினர்கள் 419 சிட்டங்கள் நூற்றதில் ரூ. 73·55 கூலி அடைந்தனர். 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் தேதி மரம் நடு விழா கொண்டாடப்பட்டது.

திருப்புகலூர்க் கிளை

மாதர் நல அமைப்பாளரால் பார்வையிடப்பட்ட குடும்பங்கள் 140. "கர்ப்பிணிகளின் பாதுகாப்பு" என்பது பற்றிப் பேசப் பட்டது.—"ரவா கேஸரியும்" "ரவை உப்புமாவும்" செய் முறையாகச் செய்து காட்டப்பட்டன. அங்கத்தினர்களால் ரூ. 30·48 மதிப்புள்ள பொருள்கள் செய்யப்பட்டு ரூ. 5·11 கூலியைப் பெற்றனர். தையல் இயந்திரத்தில் தைத்தலால் ரூ. 5 கூலியை மிச்சப்படுத்தினர்.

குடிசைத் தொழிலான அப்பளம் போடுதலில் 15 பேர் ரூ. 19·67 மதிப்புள்ள 2,700 அப்பளம் போட்டதில் ரூ. 7 கூலியாகப் பெற்றனர்.

அங்கத்தினர்களால் 200 சிட்டங்கள் நூற்கப்பட்டு ரூ. 31·80 கூலியை அடைந்தனர்.

நூற்புச் சீட்டுச் சிட்டம் நான்கு தடவை குலுக்கப்பட்டது. நான்கு தடவையும் மொத்தமாக 500 சிட்டங்கள் நூற்றனர். இதற்கு ரூ. 54·60-க்குப் பஞ்சும், கைரொக்கமாக ரூ. 70·40-யும், ந.பையும் பெற்றுக்கொண்டனர். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாதிரிச் சங்கத்தில் பஜனை விமரிசையாக நடத்தப் பட்டது.

மர நடு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தஞ்சாவூர்க் கிளை

அமைப்பாளரால் 109 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. 3 குடும்பங்கள் குடும்ப நல விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன. 2 பெண்கள் பள்ளியில் தொடர்ந்து படிக்க உதவி செய்யப்பட்டது.

பல விதக் கைத்தொழில்களில் 50 அங்கத்தினர்கள் பங்கெடுத்துக்கொண்டதில் ரூ. 21·47-க்குப் பொருட்கள் செய்யப்பட்டுத் தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டதில் ரூ. 4·94 கூலியை மிச்சப்படுத்தினர். தையல் இயந்திரத்தில் தைத்ததால் ரூ. 3·90 கூலியை மிச்சப்படுத்தினர்.

50 சிட்டங்கள் நூற்கப்பட்டு ரூ. 6·68 கூலியாகப் பெற்றனர்.

மாதாந்திரக் கூட்டம் நடை பெற்ற போது "பண வீக்கமும் பொருட்களின் விலை உயர்வும்" என்பது பற்றிப் பேசப்பட்டது. "கதம்ப பக்கடா", "சேமியாக் கிச்சடி" செய் முறையாகச் செய்து காட்டப்பட்டன.

ரிசர்வ் போலீஸ் லைனில் இம்மாதக் கூட்டம் திருமதி. பார்வதி விஸ்வநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெண்கள் செய்யக்கூடிய "கூட்டுக் கைத் தொழில்கள்" என்பது பற்றிப் பேசப்பட்டது.

1960-ம் வருஷ ஜூலை மாதம் 8-ந் தேதி மர நடு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சரபோஜிராஜ மூங்கில் கீத்துக் கைத்தொழில் நிலையம்

சராசரியாக 13 பயிற்சியாளர்கள் (பெண்கள்) வந்தனர். மூங்கில் கூடைகள், தட்டுகள், மூங்கில் பாய்கள், கீத்து முதலியவைகள் பின்னப்பட்டன. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 0·75 கூலியாகக் கொடுக்கப்பட்டது.

	ரூ.	ந.பை.
வாங்கப்பட்ட கச்சாப் பொருள்களின் மதிப்பு.	120	21
உற்பத்தி (222 மூங்கில் பொருள்கள் 18 கீத்துகள்).	155	81
விற்பனை	172	59
கொடுக்கப்பட்ட கூலி	195	75

பண்டாரவாடை கைத்தொழில் நிலையம்

சராசரியாக 12 பயிற்சியாளர்கள் (பெண்கள்) ஆஜரானுர்கள். மூங்கில் கூடைகள், தட்டுகள், கீத்துகள் முதலியவைகள் பின்னப்பட்டன. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ஒரு நாளைக்கு ரூ. 0·75 கூலியாகக் கொடுக்கப்பட்டது.

	ரூ.	ந.பை.
வாங்கப்பட்ட கச்சாப் பொருள்கள் ..	43	45
உற்பத்தி	65	40
விற்பனை	55	
கொடுக்கப்பட்ட கூலி	161	62

சேலம் மாவட்டம்

நாமக்கல்

அமைப்பாளரால் 130 குடும்பங்கள் பார்வையிடப்பட்டு ஆவன செய்யப்பட்டன. சங்கம் 15 முறை ஒழுங்காக நடைபெற்றது. 1960-ம் வருஷ ஜூலை மாதம் 2-ம் தேதி அன்று மைதா மாவு பிஸ்கட்டும், 1960-ம் வருஷ ஜூலை மாதம் 11-ம் தேதி அன்று வாழைப்பழ பர்பியும் செய் முறையில் காட்டப்பட்டன. அங்கத்தினர்களால் செய்யப்பட்ட பொருட்கள் ரூ. 30-க்கு விலை போயின. "தாயின் கவனிப்பு", "பெண்கள் பொது சேவையில் கலந்து கொள்வதன் அவசியம்" ஆகிய பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றப்பட்டன. தம் துணிகளைத் தாமே தைத்துக்கொண்டதால் ரூ. 25 சேமித்ததுடன் வெளி ஆர்டர்களுக்குத் தைத்து ரூ. 20 கூலியும் பெறப்பட்டன. ஒரு பெண் பள்ளியில் சேர்க்கப்பட்டாள். ராஜாமணி என்ற அங்கத்தினருக்கு ஆசிரியை பயிற்சிக்கு சிபாரிசு செய்யப்பட்டு உத்திரவும் கிடைக்கச் செய்யப்பட்டது. காலனி சங்கத்தில் வன மஹோத்ஸவம் முறையாகக் கொண்டாடப்பட்டது.

திருச்செங்கோடு

அமைப்பாளரால் இம்மாதம் 150 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. மாதிரிச் சங்கம் வாரம் 4 முறையும், காலனி சங்கம் வாரம் 1 முறையும் ஒழுங்காக நடைபெற்றன. தினந்தோறும் சிறுவர் சிறுமியருக்குப் பால்வாடி வகுப்புகள் முறையே நடந்தன. வன மஹோத்சவம் தக்க முறையில் நடந்தேறியது. மருத்துவ உதவியாளரால் 30 கர்ப்பிணிகள், 5 பிரசவங்கள், சேய் ஈன்றதாய்கள் கவனிக்கப்பட்டனர். 40 பேர்களுக்கு மருத்துவ உதவியும் முதலுதவியும் அளிக்கப்பட்டன.

காவேரிப்பட்டினம்

தினசரி நடை முறை வகுப்பும் மாதாந்திரக் கூட்டமும் செவ்வனே நடை பெற்றன. கிளையில் செய்த பொருட்கள் ரூ. 65·23-க்கு விற்கப்பட்டு, ரூ. 17·08 கூலியும் அளிக்கப்பட்டது. வன மஹோத்ஸவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாதிரி கிளையில் தெலுங்கு வகுப்பு, ஒழுங்காக நடைபெற்று வருகிறது. 2 குடும்பங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. முன்னுதார வகுப்புகள் நன்றாக நடந்து வருகின்றன. காலனியில் கார சொய்யான் செய் முறையில் செய்து காண்பிக்கப்பட்டது. 126 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. "நூல் நிலையமும், பெண்களின் பங்கும்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றப்பட்டது. 2 வீட்டில், வீட்டு வைத்தியம் சொல்லப்பட்டது. வீட்டுத் தோட்டம் போட விதைகள் சேகரித்துக் கொடுக்கப்பட்டன. அங்கத்தினர்களால் குடிசைத்தொழில் மூலம் ரூ. 50·99 ஈட்டப்பட்டது. நூல் நூற்றல் மூலம் ரூ. 10–75 லாபமடைந்தனர். மருத்துவ உதவியாளரால் 15 பிரசவங்களும், குழந்தை ஈன்ற 28 தாய்மார்களும், 25 கர்ப்பிணிகளும் கவனிக்கப்பட்டனர். 95 நபர்கள் முதலுதவி பெற்றனர்.

தென் ஆர்க்காடு மாவட்டம்

அனந்தபுரம் கிளை

சங்கத்திற்கு வரும்

மாதிரிச் சங்கம்—21.

முன்னுதார வகுப்பு—31 பிள்ளைகள்.

முதியோர் கல்வி வகுப்பு—7.

அமைப்பாளரால் 133 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. நான்கு குடும்பங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. முதல் உதவியும், சிறு வியாதிச் சிகிச்சைக்கு மருந்தும் பெற்றுப் பயன் அடைந்தவர்கள் 110 பேர். இரண்டு பேர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுச் சுகம் அடைந்தனர். மூன்று முன்னுதார வகுப்புப் பிள்ளைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டனர்.

நான்கு அங்கத்தினர்கள் இலை தைத்தல் தொழில் மூலம் ரூ. 15-ம், நான்கு பேர் கைக்குத்து அரிசித் தொழில் மூலம் ரூ. 3-ம், 27 பேர் நூற்பின் மூலம் ரூ. 67·50-ம், இதர கைவேலைகள் மூலம் ரூ. 9·45-ம் கூலி பெற்றனர். தம் துணிகளைத் தாமே தைத்துக் கொண்டதின் மூலம் ரூ. 10 சேமித்தனர்.

ஹரிஜன நல தினம் கொண்டாடப்பட்டது. தினசரி பால் கரைத்து 480 பேருக்கு வழங்கப்பட்டது. கால் நடை, குழந்தை வளர்ப்பு, கைத்தொழில், மின்சாரம், ஒற்றுமை, சமையல் கலை, தீண்டாமை இவை பற்றிச் சொற் பொழிவு ஆற்றப்பட்டது.

அணையேரியிலும், தூத்திப்பட்டிலும் மாதர் சங்கம் நடை பெறுகிறது. இங்குள்ள அங்கத்தினர்கள் கை வேலைகள், நூற்பு இவற்றின் மூலம் ரூ. 39·75 கூலி பெற்றனர்.

மரியமங்கலம் கிளை

அமைப்பாளரால் 73 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. இரண்டு குடும்பங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சங்கத்திற்கு வரும் அங்கத்தினர் எண்ணிக்கை:—மாதிரி வகுப்பு 22, ஹரிஜன செண்டர், 18, முன்னுதார வகுப்பு 12. நூற்று எழு பேருக்கு மருத்துவ உதவியளிக்கப்பட்டது. ஐந்து பிரஸவங்கள் பார்க்கப்பட்டன. 50 கர்ப்பிணிகள், குழந்தை ஈன்ற 82 தாய்மார்கள் பார்வையிடப்பட்டனர்.

இரு அங்கத்தினர்கள் 10 சிட்டம் போட்டு ரூ. 1·50 கூலி பெற்றனர். இதர கை வேலைகள் மூலம் ரூ. 4·25 கூலி பெற்றனர். கைக்குத்து அரிசித் தொழில், குடிசைத் தொழி லாக ஆரம்பிக்கபபட்டு 11 அங்கத்தினர்கள் ஜூலை 4-ம் தேதி முதல் 15 தேதி வரை ரூ. 16·50 கூலி பெற்றனர்.

அமைப்பாளரால், மாதர் நல இலாகாவினால் பெண்கள் அடையும் நன்மைகள், கிராம முன்னேற்றம், குழந்தைகளைப் பராமரிக்கும் முறை என்பன பற்றிச் சொற்பொழிவாற்றப் பட்டன.

அஸிஸ் நகர்க் கிளை

அமைப்பாளரால் 120 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன. மூன்று குடும்பங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. முதல் உதவியும், சிறு வியாதிச் சிகிச்சைக்கு மருந்தும் பெற்றுப் பயன் அடைந்தவர்கள் ஐந்து பேர். பதினைந்து பேர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுச் சுகம் அடைந்தனர். முப்பத்து எழு முன்னுதார வகுப்புப் பிள்ளைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். ஒரு அங்கத்தினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி யிலும் ஒரு அங்கத்தினர் மருத்துவ உதவியாளர் பயிற்சி பெறவும் அனுப்பப்பட்டனர்.

சங்கத்திற்கு வரும் அங்கத்தினர் எண்ணிக்கை :—மாதிரிச் சங்கம் 22, முதியோர் கல்வி வகுப்பு 30, முன்னுதார வகுப்பு 30.

பத்து அங்கத்தினர்கள் குடிசைத் தொழில் மூலம் ரூ. 25·67 கூலி பெற்றனர். இதர கை வேலைகள் மூலம் ரூ. 19·34-ம், நூற்பின் மூலம் ரூ. 7.75-ம் அங்கத்தினர்கள் கூலி பெற்றனர். தம் துணிகளைத் தாமே தைத்துக்கொண்டதின் மூலம் ரூ. 14.96 சேமித்தனர்.

தினசரி பால் கரைத்து வழங்கப்பட்டது. ஹரிஜன நல தினம் கொண்டாடப்பட்டது.

தொழில் நிலையம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்ச் சின்னச் சேலம் அருகில் அம்மியகிரம் கிராமத்தில் இவ்விலாகாவின்கீழ் ஆரம்பித்துள்ள கம்பளி நெசவுப் பயிற்சி நிலையத்தில் மூன்றாவது பிரிவில் 10 அங்கத்தினர்கள் பயிற்சி பெறு கின்றனர்.

கோயம்புத்தூர் மாவட்டம்

கோவைக் கிளை

கோவையில் அமைப்பாளரால் 100 குடும்பங்கள் பார்வை யிடப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டன. அங்கத்தினர்கள் 100 சிட்டங்களை நூற்று ரூ. 11.25 கூலியாகப் பெற்றனர். ஆபீஸில் பை தைத்தல், லேஸ் பின்னுதல் முதலியவற்றின மூலம் ரூ. 17.50 ஊதியமாக அடைந்தனர். வெளி ஆர்டர்களின் மூலம் அங்கத்தினர்கள் அடைந்த ஊதியம் ரூ.62. ஆபீஸ் மிஷினை உபயோகித்து அங்கத்தினர்கள் அவரவர் துணிகளை அவர்களாகவே தைத்துக் கொள்வ தால் சேமித்த கூலி ரூ. 25. வைக்கோல் பொடி உபயோ கித்து சிக்கன முறையில் சமைத்தல் செய்முறையில் செய்து காட்டப்பட்டது.

மாதிரிச் சங்கம் நடக்கும் நேரத்தில் ½ மணி நேரம் சுமார் 35 அங்கத்தினர்களுக்கு நூற்புப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

10 தாய்மார்களுக்குக் குடும்பக் கட்டுபாடு பற்றிச் சொல்லப் பட்டது.

மேட்டுப்பாளையம்

மேட்டுப்பாளையத்தில் 150 குடும்பங்கள் அமைப்பாளரால் பார்வையிடப்பட்டன. 240 சிட்டங்கள் நூற்று அங்கத்தினர்கள் ரூ. 31.81 ஊதியம் பெற்றனர். லேஸ் பின்னுதல், பை தைத்தல் போன்ற கைவேலைகளில் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்ட கூலி ரூ. 14·25.

1960-ம் வருஷம் ஜூலை மாதம் 11-ம் தேதியன்று மாலை 3 மணிக்கு வன மஹோத்ஸவ விழா கொண்டாடப்பட்டது. அதற்கு ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் அவர்கள் தலைமை வகித்தார்கள். வன மஹோத்ஸவத்தின் முக்கியத்துவம் பற்றி பேசப்பட்டது. மேலும் கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்ச்சி களும் நடத்தப்பட்டன.

சோள முறுக்கும், கேழ்வரகு உப்புமாவும் செய் முறையில செய்து காட்டப்பட்டன.

இருபது அங்கத்தினர்கள் தங்கள் துணிகளை, ஆபீஸ் மிஷினை உபயோகித்துத் தாங்களே தைப்பதன் மூலம் ரூ. 15·69 சேமித்தனர்.

அவனாசி

அவனாசியில் 165 குடும்பங்கள் அமைப்பாளரால் பார்வை யிடப்பட்டன. 120 சிட்டங்களை நூற்று ரூ. 30 அங்கத்தினர்கள் கூலியாக அடைந்தனர். கைத்தொழில்களின் மூலம் ரூ. 15 ஊதியமடைந்தனர்.

கோதுமை அப்பளமும், பயோரியா பல் பொடியும் செய் முறையில் செய்து காட்டப்பட்டன.

1960-ம் வருஷம் ஜூலை மாதம், 7-ம் தேதியில் வன மஹோத்ஸவ விழா கொண்டாடப்பட்டது. திருமதி பாக்கியவதி அம்மையார் அவர்களின் தலைமையில் விழா சிறப்புற நடைபெற்றது. மாதர் சங்கத்திலும், அலுவலகத் திலும் பூவரசும், வேப்பங்கன்றும் நடப்பட்டன. அங்கத் தினர்கள் அவரவர் வீடுகளிலும் செடிகளை நட்டனர். அன்று அங்கத்தினர்களுக்குத் தேநீர் விருந்து ஒன்று வைக்கப்பட்டது.

உடுமலைப் பேட்டைக் கிளை

உடுமலைப்பேட்டையில் 158 குடும்பங்கள் அமைப்பாளரால் பார்வையிடப்பட்டன. ரூ. 75 மதிப்புள்ள 300 சிட்டங்களை அங்கத்தினர்கள் நூற்று ரூ. 58 ஊதிய மடைந்தனர். ஆபீஸ் மூலம் ரூ. 5.21 ஊதியம் பெற்றனர்.

சுண்டலும், பொங்கலும், செய்முறையில் செய்து காட்டப் பட்டன.

1960-ம் வருஷம், ஜூலை மாதம், 11-ம் தேதியில் ஸ்ரீமதி தங்கம்மாள் தலைமையில் "மரம் நடு விழா" கொண் டாடப்பட்டது. ஸ்ரீமதி லக்ஷ்மிகாந்தம் அவர்கள் மரம் நட்டனர். அங்கத்தினர்கள் தம் வீடுகளில் மரங்களை நட்டு வளர்க்கும் படிக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பின் தேசிய கீதத்துடன் விழா இனிது முடிவடைந்தது.

குடிசைத் தொழில் பயிற்சி நிலையங்கள்

ஹாசனூர்

ஹாசனூரில் ரூ. 23·75 ந.பை. பெறுமான மூங்கில்கள் பயிற்சியாளருக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் ரூ. 41·02 பெறுமானமுள்ள பொருள்கள் மலை ஜாதிப் பெண் களால் செய்யப்பட்டன. ரூ. 88·76 விலை மதிப்புள்ள பொருள்கள் விற்கப்பட்டன. ரூ. 150·75 ந.பை. அவர்களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டது.

தோலாம் பாளையம்

தோலாம்பாளையம் சங்கத்தில் 14 இருளர் பெண்கள் தற் பொழுது மூங்கில் தொழிலில் பயிற்சி பெறுகின்றனர். அவர்கள் வேலையில் மிகவும் உற்சாகம் கொண்டு கற்றுக் கொள்கின்றனர். ரூ. 144·75 ந.பை. அவர்களுக்கு ஊதிய மாக அளிக்கப்பட்டது.

"Hay Box" தயாரிக்கும் முறை

உபயோகம்

வைக்கோல் பெட்டியானது பதார்த்தங்களை முழுவதும் மாவு வேகும்வரை அடுப்பிலேயே வைத்து விறகுக்காக அதிகச் செலவு செய்வதைத் தடுத்து, சிக்கன முறையைக் கையாள ஏற்ற வழிகாட்டியாக உள்ளது.

பதார்த்தங்களை அளவான தண்ணீர்விட்டு, பாதி வெந்ததும் தகுந்த பாத்திரத்தினால் (மூடியால்) மூடி, தயார் செய்து வைத்துள்ள வைக்கோல் பெட்டியில் வைத்து நன்றாக மூடி விடுவோமானால், பதார்த்தம் நன்றாக வெந்து, தீய்ந்து போகாமல், நாம் சாப்பிட எடுக்கும் வரை சூடாகவே இருக்கும்.

பெட்டி தயாரிக்கும் முறை

ஒரு மரப் பெட்டியை எடுத்துக்கொண்டு அதில் ஆறு அங்குல உயரத்திற்கு உமியைப் போட்டுப் பரப்ப வேண்டும். பின் அதற்கு மேல் வைக்கோலைப் போடவும். அதாவது வைக்கப்படும் பாத்திரம் இடம் தவிர மற்ற இடங்கள் அதாவது பாத்திரத்தைச் சுற்றினும் இருக்கும்படியாக பரப்பவும். பெட்டியின் அளவிற்கு சாக்குப் பை எடுத்து அதில் வைக் கோலை நிரப்பித் தலையணை போல் தைத்து விடவும். பதார்த்தம் போட்டு வேக வைத்து, பாத்திரத்தை நன்றாக மூடி எடுத்துப் பெட்டியின் மத்தியில் வைத்து மேலே வைக்கோல் மூட்டையை வைத்து உள்ளே காற்றுப் புகாமல், மூடி இருந்தால் மூடிவைக்கலாம்.

நீலகிரி மாவட்டம்

குன்னூர்க் கிளை

(1) பார்வையிடப்பட்ட குடும்பங்கள்—237.

(2) கொடுக்கப்பட்ட மொத்தக் கூலி—ரூ. 42·37.

(3) முடிக்கப்பட்ட நூற் சுருள்கள் —ரூ. 230.

(4) மாற்றப்பட்ட நூற் சுருள்களின் மதிப்பு—ரூ. 57·50.

(5) குலாப்ஜான், மரவள்ளிக் கிழங்கு, உப்புமா முதலியன செய்முறை செய்து காட்டப்பட்டன.

பூர்த்தியான பொருள்கள்

உல்லன் பனியன்கள்—32.

ரவிக்கைகள்—16.

பாவாடைகள்—8.

கவுன்கள்—10.

